உதயன்


www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 005 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 16 சனிக்கிழமை (01/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00




# மாணவர்களுக்கு ஆதரவாக நேற்று பல்கலை ஆசிரியர்கள் போராட்டம்

## தாக்குதல் நடத்தியமை பெருந்தவறு என்றும் கண்டனம்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 1

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்மீது படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு முன்பாக முற்பகல் 11 மணியளவில் கூடியபல்கலைக்கழக ஆசிரியர்கள் கைகளில் பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விடுதிகளுக்குள் அத்துமீறிநுழைந்தமை, மாணவர்கள் மீதான படையினரின் தாக்குதல் என்பன பெருந்தவறு என்றும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது குறிப்பிட்டனர்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொடர்ந்து இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பர் என்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று கலைப்

பார்க்க பக்கம் 4

### மாணவர் துன்புறுத்தல்; நிறுத்துமாறு நல்லை ஆதீனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சட்டத்தைப் பேண வேண்டியவர்களால் துன்புறுத்தப்படுவதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

பார்க்க பக்கம் 4

## பல்கலை மாணவருடன் ஆசிரியரும் இனி மாவீரர் தினம் கடைப்பிடிப்பர்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.1

மாவீரர் தினம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு என்பவற்றை எதிர்காலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் இணைந்து தாமும் அனுஷ்டிப்பது என்று ஆசிரியர்கள் நேற்றுத் தீர்மானித்தனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் ஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர். இராசகுமாரன் தெரிவித்தார்.

மாவீரர் நாளன்று மாணவர்கள் நினைவு நிகழ்வுகளை மேற்கொண்டபோது படையினரும் பொலிஸாரும் மாணவர் விடுதியினுள் நுழைந்து அட்டகாசம் புரிந்தனர். மாறுநாள் மாணவர் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதும் மாணவர்களைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் நேற்று கூட்டம் ஒன்றை நடத்தினர். இதில் இந்த விடயம் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

மாவீரர்நாள் நிகழ்வு, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்

பார்க்க பக்கம் 4

# பலஸ்தீனம் தனி நாடு

## ஐ.நா. அங்கீகாரம்

நியூயோர்க், டிசெ. 1

பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கக் கோரும் பிரேரணை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது.

மொத்தமுள்ள 193 உறுப்பு நாடுகளில் இந்தியா உட்பட, 138 நாடுகள் பலஸ்தீனத்தின் இறையாண்மையை அங்கீகரித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், டென்மார்க், சுவிற்ஸர்லாந்து, போர்த்துக்கல் உள்ளிட்ட நாடுகளும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

1967ஆம் ஆண்டுக்கு முந்தைய எல்லைகளுடன் தங்

பார்க்க பக்கம் 4

# வடக்கில் ஜனநாயகமற்ற சூழல்

### ஐ.நா. அதிகாரிகளிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.1

வடமாகாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பை மேலும் விரிவுபடுத்துவதற்காக அரசினால் பல்லாயிரம் கோடி பணம் செலவு செய்யப்படுகின்றது. இதன் மூலம் ஜனநாயகமற்ற சூழல் வடக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள மோசமான அடக்குமுறையும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உயர் அதிகாரி யங்வான் பொபி லீயிடம் சுட்டிக் காட்டினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஐ.நா. அதிகாரிகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்

பார்க்க பக்கம் 4

## பல்கலை மாணவர் ஒன்றியச் செயலாளர் நள்ளிரவில் கைது

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரான ப.தர்ஷானந் (வயது-24) நேற்று நள்ளிரவு கோப்பாய் பொலிஸாரால் வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்று அவரது தாயார் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர்

பார்க்க பக்கம் 4

### மாணவி கடத்தல்; 3 நபர்கள் கைது

மன்னார், டிசெ.1

மன்னாரில் 15 வயது மாணவியைக் கடத்திய குற்றச்சாட்டில் கும்பல் ஒன்று நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது. மாணவி மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று மன்னார் சித்தி விநாயகர் பாடசாலையில் தவணைப் பரீட்சை முடித்து குறித்த மாணவி வீடு திரும்

பார்க்க பக்கம் 4

## 'உதயன்' ஆசிரியரைத் தாக்கியோர் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.1

'உதயன்' ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், ஊடகங்களுக்கு எதிராக இரும்புக்கரம் நீளுவது தடுக்கப்படவேண்டும் என்றும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் சுந்தர நிறைந்த ... வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் ... தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'உதயன்' பத்திரிகை ஆசிரியர் தமது கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தாக்கப்பட்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வு விடயத்தில் நேர்மை வேண்டும்

### சர்வதேசத்தை அரசு மதியாமை நல்லதல்ல என சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.1

''இலங்கை நிலைமை தொடர்பில் சர்வதேசம் முன்வைக்கும் கருத்துகளை இலங்கை அரசு தொடர்ந்தும் நிராகரித்து வருவது இலங்கையின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. இது பெரும் ஆபத்தை நாட்டுக்கு ஏற்படுத்தும். போலி கௌரவத்தை விடுத்து பொறுப்புக் கூறும் விடயத்திலும், அரசியல்தீர்வு விடயத்திலும் அரசு நேர்மையாகச் செயற்படவேண்டும்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை

பார்க்க பக்கம் 4

# நீதித்துறைச் சுயாதீனத்தை ஒழிக்க அரசுடன் இணைந்துள்ளார் ரணில்

கொழும்பு, டிசெ.1

''உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதனூடாக நீதித்துறை சுயாதீனத்தை இல்லாதொழிக்கும் ஆளுந்தரப்பின் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்காளராகியுள்ளார்.''

- இவ்வாறு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''எவரும் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அந்த வழக்கை நீதின்றம் விசாரணை செய்யவும் முடியும். ஆனால், எமக்கு (நாடாளுமன்றத்துக்கு) எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டாம். எமக்கு (நாடாளுமன்றத்துக்கு) அழைப்பாணை அனுப்பவும் வேண்டாம்'' என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று (நேற்று முன்தினம்) நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார்.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்யும் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பிரதிநிதிகளைப் பிரதிவாதிகளாக்கி உயர்நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மேற்படி நிலைப்பாடானது, அரசின் தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடியதாகவே அமைந்துள்ளது என்பது வெளிப்படையாகியுள்ளது. எனவே, அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரத்தினூடாக நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது இரகசியமல்ல. அரசுக்கு அவசியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்க்கட்சியில் தெரிவான நாடாளுமன்ற அங்கத்தவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தீர்மானமிக்கதான தீர்மானம் அளிக்கும் நிறைவேற்றதிகாரத்தின் எண்ணம், தேவைப்பாட்டுக்குத் தமது சொந்த விருப்பத்தின் பேரில் அடிபணிந்து அதற்கு முக்கியத்துவமளிக்கும் நடைமுறைகளைக் கடந்த பல வருட காலமாக ஐ.தே.க. தலைவர் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற அங்கத்தவர்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களே நீதிபதிகளாக மாறி நாடாளுமன்றத்தினூடாகத் தண்டனைகள் வழங்கப்படுகின்ற முறைமை சாதாரணமானது எனக்காட்ட ரணில் விக்கிரமசிங்க முன்வருவது அருவருக்கத்தக்கதாகும்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையானது நாட்டின் நீதித்துறை சுயாதீனத்துக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இதனை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கக்கூடத் தகுதி இல்லாதவராகத் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார். அத்துடன், அவர் இதுவரை காலமும் நடந்துகொண்ட விதங்களை அவதானிக்கும் போது இது தொடர்பில் அவருக்கு எந்தத் தேவைப்பாடும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பெரும்பான்மையானவராக இருக்கின்ற ஆளுந்தரப்பினரின் நோக்கம் வெற்றியடைவதை ரணில் விக்கிரமசிங்கநேரடியாக விரும்புகிறார் என்பதும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தினூடாகத் தெரியவருகின்றது - என்றுள்ளது. (த-சி)

## ஐ.தே.கவின் எம்.பிக்களின் பாதுகாப்பு ஊழியர்கள் ஆயுதம் ஏந்தத் தடை ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 33 பேரின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஊழியர்கள் இன்று நிராயுத பாணிகளாக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றில் முறைப்பாடு செய்தனர்.

இதற்கு உத்தரவிட்டவர்கள் யார் என்பதையும் இதற்குப் பின்னால் உள்ள சதித்திட்டம் என்ன என்பதையும் விசாரித்துக் கண்டறியவேண்டும் என்று அவர்கள் பிரதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

தயாசிறி ஜயசேகரவே இந்தப் பிரச்சினையை நேற்றுக் கிளப்பினார். தனது பாதுகாப்பு ஊழியர்கள் இரண்டு பேர் ஆயுதம் ஏந்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளன. இதனால் எனது பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

நான் பல கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியுள்ளது. எனது பாதுகாப்பு ஊழியர்கள் ஆயுதம் ஏந்துவதற்குத் தடைவிதித்தவர் யார்? இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 42 பேர் உள்ளனர். அவர்களுள் 33 பேரின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஊழியர்களே இவ்வாறு ஆயுதம் ஏந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளன. ஏன் இவ்வாறு செய்யப்பட்டது? யார் இதைச் செய்தது?

பொலிஸ் மா அதிபர் இது தொடர்பில் விளக்கம் தர வேண்டும். பொலிஸார் ஆயுதம் இல்லாமல் பாதுகாப்பு வழங்கி என்ன பிரயோசனம் என்று புத்திக பத்திரண கூறினார்.

இதற்குப் பின்னால் உள்ள சதித்திட்டம் பற்றித் தேடிப்பார்க்கவேண்டும் என்று ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதிச் சபாநாயகரிடம் கோரினார். (த-சி)

## கிண்ணியாவில்பெண் கொலை

கிண்ணியா ஆலங்கேணிப் பகுதியில் பெண்ணொருவர் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை நேற்று முன்தினம் இரவு (2012.11.29) இடம்பெற்றுள்ளது என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் ஆலங்கேணியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான கந்தையா செல்லம்மா (வயது - 77) எனக்கூறப்படுகின்றது.

தலையில் பலத்த காயங்களுடன் காணப்படும் இவரின் சடலத்தின் அருகில் இரத்தக்கறை படிந்த சாரம், துவாய் என்பனவும் தடயங்களாகக் காணப்படுகின்றன எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட பெண் தனி வீட்டிலே தனியாக வசித்து வந்ததுடன், அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளதோடு, வீட்டின் அலுமாரி மற்றும் பொருள்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களும் கொலையாளியால் சேதமாக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே இப்பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு தாயும், மகளும் எரியூட்டப்பட்ட நிலையில் கொலைசெய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது. (த-சி)

## பஸ் சேவை

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான 784 ஆம் இலக்க பாதையூடான பஸ் சேவை இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆ.அஸ்வர் அறிவித்துள்ளார்.

தினமும் காலை 5 மணிக்கு காரைநகர் துறைமுகத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த பஸ் சேவை காரைநகர் மேற்கு வீதி, வலந்தலை, பொன்னாலை, வட்டுக்கோட்டைச் சந்தி, செட்டியார் மடம் ஊடாக யாழ். பேருந்து நிலையத்தை வந்தடையவுள்ளது.

இரவு 8 மணிக்கு இறுதிச் சேவையாக யாழ். பஸ் நிலையத்திலிருந்து அதே பாதையூடாக காரைநகரை சென்றடையும். (ந-16)

## குற்றப் பிரேரணைக்கு எதிரான மனுக்களை விசாரிப்பதற்கு முடிவு

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசமைப்பின் 107 (3) ஆம் விதந்துரைக்கமைய முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணை செய்யும் விதம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட ஏழு மனுக்களை எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்திருக்கிறது.

நிமல் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன், பிரியசாத் டெப் ஆகிய நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

இந்தத் தீர்மானம் குறித்து நாடாளுமன்ற சபாநாயகர் மற்றும் குற்றப் பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்றம் பதிவாளருக்கு உத்தரவிட்டது.

உயர்நீதிமன்றமானது இலங்கையின் அரசமைப்புக்கேற்பவே செயற்படுவதாக நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க நேற்று மன்றில் அழுத்தமாகத் தெரிவித்தார். எழுத்துமூல விளக்கங்களை அளிக்க மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஒருவார கால அவகாசம் இருப்பதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மனுக்கள் தொடர்பில் சபாநாயகர் மற்றும் குற்றப் பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தபோதும் அவர்களோ அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவருமோ நேற்று மன்றில் முற்பட்டிருக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பை விடுத்து கருத்து வெளியிட்டிருந்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தின் மீதோ சபாநாயகரால் நியமிக்கப்பட்ட குழுவின் மீதோ எந்த ஒரு வெளிநிறுவனமும் அதிகாரம் செலுத்த முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் உயர்நீதிமன்றம் தனது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது. நீதிமன்றத்தின் தீர்மானத்தையடுத்து, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்ற அதிகாரம், நீதித்துறை என்பவற்றுக்கிடையில் முரண்பாட்டு நிலைமை மேலும் தீவிரமடையலாமென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### தாக்கப்பட்ட மாணவர்களின்

## சட்ட வைத்தியப் படிவத்தை பொலிஸார் சமர்ப்பிக்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.1

சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் குறித்துப் பொலிஸாரினால் எனக்குச் சட்ட வைத்தியப் படிவம் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே, யாழ். பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்ல முடியும் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 28 ஆம் திகதி மாணவர்கள் மீது படையினர் நடத்தியதாக்குதலில் காயமடைந்த மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் வைத்தியசாலையில் வைத்துப் புலனாய்வுப்பிரிவினர் அவர்களைக் கடுமையாக மிரட்டியதால் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

குறித்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சட்ட வைத்திய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனரா என்று சட்ட வைத்திய அதிகாரியிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

4 மாணவர்களை இராணுவத்தினரும்-பொலிஸாரும் தாக்கியதாக கூறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களைப் பொலிஸார் பார்வையிட்டு சட்ட வைத்தியப் படிவம் வழங்கினால் மாத்திரமே, நான் அவர்களைப் பரிசோதித்து சட்ட வைத்திய அறிக்கை சமர்ப்பிக்க முடியும். ஆனால் எனக்குப் பொலிஸாரால் எந்தவொரு படிவமும் வழங்கப்படவில்லை.

சிகிச்சை முடிவடைந்து மாணவர்கள் 24 ஆம் விடுதியில் இருப்பதாகவும் அவர்களை வந்து பார்வையிடும்படியும், மாணவர்களின் உறவினர்கள் என்னிடம் கோரினர்.

அதற்கமைய விடுதிக்குச் சென்ற நான் தலைமாட்டும் சிட்டை (BHT) ஆய்வு செய்தபோது, பொலிஸார் இவர்களைப் பார்வையிடவில்லை என்று அறிந்தேன். அதன் பின்னர் நான் திரும்பிச் சென்றேன். இதனை உத்தியோக பூர்வமாகக் கொள்ளமுடியாது.

மாணவர்கள் மீண்டும் சட்டநடவடிக்கை எடுக்க முற்பட்டால் சட்ட வைத்திய அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும், நான் மாணவர்களை மீண்டும் பரிசோதிக்க வேண்டும். அத்துடன் எனது உத்தியோகபூர்வமற்ற அறிக்கையையும் சமர்ப்பிக்க முடியும் - என்றார்.

மேற்படி மாணவர்களை விசாரணை செய்யும்போது உங்களுக்கு ஏதாவது அழுத்தம் கொடுக்கப்பட்டதா எனக் கேட்டபோது இது தொடர்பில் எதுவும் தெரிவிக்க முடியாது என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார். (த-5)

## மன்னாரில் வெடிபொருள் மீட்பு

மன்னார், டிசெ.1

மன்னார் கொக்குப் படையான் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாக சிலாவத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வயலை உழுது பண்படுத்தியபோது புதைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பொதிகள் வெளிக்கிளம்பியுள்ளன.

விவசாயிகள் கொடுத்த தகவலின் பேரில் பொலிஸார் அந்தப் பொதிகளை மீட்டபோது அவற்றுள் 80 கைக்குண்டுகளும், 80 மிதிவெடிகளும் இருந்துள்ளன.

கைப்பற்றப்பட்ட வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்வதற்காக அவற்றை சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்க மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பொலிஸாருக்கு நேற்று அனுமதி வழங்கினார். (ஐ-ரி)

## யாழ். போதனா வைத்தியசாலையில் எயிட்ஸ் விழிப்புணர்வு ஊர்வலம்



யாழ்ப்பாணம், டிசெ.01

சர்வதேச எய்ட்ஸ் நோய் தினம் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் நிலையில் அதனை முன்னிட்டு எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு ஊர்வலமும், கருத்தமர்வும் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்கள், மாணவத் தாதியர்கள், வைத்தியசாலைப் பணிப்பாளர்கள், தாதியர் சங்க அதிபர் ஆகியோர் விழிப்புணர்வுப் பேரணியைநடத்தினர்.

யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் நோய் சிகிச்சை நிலைய வைத்தியர் தி.கணேசலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். கருத்துரைகளும் இடம்பெற்றன. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு முகப்பு வளைவு

யாழ்ப்பாணம், டிசெ.1
மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர்களின் நிதியுதவியுடன் கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை முன்றிலில் முகப்பு வளைவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான இளைப்பாறும் அறையும் அமைக்கப்பட்டு வருகின்றன. (ம-14)

## நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, டிசெ.1
சங்கானை அறிவொளி சனசமூக நிலைய சுற்று மதில் கட்டுவதற்கு பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த நிதியைபன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து வழங்கியுள்ளார். (ம-86)

* * *

கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகிகள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார். (ம-86)



பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடம் நேற்று நண்பகல் காலவேளையில் திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அலுவலகப் பணிகள் நாளை மறுதினம் திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன. (ம-17)

## தென்மராட்சி வலயத்திலுள்ள 11 பாடசாலைகளுக்கு அதிபர்கள்

தென்மராட்சி,டிசெ.01
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதியால் அதிபர் சேவை தரம் 2: II இற்கான நியமனக் கடிதங்கள் பெற்றவர்களில் 11 பேருக்கு இன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதிபர்களாக நியமனம் பெற்றோரின் விவரங்களும் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளின் விவரங்களும் பின்வருமாறு:-

நா.கருணாகரன்- கைதடி கலைவாணி வித்தியாலயம், நா.கந்தசாமி- மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை, திருமதி க.தயாபரன்- சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், ஆ.தங்கவேல்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, திருமதி பு.மங்களேஸ்வரன்- கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, ஆ.விமலேந்திரன்- வரணி வடக்கு அ.த.க பாடசாலை, ஐ.தேவேஸ்வரன் - விடத்தல்பளை கமலாசனி வித்தியாலயம், ஐ.தேவராஜா- வரணி ம.வி, கு.ரவீந்திரா- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, ந.கஜேந்திரன்- எழுதுமட்டுவாழ் அ.த.கபாடசாலை, ப.செல்வநாயகம்- கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

மேலும் அதிபர் சேவை தரம் 3 இற்கு இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ச.கிருஷ்ணன்- மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, திருமதி வ.கபிரியேல்பிள்ளை- வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம். (ம-9)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க கரையோரப் பாதுகாப்பு படை உதவி

### கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கை

*யாழ்ப்பாணம், டிசெ.1*
*காங்கேசன்துறையில் உள்ள கரையோரப் பாதுகாப்புப் படையின் உதவியுடன் குடாக்கடலில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கைது செய்யப்படவுள்ளனர். அத்துடன் அவர்கள் பயன்படுத்தும் சட்ட விரோத உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படவுள்ளன. யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:*

வடபகுதிக் கடற்பகுதியில் சட்டவிரோதமான மீன்பிடி இப்போது அதிகரித்துச் செல்கிறது. இந்த நடவடிக்கையில் ஈடுபெடும் மீனவர்களை கரையோரப் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் 'ட்றோலர்' படகு, தங்கூசி வலை என்பவற்றையே அதிகமாக உபயோகித்து வருகின்றனர்.

வடமராட்சி, குருநகர் கடற்பரப்புகளில் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி நாடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்தத் திணைக்களத்தின் உதவியுடன் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படவுள்ளன.- என்றார். (த-13)

## கற்றுக்கொண்ட பாடங்கள் விளக்கக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கற்றுக் கொண்ட பாடங்களின் நல்லிணக்கம் பற்றி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாற்றுக் கொள்கை நிலையத்தினரால் பிரதேச அலுவலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் நடத்தப்பட்டு வருகின்றது

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் நுணாவில் தேவாலய போதகர் அருட்பணி பீ.தேவராஜா மற்றும் மாற்றுக்கொள்கை நிலையப் பிரதிநிதிகளால் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி நகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான விளக்கக் கூட்டம் நேற்று நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (ம-9)

## பெரிய வெங்காயத்தின் வருகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
சின்ன வெங்காயத்தின் விலை உயர்வை அடுத்து பெரியவெங்காயத்தின்வருகை குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகிறது. அண்மையில்பெய்த மழையை அடுத்து குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென்று அதிகரித்துக் காணப்படுகிறது.

ஒரு கிலோ சின்ன வெங்காயம் 160 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் விலை மேலும் அதிகரிக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். இதன் விலை உயர்வை அடுத்து தென்பகுதியில் இருந்து பெரும் தொகையில் பெரிய வெங்காயம் இங்கு எடுத்து வரப்படுகிறது.

பெரிய வெங்காயம் கிலோ 100 ரூபா தொடக்கம் 120 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ம-17)

## செம்மணி உப்பளத்துக்கு தற்காலிகமாக 'ஓய்வு'

யாழ்.மாவட்டத்தில் உள்ள செம்மணி உப்பளம் மூடப்பட்டு அங்கு பணியாற்றியோர் மன்னார் மாந்தைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக யாழ். மாவட்டத்தின் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த செம்மணி உப்பளத்தில் கடந்த சில வருடங்களில் உப்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

அத்துடன் பல உப்பு விளைநிலங்களில் விஷமிகளால் போத்தல் ஓடுகள் வீசப்பட்டுள்ளமையால் உப்பு விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டு பெரு நட்டத்தில் இயங்கி வந்துள்ளது.

மாந்தை "சோல்ட் லிமிட்டட்" நிறுவனத்தினரால் நடத்தப்பட்டு வந்த உப்பளம் அண்மையில் மூடப்பட்டு அதன் பணியாளர்களும் அலுவலகமும் மாந்தைக்கு மாற்றப்பட்டுள்ளது.

30 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட உப்பளத்தில் விளைச்சல் காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

உப்பளச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கும் வரை கட்டடங்கள் மற்றும் உப்பள வயல்களைப் பராமரிக்க ஒருவர் கடமையில் உள்ளார் என்றும் கூறப்பட்டது. (ம-9)

## நிகழ்வுகள் இன்று

**கருத்தரங்கு**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணிதபாட வழிகாட்டல் கருத்தரங்கு டயலொக் நிறுவனத்தினரால் காலை 8.30மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. (ம-9)

**பொதுக்கூட்டம்**

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார். (ம-9)

**கலைவிழா**

பாலர் கல்விக் கழகத்தின் 12 ஞானக் குழந்தை இல்லங்களும் இணைந்து நடத்தும் 47 ஆவது வருடாந்த கலைவிழா காலை 9 மணிக்கு சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கலந்து கொள்வார். (ம-14)

**சான்றிதழ் வழங்கல்**

வடமராட்சி வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி மத்திய நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் வி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (ம-14-8)

**கண்காட்சி**

உடுவில் கோட்ட வலி. தெற்கு பிரதேச முன்பள்ளி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கண்காட்சியும் கலைவிழாவும் நண்பகல் 12 மணிக்கு தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் ஜீவரூபி வைரவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் கலந்து கொள்வார்.

**சொற்பொழிவு**

நெல்லியடி மகாத்மா வீதியில் உள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் இன்று மாலை புத்தாண்டை முன்னிட்டு புதிய உலகை வரவேற்போம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இந்தச் சொற்பொழிவை ஓய்வுபெற்ற வடகிழக்கு மாகாண சபை ஆளுநரின் செயலாளரான சி.ரங்கராஜா நிகழ்த்துவார். புத்தாண்டு பிறப்பதை முன்னிட்டு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் மாதாந்த சொற்பொழிவு வரிசையில் இந்தச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-8)

## கசூரினா கடற்கரையில் அமையவுள்ள சுற்றுலா மையம்

யாழ்ப்பாணம், டிசெ.1
காரைநகர் கசூரினா கடற்கரையில் உல்லாசப் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு சுற்றுலா மையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சபையின் உப தலைவர் எஸ்.துர்க்கேஸ்வரன் தெரிவித்ததாவது:-

கசூரினாக் கடற் கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நிலையில் சுற்றுலா மையம் அமைக்க காரைநகர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது. இதற்கு முன்பாகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும்.

அமைச்சு இதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் இதற்கான நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படும். - என்று கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேலும் தெரிவித்தாவது:

''நள்ளிரவு ஒரு மணியளவில் பொலிஸ் சீருடையில் வந்த நால்வர் வீட்டின் கதவைத் தட்டினர். பின்னர் தர்ஷானந்தின் அடையாள அட்டையை வாங்கிப் பரிசீலித்துவிட்டு 'வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு தர்ஷானந்தை அழைத்துச் செல்லப் போகின்றோம்' என்று கூறினர். ஆனாலும் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று நான் கதறினேன். ஆனால் அதனையும் மீறி அந்த நால்வரும் தர்ஷானந்தை அழைத்துச் சென்று வெளியில் நின்றிருந்த வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டனர்.

அவரை கைது செய்ததற்கான எந்தவிதமான ஆவணங்களையும் எமக்குப் பொலிஸார் வழங்கவில்லை.'' என்று கண்ணீருடன் தர்ஷானந்தின் தாயார் தெரிவித்தார்.

எனினும் இதுகுறித்து உறுதிப்படுத்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது,

''தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் இல்லை. நாளை காலை நேரில் வாருங்கள்'' என்ற பதிலே அரைகுறைத் தமிழில் கிடைத்தது. இதேவேளை -

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பதில் துணைவேந்தர் பேராசிரியர் வேல்நம்பி தெரிவித்தார்.

''கோப்பாய் பொலிஸில் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் இருமாணவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

''இதன் பிரகாரம் இரண்டு மாணவர்களையும் நான் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றேன்'' - என்று தெரிவித்த அவர், விசாரணைகளின் பின்னர் மாணவர்கள் மீது எந்தத் தவறும் இல்லை என பொலிஸார் கூறினர் என்றும் மாணவர்கள் இன்று விடுவிக்கப்படவுள்ளனர் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரான க.ஜெனமேனன், விஞ்ஞானபீட மாணவனான எஸ்.சொலமன் ஆகிய இருவருமே கோப்பாய் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகம் ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதனன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், பொலிஸார் நடத்திய தடியடியில் சிக்கி எஸ்.சொலமன் அடிவாங்கும் படங்கள் ஊடகங்கள் அனைத்திலும் வெளியாகி இருந்தன. பொலிஸார் அவரை விசாரணைக்கு உட்படுத்தியமைக்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று மாணவர்கள் சந்தேகிக்கின்றனர். (ங)

## மாணவி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிக்கொண்டிருந்தவேளை ஓட்டோவில் வந்த மூவர் இவ்ரைப் பலவந்தமாக இழுத்து ஓட்டோவில் ஏற்றினர் என்று நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தன. சம்பவத்தைக் கண்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினர். பொலிஸார் குறித்த ஓட்டோவை மன்னார் -மதவாச்சி வீதியில் மடுப் பகுதியில் வைத்து மடக்கி அதில் சென்றவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-ரி)

## பல்கலை மாணவருடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களின் நினைவு நிகழ்வு என்பவற்றை மாணவர்கள் தனியே அனுஷ்டித்தனர். இதுவே பிரச்சினைகள் உருவாகக் காரணமானது. எதிர்காலத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து இவற்றை கடைப்பிடிப்பர். இதன் மூலமாக தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியும் என ஆசிரியர் சங்கத் தலைவர் கூறினார். (த-4)

## பலஸ்தீனம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் நாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை பலஸ் தீனம் ஐ.நா.தீர்மானத்தில் வலியுறுத்தியுள்ளது.

41 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன. இஸ்ரேல், அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட 9 நாடுகள் எதிர்த்தன. இந்தப் பிரேரணை தீர்மானமாக வெற்றி பெற்றதன் மூலம் பலஸ்தீனம் தனிநாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் பிரேரணை மீது ஐ.நா. சபையில் வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டபின்னர் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. (*முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்*)

## உதயன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சம்பவத்தை, பத்திரிகை ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களில் ஒருவரான 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.ஏ.கானமயில்நாதன் எமது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

மூன்று சகாப்தகாலம் வடபகுதியில் போரால் உயிரிழந்தோரின் ஞாபகார்த் தக் கூட்டம், யாழ். பல்கலைக்கழகத்தில், மாணவர்களால் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே உதயன் ஆசிரியர் தாக்கப்பட்டுள்ளார்.

இராணுவச் சீருடையிலும், சாதாரண உடையில் இருந்தவர்களுமே உதயன் ஆசிரியரின் ஒளிப்படக் கருவியைப் பறிக்க முயன்றுள்ளனர். அச்சமயம் அவர் அதைத் தடுத்துள்ளார். அவரது முகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெறவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இரக்கமற்ற கெடுபிடிகள் கட்டவிழ்க்கப்பட்டு வருவதை நாம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டில் நிகழும் சம்பவங்களை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய கடமை சட்டரீதியாக ஊடகத்துறைக்கு உண்டு.

எனவே, உதயன் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்றும், ஊடகங்களுக்கு எதிராக நீளும் இரும்புக்கரம் தடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சங்கம் அறைகூவல் விடுக்கின்றது. - இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிலுள்ள ஐ.நா. அலுவகத்தில் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதியும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூனும் 2009 ஆம் ஆண்டு - போர் முடிவுற்றதும் - வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள், இனப் பிரச்சினைக்கான தீர்வு, மீள்குடியமர்வு ஆகியன குறித்தே இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அரசுடனான ஒரு வருட காலப் பேச்சின் போது நடந்த விடயங்கள் குறித்தே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா. அதிகாரிகளிடம் எடுத்து கூறினர்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று அரசைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற அதேவேளை, புதிய புதிய சட்டத் திருத்தங்கள் ஊடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முயற்சிப்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

அவர்கள் மேலும் கூறியதாவது:

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளாகியும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கானோர் இன்னும் மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பல ஏக்கர் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால் தமிழர்கள் முழுமையாக குடியமர்த்தப்படாமல் உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் கிராமங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி இனப் பரம்பலை மாற்றியமைத்தது போல வட மாகாணத்திலும் அதனை மேற்கொள்ள அரசு முனைப்புக்காட்டி வருகிறது.

இதற்கு மேலதிகமாக வடக்கு மாகாணம் பெரும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு வருகிறது. புதிய இராணுவ முகாம்கள், கடற்படை முகாம்கள் தமிழர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக கோடி கோடியாக பணம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக ஜனநாயகமற்ற சூழல் வடக்கில் தோன்றியுள்ளது. கடந்த 27 ஆம், 28 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன.

ஜெனிவாத் தீர்மானத்தின் பிரகாரம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவமே தமது குற்றச் சாட்டுக்களைத் தாமே விசாரிக்கும் நிலை காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் இலங்கை அரசு, தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான- நிலையான ஒரு தீர்வை வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் சர்வதேச விசாரணையினூடாகவே அது சாத்தியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

## மாணவர்களுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பீடப் பொது அறையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்தே ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* உயிரிழந்தவர்களுக்கும், மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவது உலகம் முழுவதும் பொதுப்பண்பு; அதனை ஏற்றுக் கொள்.
* பல்கலைக்கழக வளாகத்தினுள் இராணுவம் காடைத்தனம்
* பெண்கள் விடுதிகளுக்குள் இரவு நேரத்தில் அனுமதியின்றி இராணுவம் அத்துமீறல்
* தமிழர்களுக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கு தமிழர்கள் தீபமேற்றவும் தடையா? இதுதான் ஜனநாயகமா?
* எங்களது உரிமையில் இராணுவமே தலையிடாதே!
* ஜனநாயகப் போராட்டங்களைத் தடுக்க முனையாதே!

ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஆசிரியர்கள் ஏந்தியிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், பின்னர் அமைதியாகக் கலைந்து சென்றனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற வேளையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் படைப்புலனாய்வாளர்களும் பல்கலைக்கழகத்தைச் சூழ நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் அங்கு தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை, மாணவர்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்தமை, குறிப்பாகப் பெண்கள் விடுதிக்குள் பெண் பொலிஸாரோ, பெண் இராணுவத்தினரோ இல்லாமல் படையினர் அத்துமீறி நுழைந்தமை என்பன மா பெரும் தவறு.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லை என்று அரசு கூறுகிறது. அப்படியிருக்க பொலிஸாரும், இராணுவத்தினரும் எதற்காக இணைந்து செயலாற்றுகின்றனர் என்பது தெரியவில்லை. தமிழரைத் தொடர்ந்தும் அடிமை நிலையில் வைத்திருக்கவா என்ற சந்தேகம் எழுகிறது.

கடந்த 27 ஆம் திகதி மாணவர்கள் விடுதியினுள் பொலிஸாரும், இராணுவத்தினரும் நிர்வாகத்துக்குத் தெரியாமல் அத்துமீறி நுழைந்துள்ளனர். அதுவும் குறிப்பாக மாணவிகள் தங்கியிருந்த விடுதியினுள் பெண் பொலிஸாரோ, பெண் இராணுவத்தினரோ இல்லாமல் அத்துமீறி நுழைந்துள்ளனர். இது தவறானதும் அடிப்படை உரிமைகளை மீறும் செயலுமாகும்.

இதனைக் கண்டித்து மறுநாள் மாணவர்கள் அமைதியாகவே போராட்டம் செய்தனர். அதனைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இரும்புக் கம்பியாலும், பொல்லுகளாலும், துப்பாக்கிப் பிடியினாலும் மாணவர்களைத் தாக்கியுள்ளனர்.

நவ.27 ஆம் திகதி உலகத் தமிழர்கள் அனைவருமே பிரார்த்திக்க வேண்டிய நாள். அதனை நாம் நினைவுகூருவது எமது உரிமை. அதனை மறுப்பது எமது அடிப்படைக் உரிமையை மீறும் செயல். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எமது உறவுகளுக்காக நாம் அஞ்சலி செலுத்துவது தவறா? என்று கேள்வி எழுகிறது.

இந்த அராஜகங்கள் எதிர்காலத்திலும் தொடருமானால் எமது போராட்டமும் தொடரும் - என்றார். (த-4)

## தீர்வு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வர் இரா.சம்பந்தன் மிக அழுத்தமாக வலியுறுத்தினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந் தன் தெரிவித்ததாவது:-

எமது நாடு சர்வதேசத்தால் மதிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

ஆனால், இலங்கை அரசோ சர்வதேச சமூகத்துடன் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளும் விதமாகச் செயற்படுகின்றது.

இலங்கை நிலைமை தொடர்பான ஐ.நாவின் உள்ளக அறிக்கைக்குப் பதிலாக இலங்கை அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை திருப்திகரமானதாக இல்லை.

ஐ.நாவின் உள்ளக அறிக்கையை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.தனது செயற்பாடுகள் அனைத்தையும் சரியென்று இலங்கை அரசு நியாயப்படுத்தி யுள்ளது. .

இதற்கு முன்பு ஐ.நா. நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் இலங்கை நிராகரித்திருந்தது.

எந்தவொரு அறிக்கையையும் முற்றாகப் பரிசீலித்துப் பார்க்காது அவற்றை முற்றாக மறுப்பது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.

இலங்கை அரசால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைக்கூட இந்த அரசு மிகமோசமாக விமர்சிக்கின்றது. அரசின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவிக்கின்றனர். அந்த அறிக்கையை அரசு ஏகமனதாக ஏற்கவில்லை. அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தனது கடமையை அரசு நிறைவேற்றத் தவறுகிறது.

அரசால் அமைக்கப்பட்ட - சொந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் இந்த அரசு தாக்குகிறது. சர்வதேச அறிக்கைகளையும் தாக்குகிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும், மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் என்று அரசு கூறியது. அந்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது?

இலங்கை அரசு பொறுப்புக்கூறலை சரியாக மேற்கொள்ளும் என 2012 மார்ச்சில் ஐ.நாவில் தெரிவித்தது. ஆனால், அது அப்படி இடம்பெறுவதில்லை.

உண்மைகளை வெளியில் கொண்டுவர அரசு அர்ப்பணிப்புடனும், நியாயமாகவும் செயற்படவேண்டும். இறுதிப் போரில் வன்னியில் 40,000 பேர் இறந்தனர் என்று ஐ.நா. அறிக்கை கூறுகின்றது. ஆனால் அரசோ 70,000 மக்கள்தான் வன்னியில் இருந் தனர் என்று கூறுகின்றது. கொல்லப் பட்ட மக்களின் எண்ணிக்கை கயைக் குறைத்துக் காட்டுவதற்காகவா அரசு இப்படிக் கூறுகின்றதா?

போர் இடம்பெற்றபோது அரசு மக்களை மிக மோசமாக நடத்தியது. அவர்கள் மீது குண்டுமழை பொழிந்தது. உணவு, மருந்துப் பொருள்கள், குடி தண்ணீர் போன்றவற்றை மக்களுக்கு வழங்கவில்லை.

அரசு எல்லாவற்றையும் மூடிமறைக்கின்றது. போரின்போது மக்களுக்கு என்ன நடந்தது என்பதையும் மூடிமறைக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தையும் மூடிமறைக்கிறது.

அதிகாரப் பகிர்வுக்காக 13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு 2008 இல் ஐ.நாவில் கூறியது. இந்தியாவிடமும் கூறியது.

இந்தியாவுக்கு வழங்கிய இந்த வாக்குறுதியை இந்தியத் தூதுவர் இந்தவருடம் செப்ரெம்பரில் ஐ. நாவில் கூறினார்.

நாமும் நல்லதோர் அரசியல் தீர்வைத் தான் இந்த அரசிடம் எதிர்பார்க்கிறோம். ஆனால், அரசியல் தீர்வொன்றை வழங்கும் விதத்தில் அரசு செயற்படுகிறா?

பெரும்பான்மையினருக்கு ஏற்றவாறே தீர்மானமெடுக்க அரசு முற்படுகிறது. ஆனால், அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் அடிப்படையாகக் கொண்டே தீர்வு வழங்கப்படவேண்டும். - என்றார் சம்பந்தன். (சி)

## மாணவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்த விடயத்தை வலியுறுத்தி சுவாமிகள், ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இந்த நாட்டின் இளம் சமுதாயத்தின் நிம்மதியைக் கெடுக்கும் வகையில் அதிகாரத் தரப்பினர் நடந்து கொள்வதை உடன் நிறுத்தவேண்டும்.

இதனால் இந்த நாட்டு மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டு நிம்மதியற்ற சூழலில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அத்துடன் பிரதம நீதியரசருக்கு எதிராக நடத்தப்படுகின்ற குற்றப் பிரேரணையும் மீளப் பெறப்பட வேண்டுமென ஏனைய மதத் தலைவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை நாமும் ஆதரிப்பதுடன் வேண்டுகோளை நடைமுறைப்படுத்துமாறு நாமும் கேட்டுக் கொள்கின்றோம். -என்றுள்ளது. (த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கைத் தமிழருக்கான தீர்வுக்கும் ஒரு வழித்தடம் மிக அவசியம்

193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா.பொதுச்சபை நேற்று முன்தினம் வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது. நடைமுறையில் அரசு போன்று செயற்படும் இறைமை உள்ள ஒரு நாட்டுக்குரிய அங்கீகாரம் (De facto U.N. Recognition) பலஸ்தீனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் இதுவரை அவதானிகள் அந்தஸ்திலேயே பலஸ்தீனம் இருந்து வந்துள்ளது. தற்பொழுது கிடைத்துள்ள இந்த அங்கீகாரம் ஐ.நாவில் வத்திக்கானுக்குரிய அந்தஸ்தை ஒத்தது.

காஸாவில் சுமார் ஒருவாரகாலம் இஸ்ரேல் நடத்திய மோசமான தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்ட நிலையில், ஐ.நா. பொதுச்சபை நிறைவேற்றி உள்ள இந்தத் தீர்மானம், பலஸ்தீன மக்களின் போராட்டங்களுக்குக் கிட்டிய ஓர் அங்கீகாரம் என்பதில் சந்தேகம் இல்லை.

பலஸ்தீன மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக இருநாட்டுத் திட்டத்தை ஐ.நா. பொதுச்சபை 67 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கீகரித்த அதே தினத்தில் - நேற்று முன்தினம் - ஐ.நாவில் பலஸ்தீனத்துக்கான அந்தஸ்து மேலும் உயரும் விதத்தில் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றி இருப்பது சுதந்திர பலஸ்தீன நாட்டுக்கான வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பலஸ்தீன மக்களின் பிரச்சினைகுத் தீர்வாக பலஸ்தீனத்தில் யூதநாடு - பலஸ்தீன நாடு என்று இரு நாடுகளை உருவாக்கும் திட்டத்துக்கு ஐ.நா. பொதுச்சபை 67 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கீகாரம் அளித்திருந்தது. எனினும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, பிர்ராந்திய விஸ்தரிப்பு போன்ற நடவடிக்கைகளால் அத்திட்டம் செயலளவில் சாத்தியப்படவில்லை.

போர்கள், வன்முறைப் போராட்டங்கள், சமாதானப் பேச்சுகள் என்று பல படிகளைக் கடந்து 1993ஆம் ஆண்டின் ஒஸ்லோ ஒப்பந்தம் ஊடாக உருவாக்கப்பட்டதே பலஸ்தீன அதிகார சபை. பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ், காஸாவில் இஸ்ரேல் நடத்திய ஒருவார காலத் தாக்குதலின் பின் ஐ.நா. உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டி பலஸ்தீனத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இதற்கு அடுத்த படிதான் முழு இறைமைகளைக் கொண்ட சுதந்திர பலஸ்தீன நாட்டுக்கான அங்கீகாரம். அதனை எட்டுவதற்கு பலஸ்தீன மக்கள் இன்னும் எத்தனையோ தியாகங்களைச் செய்யவேண்டியதாயிருக்கும்.

ஐ.நா. பொதுச்சபை வாக்கெடுப்பில் 138 நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, கனடா உட்பட 9 நாடுகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தன. 47 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. மூன்று நாடுகள் வாக்கெடுப்பு நேரத்தில் சமுகமளிக்கவில்லை. இந்தத் தீர்மானம் மேற்குக் கரையிலும் காஸாவிலும் வசிக்கும் 43 லட்சம் பலஸ்தீன மக்களுக்குக் கிடைத்த பெரிய வெற்றி ஆகும். அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இது பெரும் பின்னடைவாகக் கொள்ளத்தக்கது. இஸ்ரேலின் அராஜகங்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் உரிமையை ஐ.நா. தீர்மானம் பலஸ்தீனத்துக்குப் பெற்றுக்கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெரும்பாலான உலக நாடுகளால் சட்டவிரோதம் என்று வர்ணிக்கப்படும் மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியிருப்புகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பலஸ்தீனம் வழக்குத் தொடர்ந்து வெற்றிபெறுமானால் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு அது பேரிடியாக ஆகிவிடும். தற்போதைய விசேட அந்தஸ்து என்பதனூடாக ஏனைய சர்வதேச அமைப்புகளிலும் பலஸ்தீனம் அங்கம் வகிக்கமுடியும்.

குறிப்பிட்ட இந்த ஐ.நா. தீர்மானம் பல அனுகூலங்களை பலஸ்தீனத்துக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடகாலமாகத் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. பொதுச் சபையில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் கருத்துத் தெரிவித்த ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் சூசன் றைஸ், மீளவும் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி உள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இத் தீர்மானம் ஐரோப்பிய நாடுகளைப் பிளவுபடுத்திவிட்டது. அமெரிக்காவுடன் நல்லுறவு பேணும் 17 நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. எதிர்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்குக் கரையில் யூதக் குடியிருப்புகளை நிறுவுவதை இஸ்ரேல் உடனடியாக நிறுத்தி பலஸ்தீனத்துடன் பேச்சுகளை நடத்துவதற்கான சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும். பேச்சுகள் மூலம் எட்டப்படும் சமாதானமே மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும். சுதந்திர பலஸ்தீனத்துக்கான பாதையில் ஐ.நா. தீர்மானம் மற்றொரு மைற்கல்லாகும்.

இதே வழித் தடத்தில் கால் பதித்து, ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் நீண்டகாலமாக - அறுபது வருடங்களாக - தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை முடிவுறுத்த -

அவர்களுக்குச் சேரவேண்டிய, அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத அரசியல் உரிமைகளை, சுயாட்சி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு (ஐக்கிய நாடுகள் சபை ஊடாக) செயலாற்றி உதவ வேண்டிய தேவை உண்டு.

அதனை நாடிச் செயற்பட உலகின் பெரிய நாடுகள் முன்னின்று உழைக்க வேண்டும். பலஸ்தீனம் பற்றிய செய்தி போன்று, அதற்குச் சார்பான முடிவு போன்று தமக்கு வாராதா என்று இலங்கைத் தமிழ் மக்களிடமும் வேணவா அவர்களை அறியாமலேயே இயற்கையாகவே மேலெழுகிறது. அது தப்பல்லவே!

# '13'ஐ ஒழிக்கத் துடிப்பது ஏன்?

## நாடாளுமன்றில் ஐ.தே.க. கேள்வி

கொழும்பு,டிசெ.1

புத்தசாசனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய ஹெல உறுமய, அதைச் செய்யாமல் '13'ஐ ஒழிக்கத் துடிப்பது ஏன்?

இவ்வாறு நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றாவிடின் நாட்டில் 85 சதவீதமான ஏற்றுமதி தடைப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க. ஆட்சியின்போது ரயில்வே கடவையில் மூங்கில் கடவை போட்டாவது மக்களின் உயிர் பாதுகாக்கப்பட்டது. ஆனால் இன்று பாதுகாப்புக்கடவை இல்லாததால் மக்கள் உயிரிழக்கின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்க, இவர்கள் பலகோடி ரூபா செலவில் 'சட்டலைட்' விடுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ரயில்-ஓட்டோ விபத்தில் அறுவர் கொல்லப்பட்டுள்ளனர் என்ற செய்தியைப் பார்க்கும்போது மிகவும் மனவேதனையாக இருக்கின்றது. தொலைக்காட்சியில் இச்செய்தியைப் பார்க்கையில் எனக்குத் தானாகவே கண்ணீர் வந்தது.

அன்று ஜனாதிபதி பிரேமதாஸ மூங்கில்கடவை போட்டாவது மக்களின் உயிரைப் பாதுகாத்தார். ஆனால் இன்று இவர்கள் அவ்வாறு செய்வதில்லை. மாறாகப் பெரியளவில் செலவினங்களை மேற்கொண்டு 'சட்டலைட்' விடுகின்றனர்.

அதேவேளை, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிக்கவேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். மாகாண சபையின் மூலம் எவ்வளவு காத்திரமான நடவடிக்கைகளைச் செய்யமுடியும் என்பது அவர்களுக்குத் தெரியுமா?

நான் முதலமைச்சராக இருந்தேன். எனவே, அதை சக்திமிக்கதாகப் பயன்படுத்தலாம். 13 ஒழிப்பு கோஷத்துக்கு இடதுசாரி அமைச்சர்மார் போர்க்கொடி தூக்கியமை பைத்தியக்காரச் செயல் எனக் கூறியுள்ளனர். அவர்கள் எவருக்கும் பயப்படாது இது விடயத்தில் துணிகரமாகக் குரல் கொடுக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்ததாக, எமது ஏற்றுமதியில் 85 சதவீதமானவை மேற்குலகை அண்டித்தான் இருக்கின்றன. ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்படாவிடின் இலங்கையின் ஏற்றுமதி தடைப்படும் என நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. எனவே அரசு நிலைமையை உணரவேண்டும்.

ஜாதிக ஹெல உறுமய புத்தசாசன அமைச்சை ஏற்று அதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் ஹெல உறுமய அதைச் செய்யாமல் 13ஐ ஒழிக்கத் துடிக்கின்றது. - என்றார்.

# "மிஹின் லங்கா" விமான சேவையால் 5 ஆண்டுகளில் ரூ.850 கோடி நஷ்டம்

கொழும்பு,டிசெ.01

''மிஹின் லங்கா'' விமான சேவையால் கடந்த நிதியாண்டில் 200 கோடி ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அரச கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''மிஹின் லங்கா'' விமான சேவையில் இன்று வரையில் மொத்தமாக ஏற்பட்டுள்ள நஷ்டம் 850 கோடி ரூபா எனவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

பெரிய நஷ்டத்துடன் இந்தச் சேவை இடம்பெற்றாலும் கூட, அதன் பணிப்பாளர்கள் 6 பேருக்கும் ஆண்டு தோறும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த நிதியாண்டில் ஒரு கோடி 10 லட்சங்கள் வரை அவர்களுக்குச் சம்பளக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை அதற்கு முந்திய வருடத்தை விட 49 லட்சங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கன் விமான சேவையின் தலைமைப் பணிப்பாளராக பணியாற்றும் மிஹின்லங்காவின் தலைமைப் பணிப்பாளருக்கு அந்த இரு நிறுவனங்கள் மூலமாக மாதமொன்றுக்கு 5 லட்சங்கள் வீதம் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறைசேரியால் இடையிடையே பலவிதமான சலுகைகள் மற்றும் நிவாரணங்கள் வழங்கப்பட்டு வந்துள்ள நிலையில் மிஹின் லங்கா இவ்வாறு நஷ்டமடைந்துள்ளதோடு 2012 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாவும் 2011 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாவும் 2010 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாவும் 2009 ஆம் ஆண்டில் 288 கோடி ரூபாவும் 2008 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாவும் 2007 இல் 25 கோடி ரூபாவும் என்றவாறு திறைசேரியால் அந்த நிறுவனத்துக்கு நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய, மிஹின் லங்கா நிறுவனத்துக்கு 2007/2008 நிதியாண்டில் 310 கோடி ரூபாவும் 2008/2009 ஆம் நிதியாண்டில் 130 கோடி ரூபாவும் 2009/2010 நிதியாண்டில் 120 கோடி ரூபாவும் 2010/2011 நிதியாண்டில் 94 கோடி ரூபாவும் 2011/2012 நிதியாண்டில் 190 கோடி ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

2011/2012 நிதியாண்டு தொடர்பாக மிஹின்லங்கா விமான சேவை குறித்து அரச கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை பொது நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் விசாரணைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

# புகலிடக் கோரிக்கையாளர்களை மனாஸ்தீவுக்கு அனுப்பியது ஆஸி

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக பிரவே சித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மனாஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.

அதிக எண்ணிக்கையான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு மனாஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர். மனாஸ் தீவுகள் பப்புவா நியூகினியாவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஒரு தொகுதி புகலிடக் கோரிக்கையாளர் கள் மனாஸ் தீவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்களில் அதிகளவான இலங்கையர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. விசேட விமானம் மூலம் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் மனாஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ)

# ஈழக் குழந்தையின் படத்தை காங். தேர்தல் விளம்பரத்திலிருந்து நீக்கியது

வன்னியில் இறுதிப் போரின் போது ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தையின் ஒளிப்படத்துடன் வெளியிட்ட தேர்தல் விளம் பரத்தை இந்தியாவின் காங் கிரஸ் கட்சி விலக்கியுள்ளது.

குஜராத் தேர்தல் பரப்புரைக்காக, காங்கிரஸ் கட்சி வெளியிட்ட விளம்பரத்தில், வன்னியில் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தையின் படம் போடப்பட்டிருந்தது.

இதுகுறித்து கடும் விமர்சனங்கள் எழுந்த நிலையிலும், அந்தப்படம் இலங் கையில் பாதிக்கப்பட்ட குழந்தையின் படம் என்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும், மேற்படி தேர்தல் விளம்பரத்தை காங்கிரஸ் கட்சி விலக்கிக் கொண்டுள்ளது.

இணையத்தளங்கள், நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் போன்ற சகல ஊடகங்களில் இருந்தும் இந்த சர்ச்சைக்குரிய விளம் பரத்தை காங்கிரஸ் கட்சித் தலைமை நீக்கியுள்ளது. (வ)

# வயது குறைந்தோருக்கு புகைபொருள் விற்ற வர்த்தகர்களுக்கு ரூ.23 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,டிசெ.1

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 23 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 7 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சிகரெட் விற்பனை செய்த இருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதமும், பீடி விற்பனை செய்த ஐவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவேலியில் தற்காலிகமாக இயங்கிவரும்

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வசதிகள் இன்றி நோயாளர் அந்தரிப்பு

## கட்டட, தளபாட வசதிகளும் இல்லை

கிளிநொச்சி, டிசெ. 1

புதுக்குடியிருப்பு பொது வைத்தியசாலை தற்காலிகமாக கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி வருவதால் நோயாளர்கள் தினமும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு தினமும் 200 க்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர்பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். விடுதிகளில் தினமும் 30 பேர் வரை சேர்க்கப்படுகின்றனர்.

குறிப்பாக மழை காரணமாக ஏற்படும் நோய்களுடன், பாம்புக்கடி, வயிற்றோட்டம், ஒருவகை வைரஸ் காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வைத்தியசாலை தற்காலிகமாக இயங்குவதால் போதிய வசதிகள் எவையும் இல்லை எனவும், அவசர நோயாளிகளை முல்லைத்தீவு வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரே ஒரு வைத்தியர் மட்டும் இரவு பகலாகச் சேவையாற்றி வருகிறார். நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் தனி ஒரு வைத்தியரால் வைத்தியசாலையில் அனைவரையும் முழுமையாகக் கவனிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அம்புலன்ஸ் ஒன்று வைத்தியசாலைக்கென உள்ளது. இந்த வாகனத்தைப் பயன்படுத்தி முல்லைத்தீவு மருத்துவமனைக்குச் செல்ல ஒன்றரை மணி நேரம் தேவைப்படும். குறிப்பாக வீதிகள் சீரின்மையால் அம்புலன்ஸ் ஒரு நோயாளியைக் கொண்டுசென்று திரும்ப சுமார் 3 மணித்தியாலங்கள் செல்கின்றன. இதனால் நோயாளர்களின் உயிர்காப்பும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் வசதிகளுடன் இயக்குவது குறித்து எது வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நோயாளர் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## மணல் ஏற்ற வரி 300 ரூபா

பூநகரி, டிசெ. 1

பூநகரிபிரதேசத்தில் மணல் ஏற்றுபவர்களிடம் இருந்து இதுவரை அறவிடப்பட்ட 100 ரூபா வரிப்பணம் தற்போது 300 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச சபை இதற்கான வரிப்பணத்தை அறவிட்டு வருகிறது. இதன்படி 'டிப்பர்' வாகனம் ஒன்றில் ஏற்றப்படும் மணலுக்காக 300 ரூபா வரிப்பணம் செலுத்தப்பட வேண்டும் என பிரதேசசபை அறிவித்துள்ளது.

மணல் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, தற்போது மணல் அகழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், இந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிதி பூநகரி கிராம அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் எனவும் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-18)

## முள்ளிவாய்க்கால் மக்களைச் சந்தித்து ஐ.நா. அதிகாரிகள் குறை விசாரிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கிற்கான பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த ஐ.நா. அதிகாரிகள் முள்ளிவாய்க்கால் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களது குறைகளையும் கேட்டு அறிந்து கொண்டனர்.

கடந்த 27 ஆம் திகதி ஐ.நா. அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் யாழ். ஆயர் இல்லத்தில் ஆயரைச் சந்தித்து போருக்குப் பின்னரான நிலைமைகள் குறித்துக் கேட்டு அறிந்து கொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற ஐ.நா. அதிகாரிகள் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

போருக்குப் பின்னர் உள்ள நிலைமைகளை அந்த மக்களிடம் கேட்டறிந்தனர்.

அதன்போது ஐ.நா. அதிகாரிகளிடம், மீள்குடியேற்றப்படும் போது தங்களுக்கு போதியளவான வசதிகள் செய்து தரப்படவில்லை. தகரக் கொட்டகைகளே வழங்கப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் இருந்து வரும் இரும்பு வியாபாரிகளால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. இதற்கு இராணுவத்தினர் உடந்தையாக இருக்கின்றனர் என மக்கள் ஐ.நா. அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இவற்றைக் கேட்ட அதிகாரிகள், நாம் உங்கள் உணர்வுகளை மதிக்கின்றோம். உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம் என உறுதியளித்தனர்.

இறுதியாக ஐ.நா. சபையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய அரசியல் விவகாரச் செயலாளர் ஹிட்டோக்கிடென் மற்றும் யங்குவான்லீ ஆகியோர் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகனிடம் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர். (ஐ)

## இரண்டாம் கட்டத்தில் கிளிநொச்சிக்கு 1,600 இந்திய வீடுகள்

அக்கராயன்,டிசெ.1

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்றது.

இந்திய வீட்டுத்திட்ட வேலை முன்னெடுப்புத் தொடர்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி துரித செயலணியின் செயலர் கருணாரட்ணவும் கலந்து கொண்டார்.

ஏற்கனவே இந்திய வீட்டுத் திட்டத்தின் மாதிரி வீடமைப்பின் 250 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

முதலாம் கட்ட வீடமைப்பில் 520 வீடுகள் தர்மபுரம் கிழக்கு, சோரன்பற்று, முழங்காவில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 1600 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் கரைச்சி பிரதேசத்தில் 12 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும், பச்சிலைப்பள்ளியில் 6 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் கண்டாவளையில் 3 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும், பூநகரியில் 7 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் வீடுகள் பகிரப்படவுள்ளன. (ஐ-18)

## அரச வங்கியில் வைப்பிலிட்ட பணத்துக்கு நடந்தது என்ன?

### மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு

கிளிநொச்சி, டிசெ. 1

கிளிநொச்சியிலுள்ள அரச வங்கியில் தான் வைப்பிலிட்ட பணத்தை இல்லை என்று சொல்வதாகத் தெரிவித்து குறித்த வங்கிக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் கிளிநொச்சி அலுவலகத்திலேயே மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு குறித்த அரச வங்கியில் தனது பிள்ளையின் பெயரில் ஒரு லட்சம் ரூபா நிரந்தரக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார். இன்னொருவர் 2000 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 621 ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

வங்கியில் பணம் வைப்பிலிட்டமைக்கான, முகாமையாளரின் கையொப்பம் மற்றும் பற்றுச்சீட்டு, வங்கிப் புத்தகம் என்பன எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2007 ஆம் ஆண்டு குறித்த வங்கியின் கணக்கைச் சரிபார்த்தபோது கணக்கில் மீதி எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த வங்கிக்கு எதிராக தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## சோதிடர்கள் விவரம் திரட்டல்

வவுனியா, டிசெ.1

வவுனியா மாவட்டத்தில் உள்ள சோதிடர்கள் தமது விவரங்களை வவுனியா பிரதேச செயலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சிவபாலசுந்தரம் கேட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள சோதிடர்களைக் கௌரவிக்கும் முகமாக கலை கலாசார அலுவல்கள் அமைச்சு அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்கான விவரங்களை அனுப்பி வைப்பதற்கே சோதிடர்களைப் பதிவு செய்யுமாறு வவுனியா பிரதேச செயலகம் கேட்டுள்ளது.

விண்ணப்பிப்பவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாக குறித்த சேவையில் 30 வருட அனுபவம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்று எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆனையிறவு மேலதிக நீர் வெளியேற்றம்

அக்கராயன்,டிசெ.1

ஆனையிறவு கடல்நீரேரியில் தேங்கி நின்ற மேலதிக நீர் சுண்டிக்குளம் கடற்பகுதிக்கு வெட்டி விடப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் பணியை கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் தட்டுவன்கொட்டி, கண்ணகிநகர், நாகேந்திரபுரம், பிரமந்தனாறு, தர்மபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சுண்டிக்குளம் கடற்பகுதியில் உள்ள அணையை வெட்டி மேலதிக நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஏ-9 வீதியின் ஆனையிறவுப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படுவதாலும் இறால் வளர்ப்புத் திட்டத்துக்கு ஏற்றவகையிலும், தட்டுவன்கொட்டி கிராமத்துக்கான போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காகவுமே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-18)

## கிளிநொச்சியில் காணாமற்போன சிறுவர்கள் பற்றித் தகவல் இல்லை

கிளிநொச்சி, டிசெ.1

கிளிநொச்சிப் பகுதியில் காணாமற் போன சிறுவர்கள் பற்றிய தகவல்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லையென அவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி முரசுமோட்டை மூன்றாம் யுனிற் பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவன் கடந்த மாதம் 18 ஆம் திகதி தனது உறவினர் வீட்டுக்குச் சென்று வருவதாக கூறிச்சென்றவேளை காணாமற் போயுள்ளார். அந்தச் சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லையெனவும் பல்வேறு இடங்களில் தேடியும் தகவல்கள் எவையும் இல்லையெனவும் அவரது தாயார் கவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் 20 ஆம் திகதி பிரமந்தனாறு பகுதியில் விசுவமடு பொதுச்சந்தைக்குச் சென்ற 40 ஆம் வாய்க்கால், 438, பிரமந்தனாறு, விசுவமடுவைச் சேர்ந்த 14 வயதுடைய கோவிந்தசாமி மிதுர்சிகன் என்ற சிறுவனும் காணாமற் போயுள்ளான். இவரை மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் கடத்திச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமற் போன இரண்டு சிறுவர்களும் கடத்தப்பட்டிருக்கலாம் என்று அவர்களின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த விடயத்தில் பல்வேறு இடங்களிலும் முறைப்பாடு செய்யப்பட்டும் எதுவித பதிலும் கிடைக்கவில்லையெனவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (த-6)

## காணிப் பிரச்சினையைத் தீர்க்க நடமாடும் சேவைகள் ஏற்பாடு

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில்

புதுக்குடியிருப்பு,டிசெ.1

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவு மக்களின் காணிப்பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் செயலகத்தின் காணி அலுவலகப் பிரிவினால் கிராம சேவகர் பிரிவு தோறும் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளதாக உதவிப் பிரதேச செயலர் ஐ. பிரதாபன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு தமது காணிப் பிரச்சினை தொடர்பில் தினமும் மக்கள் வந்துசெல்கின்றனர். இதனால் அவர்களுக்கு நேர விரயமும், பணச் செலவும் ஏற்படுகிறது. இந்த நிலையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தச் சேவையை நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் தேவிபுரம், வள்ளிபுனம், உடையார் கட்டு தெற்கு, உடையார் கட்டு வடக்கு, சுதந்திரபுரம் ஆகிய இடங்களுக்கான சேவைகள் தேவிபுரம் கிராம அலுவலகத்தில் நடைபெறும்.

விசுவமடு மேற்கு, விசுவமடு கிழக்கு, வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், தேராவில் ஆகிய பகுதிகளுக்கு வள்ளுவர் புரம் பொதுநோக்கு மண்டபத்தில் பிரதி வியாழக் கிழமைகளில் சேவைகள் நடைபெறும்.

மல்லிகைத்தீவு, மந்துவில், சிவநகர், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம், கோம்பாவில், மன்னாகண்டல், இரணைப்பாலை ஆகிய இடங்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் சேவை நடைபெறும்.

இந்தத் தினங்களில் காணி அலுவலர், மீள்குடியேற்ற உத்தியோகத்தர், அந்தந்த கிராமங்களுக்கான கிராம அலுவலர் ஆகியோர் மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பர்.

இந்தச் சேவை மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதால் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸுடன் இணைந்து வைத்தியசாலையில் கடமையாற்றும் தொண்டர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ. செல்வரஞ்சன் தெரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். போதனா வைத்தியசாலைக்கு தற்போது அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர். விடுதிகளில் தங்கி சிகிச்சையும் பெற்று வருகின்றனர். இதன் காரணமாக நோயாளர்களுக்கு வேண்டிய முதலுதவிகளை செய்வதற்கு போதுமான ஆளணி எம்மிடம் இல்லை.

தற்போது கடமையில் இருக்கும் தொண்டர்கள் விடுதிகள் மற்றும் கிளினிக் பிரிவுகளில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் தற்போது வைத்திய சாலையில் திடீர் நோய்கள், தொற்று நோய்கள், விபத்து போன்ற காரணங்களால் அதிக எண்ணிக்கையினர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர்.

**தற்போது கடமையில் இருக்கும் தொண்டர்கள் விடுதிகள் மற்றும் கிளினிக் பிரிவுகளில் கடமைக்கு அமர்த் தப்பட்டுள்ளனர்.**

இந்த நிலையில் இருக்கக் கூடிய ஆளணிகளைக் கொண்டு உரிய சேவையை நோயாளிகளுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸுடன் இணைந்து தொண்டர்களாகக் கடமையாற்ற தகுதியுடையவர்கள் முதலுதவி செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலரும் தொண்டர்களாக சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆர்வமுடையவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மேலும் தெரிவித்தார். (ம-14)

# வன்னியில் கைவிட்ட வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து விற்பனை

## படையினர் ஏலத்தில் விற்றதாக கூறுகிறார் டி.ஐ.ஜி

யாழ்ப்பாணம், டிசெ. 1

இறுதிக்கட்டப் போரில் பொதுமக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் இராணுவத்தினரால் ஏலவிற்பனை மூலம் விற்கப்பட்டு வருவகின்றன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இறுதிக்கட்டப் போரில், முல்லைத்தீவில் பொதுமக்களாலும், அரச திணைக்களங்களாலும் கைவிடப்பட்ட வாகனங்களைச் சட்ட விரோதமாகக் கொண்டு வந்து ஏழாலைப் பிரதேசத்தில் வைத்து இரும்பாக்கித் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதாக இந்தக் கூட்டத்தில் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் குற்றஞ்சாட்டினார்.



இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், ஏழாலைப் பிரதேசத்தில் மேற்படி வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் இராணுவத்தினரால் ஏலத்தில் விற்பனை செய்த பொருள்களையே, கொண்டுவந்து இரும்பாக்கி விற்பனை செய்கின்றனர். - என்று பதிலளித்தார்.

இறுதிக்கட்டப் போரில் கைவிடப்பட்ட அரச வாகனங்களை மீண்டும் அந்தத் திணைக்களத்திடமே இராணுவம் மீள ஒப்படைத்திருக்க வேண்டும் என்று சுகிர்தன் அங்கு தெரிவிக்க, அவை அரச சொத்து என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று பதிலளித்தார் எரிக்பெரேரா.

சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான, 2006 ஆம் ஆண்டு பதிவு செய்த EP LW-0189 என்ற இலக்கமுடைய வாகனம் ஏழாலைப் பிரதேசத்தில் வியாபாரம் செய்பவர்களால் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

நாம் மேற்படி சட்ட விரோத இரும்பு விற்பனை தொடர்பாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து எமது பிரதேச எல்லைக்குள் இருந்த வாகனங்களை எல்லாம் அப்புறப்படுத்திச் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிக்குள் கொண்டு சென்றுள்ளனர் என்று சுகிர்தன் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து எரிக் பெரேரா, இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் பார்த்துக்கொள்கின்றேன்.

ஏழாலையில் உள்ள குறித்த விற்பனை நிலையம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத் தீவில் ஏலவிற்பனையில் கொள்வனவு செய்யும் வாகனங்களை, இங்கு கொண்டு வருவது ஏன்? நேரடியாக அங்கிருந்து தென்பகுதிக்குக் கொண்டுசெல்ல வேண்டியதுதானே.

இங்கு கொண்டுவந்து தென்பகுதிக்கு அவற்றை ஏற்றுவதால், யாழ்ப்பாணத்தில் திருட்டுப் போகும் வாகனங்களும் இவ்வாறு கொண்டு செல்லப்படலாம் என்று பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் மேலும் கூறினார். (த-5)

## மாற்றுவலுவுடைய பயனாளிகளுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.1

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறு வனம் பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஊர் காவற்றுறை பிரதேச செயலகத்தில் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் திருமதி ஜே.கணேசமூர்த்தி தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஊர்காவற் றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு நடமாடும் உபகரணங்களான சக்கர நாற்காலி, தோள் மூட்டு ஊன்றுகோல், முழங்கை ஊன்று கோல் ஆகியன வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் ஊர்காவற் றுறைப் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் எம்.ஜெயகாந்தன் கௌரவ விருந்தினராகவும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மாவட்ட அதிகாரி மருத்துவர் பி.அருணா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். ஜெய்ப்பூர் நிர்வாகச் செயலர் இ.இரத்தினசிங்கம் சிறப்பு உரை நிகழ்த்துவார். (ம-13-14)



சாவகச்சேரி நகர சபையின் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினவிழா நேற்று முன்தினம் நகரசபை கேட்போர் கூடத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. முதியோர்கள், சிறுவர்கள், சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து செங்கம்பள வரவேற்புடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (3-9)

# நீதியரசருக்கு எதிரான பிரேரணை உடன் வாபஸ் பெறப்பட வேண்டும்

## யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.1

உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையை வாபஸ் பெறுமாறு யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ். நீதிமன்ற நூலகத்தில் புதன்கிழமை முற்பகல் நடைபெற்றது. அதன் போதே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு நீதி நிர்வாகம் சுமுகமாகப் போகத் தடையாக இருக்கக் கூடாது. நாட்டின் ஏனைய இடங்களிலும் நீதி நிர்வாகத்துக்குத் தடையாக இருக்கக் கூடாது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நீதியரசருக்கு எதிரான பிரேரணை வாபஸ் பெறப்பட வேண்டும்.

நீதி நிர்வாகம் சுமுகமாக இயங்குவதே . நல்லது. எனவே நீதியரசருக்கு எதிரான பிரேரணையை வாபஸ் பெற வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பான கோரிக்கைக் கடிதம் உரிய தரப்புகளுக்கு இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# சட்ட விரோத மீன்பிடி; சட்டம் இறுக்கமடையும்

## எச்சரிக்கிறார் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ.1

சட்டவிரோத மீன்பிடி முறையான தங்கூசிவலை உபயோகித்தல், இழுவைப் படகுகள் உபயோகித்தல், டைனமற் உபயோகித்தல் ஆகியவற்றுக்கான சட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் மிக இறுக்கமடையும் என்று எச்சரித்துள்ளார் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோத மீன்பிடியால் மீன் இனமும், கடல் வளமும் அழிவடைகின்றன. சட்டவிரோதமான முறையை மீனவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இந்த வருடம் உள்ளூர் இழுவைப் படகுகளுக்கு எதிராக 11 வழக்குகள் யாழ். நீதிமன்றத்திலும் ஒரு வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்திலும் பதிவாகியுள்ளன.

யாழ். நீதிமன்றத்தில் பதிவாகியுள்ள வழக்குகளில் 5 வழக்குகள் எதிர்வரும் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதிவாகிய வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் குருநகர், ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், வேலணை ஆகிய பகுதிகளில் 150 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் உள்ளன. டைனமற் பயன் படுத்தி மீன்பிடித்ததாக 5 வழக்குகளும், கடலட்டை பிடித்ததாக 5 வழக்குகளும், சங்கு பிடித்ததாக 2 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இவற்றைத் தவிர பதிவிலக்கமின்றி, அனுமதிப் பத்திரம் இன்றி மீன் பிடித்த 5 வழக்குகள் பதிவாகியுள்ளன.

**சட்டவிரோத மீன்பிடியால் மீன் இனமும், கடல் வளமும் அழிவடைகின்றன.**

தங்கூசிவலை பாவித்தவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, பிணையில் விடுவித்த பின்னர் அந்த வலைகள் நீதிமன்றத்தின் உத்தரவின்படி எரித்து அழிக்கப்பட்டும் வருகின்றன.

உள்ளூர் மீனவர்கள் சட்டவிரோதமான மீன்பிடி முறையில் ஈடுபடுவதைக் கண்காணிப்பதற்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க கிராம மட்ட அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்வரும் வருடத்தில் மிக இறுக்கமாக சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரி நீர் பங்கீட்டு விவகாரம் தோல்வியில் முடிந்தது பேச்சு

## தமிழக, கர்நாடக முதல்வர்கள் சந்திப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷட்டரும் நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்துள்ளது.

சுமார் 40 நிமிடம் நடைபெற்ற இந்த பேச்சின்போது, தமிழக காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் நிலை, சம்பா பயிர் கருகி விடும் அபாயம், தமிழகத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சி நிலை இவைகளைப் பற்றி தமிழக முதல்வர் எடுத்துக் கூறினார்.

மேலும் மேட்டூர் அணையில் 16 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே உள்ளது என்றும் அதிலும் 5 டி.எம்.சி. தண்ணீர் மீன்களின் நலனுக்காக விட்டு வைத்தால் மீதமுள்ள தண்ணீர் 6 தினங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். அத்தோடு 15 தினங்களுக்கு 30 டி.எம்.சி. தண்ணீர் என்ற வகையில் கர்நாடக அரசு தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.



இதற்குப் பதில் அளித்துப் பேசியுள்ள கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷட்டர், கர்நாடக அணைகளில் நீர் இருப்பு மிகக் குறைவாகவே உள்ளது. கர்நாடக விவசாயிகளுக்கே தண்ணீர் போதாது என்றும் கூறி தமிழக முதல்வரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார். அத்துடன் தமிழக விவசாயிகள் புதிய பாசன முறையைக் கண்டுபிடித்து பயிர் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஷட்டருடனான பேச்சுக்குப் பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதா கருத்துத் தெரிவிக்கையில், உச்சநீதிமன்றம் கூறியதால் தான் ஷட்டருடன் பேச்சு நடத்த முன்வந்தேன். பேச்சின் விவரங்களை உச்சநீதி மன்றத்துக்குக்கொண்டுசெல்வோம் என்றும் கூறியுள்ளார். (வ)



டில்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தபால் தலை ஒன்றை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட்டு வைத்தார். அருகில் மத்திய அமைச்சர் கே.வி. தோமஸ்.

# அமிர்தசரஸ் பொற்கோயிலை தாக்க தீவிரவாதிகள் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை



அமிர்தசரஸ், டிசெ.1

கசாப் மரணத்துக்குபழிக்கு பழியாக அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் மீது தீவிரவாதிகள் விரைவில் தாக்கக் கூடும் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரைஅமிர்தசரஸுக்குப்பாகிஸ்தானில் இருந்து சுமார் 1,950 முறை பேசப்பட்ட தொலைபேசி அழைப்புகளை இடைமறித்துக் கேட்டதை அடுத்து, மத்திய உளவுத் துறை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மும்பைத் தாக்குதல் குற்றவாளியான அஜ்மல் கசாப் தூக்கிலிட்ட பின்னர் தலிபான் தீவிரவாதிகளால் பொற்கோயிலுக்கு ஆபத்து உள்ளதாக உளவுத்துறை கூறியுள்ளது. இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பொற்கோயில், ஜாலியன் வாலாபாக் மற்றும் துர்கையானா கோயில் ஆகிய இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பதற்றமான இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு பதிலளித்த பஞ்சாப் மாநில அரசு, தீவிரவாத தாக்குதலை எதிர்கொள்ளும் திறன் தங்களிடம் உள்ளது என்று கூறியுள்ளது. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பொற்கோயில், ஜாலியன் வாலாபாக் மற்றும் துர்க்கையானா கோயில் ஆகிய இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகப் பஞ்சாப் மாநில அரசு விளக்கம் அளித்துள்ளது.(வ)

## உலகில் நீதி நிர்வாக முறையில் 78 ஆவது இடத்தில் இந்தியா

உலகில் நீதி நிர்வாக முறையில் இந்தியா 78 ஆவது இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

உலக நீதிநிர்வாக திட்டம் என்ற அமைப்பு, உத்தரவாத மான அனைத்து சிவில் நிர்வாக வாய்ப்புகள் தொடர் பாக 97 நாடுகளில் ஆய்வு நடத்தி,சட்டத்தின் ஆட்சிக் குறியீடு-2012 என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனைத்து பிரிவு மக்களுக்கும் எல்லாவிதமான உரிமைகளும் கிடைக்கும் வாய்ப்புள்ள நாடுகளில் இந்தியா 78ஆவது இடத்தில் உள்ளது. சுதந்திரமான நீதிமுறை, பேச்சுரிமையைப் பாதுகாப்பது, வெளிப்படையான அரசு இவற்றில் இந்தியா உலகளவில் 50ஆவது இடத்திலும், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் 4ஆவது இடத்திலும் உள்ளது.

# மேட்டூர் அணை நீரில் மூழ்கியிருந்த நந்தி சிலை, ஆலயக் கோபுரக் காட்சி

## 8 வருடங்களின் பின்னர்

மேட்டூர், டிசெ.1

மேட்டூர் அணை நீரில் மூழ்கியிருந்த நந்தி சிலை, ஜலகண்டேஸ்வரர் கோயில் கோபுரம் மற்றும் தேவாலய கோபுரம் எட்டு ஆண்டுகளுக்கு பின் முழுமையாக நீருக்கு வெளியே தற்போது காட்சியளிக்கின்றன.

மேட்டூர் அணை கட்டும் முன் நீர்பரப்புப் பகுதியில் அதிகமான கிராமங்கள் இருந்தன. வழிபாட்டுக்காக கட்டப்பட்ட ஜலகண்டேஸ்வரர் கோயில், அதன் அருகில் நந்தி சிலை, அங்கிருந்து, ஒரு கிலோ மீற்றர் தொலைவில் தேவாலயம் ஆகியவை கட்டப்பட்டிருந்தன. அணை கட்டி நீர் தேக்குவதற்காக கிராம மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆனால், குடியிருப்புகள், வழிபாட்டுத்தலங்கள் அப்படியே இருந்தன. மொத்தம், 120 அடி கொண்ட மேட்டூர் அணையின் நீர் மட்டம் 82 அடியாக குறையும்போது,



தேவாலய இரட்டைக் கோபுர முகப்பும் 69 அடியாக குறையும் போது நந்தி சிலையின் தலையும் வெளியில் தெரியும். 2004 ஆம் ஆண்டு, நீர் மட்டம், 29 அடியாக குறைந்ததால் நந்தி சிலை, தேவாலய கோபுரம் முழுமை யாகத் தெரிந்தன. எட்டு ஆண்டுக்கு பின் தற்போது, மேட்டூர் அணை நீர் மட்டம், 47 அடியாக குறைந்த நிலையில், அணை நீரில் மூழ்கியிருந்த நந்தி சிலை, ஜலகண்டேஸ்வர் கோயில் கோபுர முகப்பு, தேவாலய கோபுரம் ஆகியவை நீருக்கு வெளியே முழுமையாகக் காட்சியளிக்கின்றன. சேலம் மாவட்டம்உட்பட, பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகள் இந்தக் காட்சியை ஆவலுடன் பார்த்துச் செல்கின்றனர்.(வ)

## பா.ஜ.கவிலிருந்து விலகினார் எடியூரப்பா



பாரதீய ஜனதா கட்சியிலிருந்து கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா முறைப்படி நேற்று விலகினார். இதனையடுத்து தனது ராஜினாமாக் கடிதத்தை பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரிக்கு எடியூரப்பா அனுப்பி வைத்தார்.

40 வருட கால பா.ஜ.க. உறவுக்கு முற்றுப் புள்ளி வைத்தார். மேலும் எதிர் வரும் 9 ஆம் திகதி புதிய கட்சியை ஆரம்பிக் கவுள்ளார்.

# மகனின் கொடுமை தாங்காது பிச்சை எடுக்கும் ஆசிரியர்

## கலாநிதி பட்டம் பெற்றவருக்கு இந்தக் கதி



ஜெய்ப்பூர், டிசெ.1

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரின் வீதிகளில், இரண்டு தடவை கலாநிதி பட்டம் பெற்ற ஆசிரியர் மகனின் கொடுமையால் பிச்சை எடுத்து வருகிறார்.

சமஸ்கிருத மொழியில் இரண்டு கலாநிதி பட்டம் பெற்ற தினேஷ் திவிவேதி (வயது 50) என்ற பெயருடைய அவருக்கு மாதம் 35 ஆயிரம் ரூபா ஓய்வூதியமும் கிடைக்கிறது.

அவரது குழந்தைகள் மூன்று பேரில் ஒரு மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. ஒரு மகள் மற்றும் ஒரு மகனுடன் வாழ்ந்து வரும் அவரை போதைக்கு அடிமையான அவரின் 25 வயதான மகன் அடித்து துன்புறுத்துவதால் பிச்சை எடுப்பதாகக் கூறுகிறார். இதுதொடர்பில் அயல் வீட்டில் வசிப்பவர்கள், போதைக்கு அடிமையான அவன் அவனது தந்தையையும் தங்கையையும் [illegible] துன்புறுத்தி வருகிறான் என்றே கூறுகிறார்கள்.

# நேரடி அந்நிய முதலீடு குறித்து வாக்கெடுப்புடன் கூடிய விவாதம்

## சபாநாயகர் அனுமதி



டில்லி, டிசெ.1

சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீட்டு அனுமதி அளிக்கப்பட்ட விவகாரத்தில் வாக்கெடுப்புடன் கூடிய விவாதத்துக்கு லோக்சபா சபாநாயகர் மீரா குமார் அனுமதி வழங்கியுள்ளார்.

விவாதம் நடத் தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகியது.

நிலக்கரிச் சுரங்க முறைகேடு தொடர்பாககடந்தமழைக் கால கூட்டத்தொடர் முழுவதும் முடங்கிய நிலையில், சில முக்கிய பிரேரணைகளை நிறைவேற்ற நாடாளுமன்றத்தை முழுமையாக நடத்த காங்கிரஸ் முயற்சி செய்து வருகிறது.

இந்தக்கூட்டத்தொடரில், சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு விவகாரத்தில் வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் நடத்த பாரதீய ஜனதா கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

ஆனால் மத்திய அரசு தொடர்ந்து இதற்கு மறுப்புத் தெரிவித்து வந்த நிலையில் கடந்த புதன்கிழமை லோக்சபா மற்றும் ராஜ்யசபா எதிர்க்கட்சித்தலைவர்களை மத்திய அமைச் சர் கமல்நாத் சந்தித்துப் பேசினார்.

இதில் எவ்வித சமரசமும் ஏற்படவில்லை, வாக்கெடுப்புடன் கூடிய விவாதத்தில் பா.ஜ.க. உறுதியாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை லோக்சபா ஆரம்பமாகியதும் இந்த விவகாரத்துக்கு வாக்கெடுப்புடன் கூடிய விவாதத்துக்கு அனுமதியளிப்பதாக சபா நாயகர் மீரா குமார் அறி வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்துக்கு ஐ.நாவின் பார்வையாளர் அந்தஸ்து

நியூயோர்க், டிசெ.1

பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் தீர்மானம் தொடர்பாக ஐ.நாவில் வாக்கெடுப்பு நடந்தது. அதன் மூலம் ஐ. நா. சபையின் உறுப்புரிமையற்ற பார்வையாளர் நாடு என்ற அந்தஸ்து பலஸ்தீனத்துக்குக் கிடைத்துள்ளது.

பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசீர் அரபாத்தின் முயற்சியால் பலஸ்தீனம் தனி நாடானது. இருப்பினும் இந்த நாடு ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்படாமல் உள்ளது. இதனால் இராணுவம் அமைப்பது, ஆயுதங்களை வாங்குவது, எல்லைகளை வரையறுப்பது போன்றவற்றை பலஸ்தீனத்தால் மேற்கொள்ள முடியவில்லை.




இந்நிலையில் பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கும் தீர்மானத்தின் மீது ஐ.நா. சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜேர்மன், இஸ்ரேல், பிரிட்டன் ஆகிய நாடுகள் இந்த தீர்மானத்தை எதிர்த்தன. ஐ.நா. சபையில் மொத்தமுள்ள 193 உறுப்பு நாடுகளில், 126 நாடுகள் அதன் இறையாண்மையை அங் கீகரித்து உள்ளன. ஐரோப் பிய நாடுகளான பிரான்ஸ், டென்மார்க், சுவிற்சர்லாந்து, போர்த்துக்கல் ஆகிய நாடு கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

ஐ.நா. யுனெஸ்கோ அமைப்பில் முன்னர் பலஸ்தீனத்துக்கு உறுப்புரிமை கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவில் கடும் பனிப்பொழிவு





ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கடந்த 50 ஆண்டுகளில் காணப்படாத அளவுக்கு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

மொஸ்கோ எங்கும் 12 செ.மீ உயரத்துக்கு பனித்துகள்கள் கொட்டிக் கிடக்கின்றன.

இந்தப் பனிப்பொழிவால் போக்குவரத்துக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மின்சார விநியோக முந்துண்டிக்கப்பட்டுள்ளது.

கடும் பனி மூட்டம் காரணமாக 70இற்கும் மேற்பட்ட விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தீக்குப் பயந்து 8 ஆவது மாடியில் இருந்து குதித்தவர் சாவு



தீயில் இருந்து தப்பிக்க 8 ஆவது மாடியில் இருந்து குதித்தவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள சதார் என்ற இடத்தில் அடுக்குமாடி கட்டடம் ஒன்றில் தீப்பிடித்தது. இதனால் பயந்துபோன ஒருவர் உயிர் பிழைப்பதற்காக 8ஆவது மாடியில் இருந்து கீழே குதித்தார். இதில் படுகாயம் அடைந்த அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அதேவேளை, தீ பிடித்தபோது அந்த கட்டடத்தில் நூற்றுக்கணக்கானோர் சிக்கியிருந்தனர். அவர்கள் அத்தனை பேரையும் சிறு பாதிப்பும் இல்லாமல் மீட்புப் பணையினர் மீட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் விமானத் தாக்குதல்

## 5 குழந்தைகள் உட்பட 15 பேர் சாவு



டமஸ்கஸ், டிசெ.1

சிரியாவின் வர்த்தக நகரான அலெப்போ மீது சிரிய அரசுப் படைகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. இந்த விமானத் தாக்குதலில் 5 குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் மேற்குப் பகுதியில் உள்ள இராணுவ தளங்கள் மீது புரட்சியாளர்கள் தாக்குதலை மேற்கொண் டிருந்தனர். இதற்குப் பதிலடியாகவே அரசுப் படைகள் இந்த விமானத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்த தாக்குதலில் 2 கட்டடங்கள் சேதமடைந்தன என்றும் 5 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிரிய அரசு ஆதரவுப் படைகளுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதல்களில் இதுவரை 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுரையீரல் பாதிப்பால் அவதியுறும் அசாஞ்சே

விக்கிலீக்ஸ் நிறுவுநர் யூலியன் அசாஞ்சே நுரையீரல் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் அசாஞ்சே. பல்வேறு வழக்குகளில் சிக்கிய இவர் லண்டனிலுள்ள ஈக்வடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

பல மாதமாக தூதரகக் கட்டடத்திற்குள்ளேயே முடங்கி கிடப்பதால் அவரது உடல் நிலை அடிக்கடி பாதிக்கப்படுகிறது.

அவருக்கான அனைத்து சிகிச்சை செலவையும் ஈக்வடோர் அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இதுகுறித்து பிரிட்டனுக்கான ஈக்வடோர் தூதர் அனா ஆல்பின் தெரிவிக்கையில்;

"அசாஞ்சே கடுமையான. நுரையீரல் கோளாறினால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகிறார். இது எந்த நேரத்திலும் மேலும் மோசமான நிலையை அடையலாம். முழு மருத்துவ செலவுகளையும் ஈக்வடோர் அரசே ஏற்றுள்ளது. மருத்துவர்கள் தினமும் சென்று அவருடைய உடல் நிலையை சோதித்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்"- என்று தெரிவித்தார்.

## வட கொரிய பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம்

வடகொரியாவின் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பிலிருந்து கிம் ஜாங்-காக் நீக்கப்பட்டுள்ளார். வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னே அமைச்சுப் பொறுப்பில் இருந்து கிம் ஜாங்-கா்க்கை நீக்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராக கிம் ஜாங்-காக் நியமிக்கப்பட்டு 7 மாதங்களே ஆன நிலையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பதவி நீக்கப்பட்ட கிம் ஜாங்-காக்குக்குப் பதிலாக கிம் கியோக்-சிக் நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிம் கியோக்-சிக், தென் கொரியாவின் போர்க் கப்பலை மூழ்கடித்தமை மற்றும் 2010ஆம் ஆண்டில் தென் கொரியா எல்லைப் பகுதிகளில் பீரங்கித் தாக்குதல் நடத்தியமை ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

கிம் ஜாங்-உன், வடகொரிய இராணுவத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க தனக்கு நெருக்கமானவர்களை இராணுவ உயர் பதவிகளில் நியமித்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

# வைத்தியசாலையில் புஷ்




அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 88 வயதாகும் புஷ், தொடர் இருமலால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவரது உதவியாளர் ஜீன் பேகர் தெரிவித்துள்ளார். இது நிமோனியாவாக மாற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் அவர் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சொந்தப் போர்க்கலங்களை அறிமுகப்படுத்தியது ஈரான்

ஈரான் தனது சொந்தத் தயாரிப்பான நீர்மூழ்கிகள் மற்றும் போர்க்கப்பல்களை வெளி உலகிற்கு காட்டியுள்ளது.

அவற்றை அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் அமைந்துள்ள பந்தர் அபாஸில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது இரு காதிர் ரக நீர்மூழ்கிகள் மற் றும் சினா-7 போர்க் கப்பல் போன்றவை அறிமுகப்படுத் தப்பட்டன. காதிர் ரக நீர்மூழ் கிக் கப்பல்கள் ஒரே நேரத் தில் ஏவுகணைகளையும், டொபி டோக்களையும் பயன்படுத்தி தாக்க முடியும் என ஈரான் தெரிவித்துள்ளது.



# திருமணம் செய்துகொள்ள மறுத்த 15 வயதுச் சிறுமி வெட்டிக் கொலை

## ஆப்கானிஸ்தானில் பயங்கரம்

காபூல், டிசெ.1

திருமணம் செய்து கொள்ள மறுத்த 15 வயதுச் சிறுமி கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தத் துயரச் சம்பவம் ஆப்கனில் இடம்பெற்றுள்ளது.

ஆப்கனின் வடக்கு குண்டுஷ் மாகாணத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுமி அங்குள்ள ஆறு ஒன்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். அவ்வேளை அவளை வழிமறித்த இரு மர்ம நபர்கள் அவளது கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அந்த இருவரையும் கைது செய்தனர்.


இருவரில் ஒருவன், தன்னைத் திருமணம் செய்யுமாறு சிறுமியைக் கேட்டுள்ளான். அதற்குச் சிறுமியும் அவரது குடும்பத்தினரும் மறுத்துவிட்டனர். இதனால் கோபமுற்ற அவன் தனது நண்பனுடன் சேர்ந்து குறித்த சிறுமியைக் கொலை செய்துள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# புதன் கோளில் பனிக்கட்டிகள்

சூரியனுக்கு மிக அருகில் உள்ள புதன் கோளின் வட பகுதியில் அதிகளவில் பனிக்கட்டிகள் காணப்படுகின்றன என்று நாசா விண்வெளி மையம் தெரிவித்துள்ளது.

புதன் கிரகத்தைச் சுற்றி நடத்தி வந்த ஆய்வுகள் குறித்து 3 கட்டுரைகளை நாசா வெளியிட்டுள்ளது. புதனைச் சுற்றி ஆய்வு செய்ய நாசா அனுப்பிய மெசன்ஜர் செய்மதி, புதனின் தெற்கு பகுதிக்கு மிக அருகில் வட பகுதியில் தண்ணீர் உறைந்த நிலையில் இருப்பதை கண்டு பிடித்துள்ளது. இதன் அடர்த்தி 1.5 அடி முதல் 6.5 அடி வரை இருக்க வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மெசன்ஜர் செய்மதி 2004ஆம் ஆண்டு புதனுக்கு அனுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . இந்த ஆய்வுகள் அடுத்த ஆண்டு வரை தொடர்ந்து நடைபெறும் என நாசா தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்த லசா பட்ரியா என்பவர் தனது காதுகளால் 8 தொன் நிறையுடைய டிரக் வாகனத்தை 70.5 அடி தூரம் இழுத்துச் சாதனை புரிந்துள்ளார்.

# தற்கொலைத் தாக்குதல்

## பாகிஸ்தானில் 6 பேர் சாவு

பாகிஸ்தானில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 6 பேர் உயிரிந்தனர்.

பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள வரிசிஸ்தான் நகரின் வானா பகுதியில் இந்தக் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் முல்லா நசீர் என்பவரின் காரைக் குறிவைத்தே தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

இதில் தாக்குதலை மேற்கொண்டவர், மூன்று குழந்தைகள் அடங்கலாக 6 பேர் உரிழந்தனர்.

முல்லா நசீர், அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவராவார். இவர் தலிபான்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். முன்னரும் இதுபோன்ற தாக்குதலில் இருந்து முல்லா நசீர் தப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த தாக்குதலுக்கு எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

## போர்க்குற்றங்களில் இருந்து முன்னாள் பிரதமர் விடுதலை

போர்க்குற்றங்கள் தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் பிரதமர் மற்றும் இருவரை சர்வதேச நீதிமன்றம் விடுவித்துள்ளது.

கொசாவோ முன்னாள் பிரதமரும், கொசாவோ விடுதலைப்படை முன்னாள் தளபதியுமான ரமூஸ் ஹரடினாஜ் மற்றும் இவரது சகாக்களான இத்ரிஸ் பலாஜ், லாஹி பிராஹிமாஜ் ஆகியோர் மீது போர்க்குற்றங்கள் புரிந்ததாக தி ஹேக் நகரத்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

1990ஆம் ஆண்டுகளில் தனிநாடு கோரி போராடிய அல்பேனிய கொரில்லா படையினருக்கும், செர்பிய படைகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது.

அப்போது செர்பியர்களையும், அல்பேனியர்கள் அல்லாதவர்களையும் கொன்றதாகவும், சித்திரவதை செய்ததாகவும் ஹரடினாஜ், இத்ரிஸ் பலாஜ் ஆகியோருக்கு எதிராக 6 போர்க் குற்ற வழக்குகளும், லாஹி பிராஹிமாஜ் மீது 4 போர்க்குற்ற வழக்குகளும் பதிவாகின.

இந்த வழக்கின் விசாரணையில் குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை எனக் கூறி மூவரையும் விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

## படகில் இருந்து 5 சடலங்கள் மீட்பு

ஜப்பானின் மேற்கு கரையோரத்தில் காணப்பட்ட கொரியமொழி அடையாளங்களைக் கொண்ட படகு ஒன்றிலிருந்து 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஜப்பானுக்கும் கொரியக் குடாநாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பில் சடோ தீவின் கரையோரத்தில் 10 மீற்றர் நீளமான இந்தப் படகு கரையொதுங்கியதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வயதான ஆண்களின் சடலங்களே இந்தப் படகில் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஊடகங்களின் தரத்தை கண்காணிக்க அமைப்பு

### பிரிட்டன் நீதிபதிகள் பரிந்துரை



பிரிட்டனில் செயற்படும் ஊடகங்களின் தரக் கட்டுப்பாடுகளைசக் கண்காணிக்க சட்டத்தின் பின்புலத்துடன் கூடிய சுயாதீன அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என நீதிபதிகள் பரிந்துரை செய்துள்ளனர்.

'நியுஸ் ஒப் த வேல்ட்' பத்திரிகை தொடர்பில் எழுந்த சர்ச்சைகளால், இது தொடர்பில் ஆராயுமாறு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் நீதிபதிகள் கொண்ட குழுவொன்றை நியமித்திருந்தார். அந்தக் குழுவே இவ்வாறு கூறியுள்ளது.

ஊடகங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லாமல் விசாரித்து தீர்ப்புக் கூறக்கூடிய தீர்ப்பாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

இந்த பரிந்துரைகள் மூலம் ஊடகங்களுக்கு எதிராக முறைப்பாடுகளை தெரிவிப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியும் என நம்பப்படுகின்றது.

ஊடகத்துறைக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவு, இரண்டு தரப்புக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் குறைவடையும் பிறப்பு வீதம்

அமெரிக்காவில் கடந்த வருடங்களில் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பிறப்பு வீதம் 8 ஆகக் குறைவடைந்துள்ளது.

1920 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2011 ஆம் ஆண்டிலேயே குறைந்தளவான பிறப்பு வீதம் பதிவாகியுள்ளது.

கடந்த வருடம் 3.95 மில்லியன் பிறப்புக்கள் அமெரிக்கா முழுவதும் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் பிறப்பு வீதத் தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் 90 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா 05.11.2012 அன்று மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.த.பத்மானந்தன் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் கௌரவ **றிசாத் பதியூதீன்** அவர்களால் மாவட்டத்தில் சிறந்த கூட்டுறவாளராகத் தெரிவு செய்யப்பட்ட விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் Dr. **வ.பத்மநாதன்** அவர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். 2011 - 2012 என தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் மாவட்டத்தின் முதல்தர சங்கமாக தெரிவு செய்யப்படுவதற்கு வழிகாட்டிய எமது தலைவர் அவர்கள் பொதுவாழ்வில் அகமகிழ்ந்து நற்சேவையாற்றப் பல்லாண்டு காலம் வாழ்கவென [illegible]

பணியாளர்கள், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு.

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 6 - 11 வரை கணிதம்
தரம் 10, 11 இற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும்
ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0773501726

(25962)(2.8.7)

**பல் வைத்தியர் தேவை**

கொழும்பு கொட்டாஞ் சேனையில் இயங்கும் பிரபலமான கிளினிக் ஒன்றுக்குப் பல் வைத்தியர் உடன் தேவை.
தொடர்பு:
311, ஜம்பட்டா வீதி, கொழும்பு - 13.
T.P. 011 2421882, 0772912958

(25961)(2.8.7)

# மணி விழா நாயகிக்கோர் மணியாரம்



## செல்வி முருகேசு சகுந்தலாதேவி

(B.Com, PGDE)

(ஆசிரிய ஆலோசகர் வணிகக்கல்வி, யாழ்ப்பாண கல்வி வலயம்)

ஆசிரிய சேவை
01.07.1981-31.03.1989 - வ/வவுனியா மத்திய மகாவித்தியாலயம்
01.04.1989-31.12.1989 - யா/வட இந்து மகளிர் கல்லூரி
01.01.1990-07.01.1991 - கோ/விவேகானந்தா கல்லூரி
08.01.1991-30.06.1998 - வ/வவுனியா மத்திய மகா வித்தியாலயம்
ஆசிரிய ஆலோசகர் சேவை
01.07.1998-30.04.1999 - வலயக் கல்வி அலுவலகம், வவுனியா
01.05.1999-31.12.1999 - வலயக் கல்வி அலுவலகம், திருகோணமலை
ஆசிரிய சேவை
01.01.2000-02.01.2002
- தி./உவர்மலை விவேகானந்தா கல்லூரி
03.01.2002-09.06.2004
- யா/இந்து மகளிர் கல்லூரி
ஆசிரிய ஆலோசகர் சேவை
[illegible] இன்றுவரை
- வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்



ஓய்விலும் இன்பம் துய்த்து
ஒய்யார நடைபயின்று
பொற்பெரும் கனி அமுதாய்
நற்புகழ் பெற்று வாழ்க.

வணிக ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாண கல்வி வலயம்,
யாழ்ப்பாணம்.

(25898)(10.9)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் பிரதேசங்களை கிழக்கில் பாதுகாக்க வேண்டும்

## தேசிய மரபுரிமை அமைச்சரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,டிசெ.1

கிழக்கு மாகாணத்தி லுள்ள தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாக்குமாறு பொது பலசேன அமைப்பினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**புதையல் தோண்டும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது பலசேன அமைப்பினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.**

தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த பாலசூரியவுடன் தொல்பொருள் திணைக்களத்தில் இடம்பெற்ற பேச்சின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதற்குரிய அனைத்து நடவடிக் கைகளும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த பாலசூரிய பௌத்த தேரர்களிடம் உறுதியளித்தார்.

இதேவேளை, அம்பாறை, திருக்கோவிலுள்ள தொல்பொருள் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஏழு பேர் கடந்த ஞாயிறுக்கிழமை கைது செய்யப்பட்டனர். இந்தப் புதையல் தோண்டும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது பலசேன அமைப்பினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தேசிய நூதனசாலைக்கு முன்னால் ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்தே தொல்பொருள் திணைக்களத்தில் தேசிய மரபுரிமைகள் அமைச்சருடனான பேச்சில் பொதுபல சேன அமைப்பினர் கலந்து கொண்டனர். (ச)

## மர்மமாக உயிரிழக்கும் பிராணிகள்



மட்டக்களப்பு,டிசெ.1

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள மிருகங்கள் மர்மமான முறையில் உயிரிழக்கின்றன.

வெல்லாவெளி குளத்தில் இருந்த முதலை மற்றும் அப்பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த மாடு ஒன்றும் இவ்வாறு இறந்துள்ளன.

இதேவேளை, கடந்த வாரமும் இவ்வாறு மர்மமான முறையில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட மாடு ஒன்றும் இறந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வயல்களுக்கு கிருமிநாசினிகளை வீசிவீட்டுப் பாத்திரங்களை இந்த குளத்தில் கழுவுகின்றமையால், நஞ்சு கலந்த நீரை மிருகங்கள் பருகியதனால் அவை இறந்திருக்கலாம் என்று பொது மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (ச)

# றோஹண நிகழ்வுக்கு அனுமதி; கார்த்திகை வழிபாட்டுக்கு தடை

## சாடுகிறார் கூட்டமைப்பு மாகாண உறுப்பினர் ஜனா

மட்டக்களப்பு,டிசெ.1

பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களது உயிர்களைக் காவு கொள்ளக் காரணமாக இருந்த ஜே.வி.பி ஸ்தாபகத் தலைவர் றோஹண விஜயவீரவின் நினைவு தினத்தை தென்பகுதியில் அனுஷ்டிக்க அனுமதி பெற வேண்டிய தேவையில்லை. ஆனால் கார்த்திகை மாதத்தில் தமிழர் பகுதிகளில் இந்துமக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு படையினரிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரன் (ஜனா) குற்றம் சாட்டியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்ப் பிரதேசங்களில் இன்று என்ன நடைபெறவேண்டும் நாளை என்ன நடைபெற வேண்டும் என்பவற் றைத் தீர்மானிப்பவர்கள் பொலிஸ், இராணுவ அதிகாரிகளே தவிர சிவில் அதிகாரிகளல்லர்.

வடக்கு, கிழக்கில் வறட்சியோ, வெள்ளமோ அல்லது வேறு எது நடந்தாலும் அதற்கான நிவாரணம் வழங்குவதைக்கூட தீர்மானிப்பது சிவில் அதிகாரிகள் அல்லர்.


அதுவும் கார்த்திகை மாதத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இயற்கை இடர்கள் ஏற்படக் கூடாது. காரணம் கார்த்திகை மாதம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த மாதம். பிரபாகரன் கார்த்திகை மாதத்தில் பிறந்த ஒரு காரணத்துக்காக வடக்கு, கிழக்கில் கார்த்திகை மாதத்தில் எந்த ஒரு நிகழ்வையும் நடத்த முடியாது.

அவ்வாறு ஒரு நிகழ்வை நடத்துவதானால் அது மத நிகழ்வாக இருந்தாலும் சரி அப்பிரதேசங்களில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புத் தரப்பினரது அனுமதியும், அவர்களது பிரசன்னமும் அவசியம். இது எழுதப்படாத சட்டம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பிரதேச செயலகப் பிரிவுகளில் வறட்சி நிவாரணம் வழங்க இருந்தவேளை அவை பாதுகாப்புத் தரப்பினரது அழுத்தங்களால் நிறுத்தப்பட்டதாக நம்பத்தகுந்த வகையில் தெரியவருகிறது.

எனவே, கார்த்திகை அழுத்தம் எம் இன விடுதலைக்கும் இன எழுச்சிக்கும் அத்திபாரமாக அமையும். இதை இலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் புரியவைக்க எமது சக்தியை பயன்படுத்துவோம்.

எனவே கார்த்திகை அழுத்தம் கூட தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துமே ஒழிய அதற்கு தடையாகாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (ச)




இலங்கை சுற்றுலாத்துறையின் வளர்ச்சி, செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு திருகோணமலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, கிழக்கு மாகாண விவசாய கால்நடை மீன்பிடி கிராமிய அபிவிருத்தி சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மின்சாரம் தாக்கி 4 யானைகள் சாவு



மட்டக்களப்பு,டிசெ.1

மட்டக்களப்பு, வாகனேரி பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நான்கு யானைகள் உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வடிகாலுக்குள் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.1

மட்டக்களப்பு, கரடியனாறு பழைய பொலிஸ் நிலையத்தின் கழிவு நீர் வடிகாலுக்குள் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டது.

கைக்குண்டு ஒன்று கழிவு நீர் வடிகாலுக்குள் இருப்பதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கைக்குண்டு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உரிமைகளை இழந்த தமிழ் சமூகம் கல்வி மூலம் மீண்டெழ வேண்டும்

## காரைதீவு பிரதேச சபைத் தலைவர் சொல்கிறார்

அம்பாறை,டிசெ.1

கடந்த காலப் போரால் உரிமைகள் இழந்து, உறவுகளை இழந்து நிர்க்கதி நிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழ் சமூகம் கல்வி மூலம் மீண்டெழ வேண்டும். இந்த நாட்டில் உரிமை பெற்ற சமூகமாக வாழ இதுவே வழி வகுக்கும் என்று அம்பாறை, காரைதீவு பிரதேச சபைத் தலைவர் செல்லையா இராசையா தெரிவித்தார்.

காரைதீவு சமூக மாணவர் கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பு நடத்திய ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு விபுலானந்தா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்கால நற்பிரஜைகளாக மாணவர்களை உருவாக்குவதற்கு துறைசார்ந்த கல்வியோடு, ஆத்மீகக் கல்வியும் ஊட்டப்பட வேண்டும் .

சமூகத்தில் நல்ல பணிகளை முன்னெடுக்கும் அமைப்புக்களுக்கு நாம் ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும்.

இத்தகைய நல்ல பணிகளை எவர் செய்கிறார்கள் என்பதை நோக்குவதை விடவும், எத்தகைய பணிகளைச் செய்கிறார்கள் என்பதை முதன்மைப்படுத்த வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்ச் சமூகம் கல்வி முன்னேற்றத்தில் மூன்றாம் நிலையிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை மாற வேண்டும். கல்வி முன்னேற்றத்தில் நமது மாணவர்களை முதன்மை நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.



கடந்த முப்பது வருட கால போரால் தமிழ்ச் சமூகம் அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியது. ஆனால் அழிக்கவோ, இழக்கவோ முடியாத சொத்தாகக் கல்வி இருந்து வருகிறது.

தமிழ்ச் சமூகம் கல்விச் செல்வத்தை ஒருபோதும் இழந்து விட முடியாது. எதிர் காலத்திலும் நமக்கு நிலைத்து நிற்கக் கூடிய ஒரே சொத்து கல்வி மட்டுமேயாகும். -என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு -
advt@uthayan.com
0215671111

## தவறவிடப்பட்டது

செல்வராஜா செல்வகுமார் (அஜந்தன்) 5 ஆம் வட்டாரம் குருநகரை பிறக்கில் வசித்துவருபவர் ஆள் அடையாள அட்டை (850885060V), வாகன அனுமதிப்பத்திரம் Insurance, Tax ஆகிய ஆவணங்களைத் தண்ணீரூற்றில் இருந்து புரிப்புக்கியாயில் தவறவிட்டுள்ளார். இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(24336)(2.6.7) T.P:0774257048


## காணி விற்பனைக்குண்டு

உரும்பிராய் மேற்கு,மானிப்பாய் வீதியில் 5¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: த.இராமகிருஷ்ணன்
உரும்பிராய் மேற்கு.
தொ.பே: 021 300 7512

(25948)(5-6-7)

# ஓராம் ஆண்டு நினைவலை



தாயின் மடியில்
27.05.1929

ஆண்டவன் அடியில்
13.12.2011

## அமரர் செல்லையா கணேசன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

தாங்கிய மார்பினில் தூங்கிட வைத்து
துயிலெழ உணவையும் அகரமும் ஊட்டி
பாங்குற ஆங்கிலம் புலம்புகழ் ஆசான்
பேறென பெற்ற பிள்ளைகள் நாமும்
ஓங்கவே கல்வியை ஏற்றமாய் கற்று
என்றுமே உயர்நிலை உய்த்திட செய்தவர்
நாங்களும் நிமிர்ந்து நிலைபெற வைத்தெமை
நீள்துயில் அப்பாவை நாளும் துதிப்போமே

உங்கள் பிரிவால் துயருறும்
க.கிரிதரன் (மகன்) அதிபர்,
பகுதிநேர விரிவுரையாளர் OUSL
மற்றும் குடும்பத்தினரும்.

அமிர்தராகம், நாவலடி,
உடுப்பிட்டி.

(25629)(2-6-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26.11.1988

மறைவு
13.12.2011

## செல்வநாயகம் கோபிநாத்

(யாழ்.பல்கலைக்கழகம் - விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு மாணவன்)

ஓய்ந்து விட்டது கடலலை
என்றெண்ணலாமோ
ஓராண்டு சென்ற பின்னும்
ஓயவில்லையடா உன் நினைவலைகள்
மாலைவந்ததும்
மறைந்துவிட்டது சூரியன் என்றெண்ணலாமோ
எம் மனதை விட்டு
மறையவில்லையடா உன் உருவ நிலைகள்
மரணபயம் எமக்குள்ள போதும்
அங்கு நீ உள்ளாய் என்று மனம் திருத்தி
ஆண்டவனை வேண்டுகிறோம் - உன் ஆத்ம சாந்திக்காக

உன் நினைவுகளுடன்
கரவெட்டி தெற்கு, கரவெட்டி. குடும்பத்தினர்.

## விபத்தில் காயம்

பாடசாலைக்கு சைக்கிளில் வீதியால் சென்று கொண்டிருந்த ஆசிரியர் டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதால் இடுப்புப் பகுதி முறிவடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் ஒரு பிள்ளையின் தாயாரான டொமினி ஜீவா ராஜிதா (வயது-36) என்பவர் கொக்குவில் பிறவுண் வீதியூடாக நேற்று முன்தினம் காலை சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அவ்வேளையில் வீதித் திருத்தப் பணிகளுக்காக மணல் ஏற்றிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்தின் பின்பகுதியுடன் மோதுண்டுள்ளார்.

இதன் காரணமாக டிப்பரின் பின்பக்கச் சில்லுக்குள் சிக்குண்டு இடுப்புப் பகுதி முறிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டனர். (ம-14)


* * *

மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டதில் இளைஞருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது. சாவகச்சேரி அரசடியைச் சேர்ந்த செல்வநாயகம் சிறிகாந்த் (வயது-24) என்பவர் கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## மருத்துவமுகாம்

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் முதலாவது இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அண்மையில் குடத்தனை தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் லயன் வேதாபரணம் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மந்திகை ஆதார வைத்தியசாலை மருத்துவர் க.செந்தூரன், லயன் மருத்துவர் உமாபதிசிவம் ஆகியோர் . கலந்து கொண்டு நோயாளர்களைப் பாரிசோதித்தனர். முகாமில் 180 பேர் கலந்துகொண்டனர். கண், நீரிழிவு, இரத்த அமுக்கம் மற்றும் தொற்றாநோய்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. கண்பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 60 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. பரிசோதனை முகாமில் குடத்தனை, அம்பன், நாகர் கோவில் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர் என்று கழகச் செயலாளர் தெரிவித்தார். (ம-9)

# 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 27 |
| 08 | 11 |
| 1933 | 2007 |

திதி :திருதியை

## அமரர் தம்பையா கார்த்திகேசு

ஓடி விட்டது ஐந்து வருடங்கள் ஆனால்
கல்லில் எழுத்துப்போல் உங்கள் நினைவுகள்
எத்தனை வருடங்கள் உருண்டோடினாலும்
உங்கள் இழப்பு வருத்தத்தைத்தான் தரும்

ஆறாத நினைவுகளுடன்:
கைதடி மேற்கு, கைதடி. குடும்பத்தினர். (25931)(6.7.8)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்



கடந்த 03.11.2012 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் இளையதம்பி காராளசிங்கம்

(இளைப்பாறிய அதிபர் காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெற்று சபிண்டீகரணக் கிரியை (03.12.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது பேரிழப்பின்போது துயர் பகிர்ந்தும், பல வழிகளிலும் உதவிய சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி பூபதி (மங்களம்) மனைவி, பிள்ளைகள்
லயன் க.சிவபாலன் M.J.F (J.P)
நவநிதி குடும்பத்தினர். மருமக்கள். வவுனியா.
0776152225

தாமரைக்குளத்தடி,
துன்னாலை, கரவெட்டி.

(24335)(2.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி யோகநாதன் யோகதேவி (மம்மி)



யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு, புதுச்செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, குருமன்காட்டை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட யோகதேவி யோகநாதன் 27.11.2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் யோகநாதன் (இளைப்பாறிய முகாமையாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் - நீலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுரேஸ்ராம் மற்றும் பாலேஷ்ராம் (பிரான்ஸ்), தேவிப்பிரியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், சுபாலினி (வத்தளை), காயத்திரி (பிரான்ஸ்), சிவகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியும், சச்சிதானந்தன், நிர்க்குணாநந்தன், கனகசுந்தரம், ஜெயானந்தன், சதானந்தன், விபுலாநந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், கயிலாயநாதன், நித்தியானந்தன், சறோஜினி தேவி, காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் சத்தியபாமா (ருக்மணி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், டிலேஷ்ராம், யுகேஷ்ராம், சுஜானன், ருத்ரா, ஷியாம், சுஜானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் குருமன்காட்டிலுள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக நாளை (02.12.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/40, 4 ஆம் ஒழுங்கை,
குருமன்காடு வவுனியா.
024 222 0401 (24330)(6.8)

தகவல் :
சு.யோகநாதன் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த ஒன்றரை வருட காலமாக கட்டட விஸ்தரிப்பு வேலைகளுக்காக மூடப்பட்டிருந்த வெள்ளவத்தை மூர் வீதி மெதடிஸ்த தேவாலய விஸ்தரிப்பு வேலைகள் பூர்த்தி அடைந்த நிலையில், இன்று முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு கலாநிதி ஏ.டபிள்யூ.ஜெயநேசன் அவர்களால் வழிபாட்டுக்காக மீளவும் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. முன்னர் இருந்த அதே கட்டடக் கலைகள் பேணப்பட்டு 400இற்கும் மேற்பட்டோர் வழிபாடு நடத்தக்கூடியதாக இந்த ஆலயம் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம்

## இப்படிக் கூறுபவர் ஐ.நா. இலங்கைப் பிரதிநிதி கொஹன்ன



கொழும்பு,டிசெ.1

மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என்று ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காஸா நிலப்பரப்பில் இடம்பெற்று வரும் வன்முறைச்சம்பவங்கள் கவலைதரும் விடயமாகும். பலஸ்தீன மக்கள் மீது அடக்கு முறைகள். பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

பலஸ்தீன குடியிருப்புக்கள் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இஸ்ரேல் அரசு சர்வதேச சட்டங்களுக்கு அமைவான முறையில் செயற்பட வேண்டியது அவசியமானது. பலஸ்தீன ஆயுதக் குழுக்களும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.- என்றார். மத்திய கிழக்கு சமாதான நிலைமைகள் குறித்து ஆராயும் விசேட ஐக்கிய நாடுகள் குழுவின் தலைமைப் பொறுப்பை பாலித கொஹன்ன வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 'தமிழ்ச் சங்க ஒழுங்கை' பெயர் சூட்டு விழா நிறுத்தப்பட்டது தவறான தகவலினாலேயே

## பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படும் என்கிறார் வாசு



கொழும்பு,டிசெ.1

கொழும்பு தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள வெள்ளவத்தை 57 ஆவது ஒழுங்கைக்கு 'தமிழ்ச் சங்க ஒழுங்கை' என பெயர் சூட்டும் நிகழ்வு தவறான தகவல்களின் அடிப்படையிலேயே நிறுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மொழிக் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த எமது அமைச்சு பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அமைச்சரவைப் பத்திரங்கள் இப்போது மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தமிழ்ப் பிரதேசத்துக்கு சிங்கள மொழி மூலமும் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள அதிகாரிகளுக்கு தமிழ் மொழி மூலமும் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மொழிக் கொள்கையில் 25 வீதம்தான் நடைமுறையிலுள்ளது. இதை முழுமையாக்க நாம் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கைக்கு பெயர் சூட்டும் விடயத்தில் சிக்கலொன்று ஏற்பட்டது. பிழையான தகவலின் அடிப்படையிலேயே மேற்படி நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், மேல் மாகாண முதல்வர் பிரசன்ன ரணதுங்க இது தொடர்பில் குழுவொன்றைச் சந்தித்துப் பேசவுள்ளார். இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கவும் அவர் எதிர்பார்க்கின்றார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் சேவையாற்றுவதற்கு 3 ஆயிரம் தமிழ் பொலிஸார் தேவையாக உள்ளனர்.-என்றார். (ச-சி)

# தமிழ்ச் சங்கம் ஒழுங்கை சர்ச்சை; 4 இல் அனைத்துத் தரப்புப் பேச்சு

கொழும்பு,டிசெ.1

கொழும்பு, வெள்ளவத்தை 57 ஆவது ஒழுங்கையை கொழும்பு தமிழ்ச் சங்கம் ஒழுங்கை என்று பெயரிடுவதில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக அனைத்துத் தரப்பு பேச்சு நடத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சு எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று மேல்மாகாண சபை உறுப்பினர் எஸ். ராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ராஜேந்திரன் கூறினார்.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இந்தப் பேச்சில் சமுமளித்து கருத்துகளை தெரிவிக்கவுள்ளனர். இதன்போது இந்த விவகாரம் சுமுகமாக முடிவுக்குவரும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# போலி உறுதி தயாரித்து காணியை விற்ற இருவர்

## சிக்கிக் கொண்டனர் சி.ஐ.டியிடம்

கொழும்பு,டிசெ.1

போலி உறுதிப்பத்திரம் தயாரித்து காணியொன்றை விற்பனை செய்த இருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். நீர்கொழும்பிலுள்ள காணி ஒன்றை அதன் உரிமையாளருக்கு தெரியாமல் சந்தேகநபர்கள் விற்பனை செய்துள்ளனர் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காணியை விற்பனை செய்வதற்காக பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (ச)

# புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க நவீன இயந்திரம்

புற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு,டிசெ.1

இலங்கையில் உள்ள புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக உயர்தரத்திலான சக்திமிக்க கதிரியக்க உபகரணங்களையும் தேவையான வசதிகளையும் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் இரண்டாவது கூடுதலான உயிரிழப்பை ஏற்படுத்தும் மோசமான நோயான புற்றுநோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# சமத்துவமின்மை நீடித்தால் தீவிரவாதம் தலைதூக்கும்

## எச்சரிக்கிறார் சந்திரிகா

கொழும்பு,டிசெ.1

இனங்களுக்கு இடையிலான சமத்துவமின்மை நீடிக்கின்றபோது, வன்முறைகள் அதிகரித்து தீவிரவாதம் தலைதூக்கும் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இஸ்லாமிய தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒதுக்கிவைக்கப்பட்ட குழுக்கள் மத்தியில் வறுமை, சமூக அரசியல் அநீதிகள் என்பன கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் என்று அவர் எச்சரித்துள்ளார்.



ஒதுக்கி வைக்கப்பட்ட குழுக்கள் மத்தியில் வறுமை, சமூக அரசியல் அநீதிகள் என்பன கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும்.

சமத்துவமற்ற நிலை தீவிரவாதத்தை கொழுந்துவிட்டெரியச் செய்யும் என்று அவர் மேலும் கூறினார்.(ச)

# ஆள்பதிவு திணைக்களத்தின் செயற்பாடு சனிக்கிழமைகளில்

## சாதாரணதர மாணவர் நலன் கருதி

கொழும்பு,டிசெ.1

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வசதி கருதி இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமையும் ஆள் பதிவுத் திணைக்களம் திறந்திருக்கும் என்று அதன் ஆணையாளர் ஜகத் பீ.விஜேவீர-தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு சில அதிபர்கள் இதுவரையும் விண்ணப்பிக்கவில்லை. அதனால் வார நாள்களுக்கு மேலதிகமாக சனிக்கிழமை நாள்களிலும் ஆள்பதிவுத் திணைக்களம் திறந்திருக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 16 வயதை பூர்த்தி செய்யும் சகல மாணவர்களுக்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எனவே இதுவரையில் தேசிய அடையாள அட்டை பெற்றிராத அல்லது கிடைக்கப்பெற்ற அடையாள அட்டையில் ஏதேனும் அச்சுத் தவறுகள் காணப்படுமாயின் 0112508022, 011 2583122, 0112585043 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆணையாளர் கேட்டுள்ளார். (ச)

# ஐ.தே.க. மாநாட்டுக்கு தடைகோரிய மனு நிராகரிப்பு

கொழும்பு,டிசெ.1

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு எதிராக தடை உத்தரவைப் பிறப்பிக்க கல்கிஸை நீதிமன்றமும் நேற்று வெள்ளிக்கிழமை மறுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக தடை உத்தரவு கேட்டு மேலும் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களையே கல்கிஸை மாவட்ட நீதிமன்றமும் மறுத்துள்ளது. தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்தபோதே, நீதிவான் தடை உத்தரவு பிறப்பிக்க மறுத்துவிட்டார். இந்த மாநாடு இன்று சனிக்கிழமை கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு கோரிய மனுவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நுகேகொட மாவட்ட நீதிமன்றமும் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தினருடன் இருந்துவந்த கசப்புணர்வு நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**இடபம்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும் மனக்குழப்பங்கள் நீங்கும்.

**மிதுனம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கடகம்:** வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். காரஉணவுகளை தவிர்க்கப்பாருங்கள். வீதிகளைக் கவனமாகக் கடந்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் வீண் விவாதம் ஏற்படும்.

**சிங்கம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

## நாளை

கார்த்திகை -17 ஞாயிற்றுக்கிழமை 02.12.2012
திதி: சதுர்த்தி பி.இ 03.40 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ 12.40 வரை
சுபநேரம்: 09.15- 10.45 வரை
ராகுகாலம்: 04.45- 06.15 வரை

**துலாம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. மற்றவர்கள் பிரச்சினையில் தலையிடுவதால் வீண் பழிச்சொல் ஏற்படக்கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**தனுசு:** முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். பிள்ளைகளின் நீண்டநாள் கோரிக்கைகளை பூர்த்தி செய்வீர்கள். அரச வேலைகளில் அநுகூலமான நிலைக் காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும். முன்கோபம் விலகும்.

**கும்பம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

**மீனம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். கையில் பணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | | 5 | 2 |
| 6 | | | 4 | 2 | | 7 | | |
| | | | 9 | | 1 | 3 | 6 | |
| | | 6 | | 3 | | | 7 | |
| | | 9 | 8 | 7 | 2 | 6 | | |
| | 7 | | | 5 | | 2 | | |
| | 3 | 2 | 7 | | 8 | | | |
| | | 7 | | 4 | 3 | | | 9 |
| 1 | 5 | | 2 | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 4 | 8 | 3 | 2 | 1 | 6 |
| 8 | 3 | 6 | 2 | 1 | 9 | 5 | 7 | 4 |
| 1 | 2 | 4 | 6 | 7 | 5 | 9 | 8 | 3 |
| 2 | 6 | 1 | 3 | 9 | 7 | 8 | 4 | 5 |
| 7 | 4 | 5 | 1 | 2 | 8 | 6 | 3 | 9 |
| 9 | 8 | 3 | 5 | 6 | 4 | 7 | 2 | 1 |
| 3 | 1 | 7 | 9 | 5 | 2 | 4 | 6 | 8 |
| 6 | 5 | 8 | 7 | 4 | 1 | 3 | 9 | 2 |
| 4 | 9 | 2 | 8 | 3 | 6 | 1 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்





தாயின் மடியில்
16 * 01 * 1990

ஆண்டவன் அடியில்
13 * 12 * 2011

திதி: அபரபக்க திருதியை
(01.12.2012)

அமரர்
**கணேசமூர்த்தி பார்த்தீபன்** (தீபன்)
[சாரதி-வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்]

ஒரு கணம் கூட நினைக்கவில்லை - அன்று
உன்னை நாம் பிரிவோம் என்று
ஆண்டு ஒன்று ஓடிச் சென்றபோதும் - உன்
அழகிய புன்சிரிப்பும் வெண்ணிற உடலும்
மனதைக் கொள்ளை கொள்ளும் உன் மெல்லிய குரலும்
தினமும் எம் மனக்கண்களில் வந்து வந்து போகுதையா

பார்த்தீபன் என்னும் உன் திருநாமத்தை -அன்பாக
தீபா தீபா என உச்சரிப்பார் பலர் உண்டு
பார்த்தவுடன் முகம் மலர்ந்து புன்னகை செய்வாய் -இன்று
உன்னுடைய திரு உருவப்படம் முன்
தீபம் ஏற்ற வைத்தாயோ ? தீபா
எம்மை விட்டு உன் உடல் மட்டும் சென்றாலும் என்றும்
அழிக்க முடியாத உன் நினைவலைகளில் வாழ்கின்றோம்.

ஆத்தியடி,
துன்னாலை வடக்கு,கரவெட்டி.

குடும்பத்தினர்.
தொ.பே: 021 300 6375
077 198 2690

# 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



பூலோகம்
07.07.1946

வைகுந்தம்
01.12.1997

அமரர்
**சீனியர் இராசரத்தினம்**
(நிற்சாமம், சங்கானை)

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகள் கூறி
வெளிநாடு செல்ல வழிகள் பல காட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்!
எண்ணிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மை எல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
தெய்வமே எங்கள் அன்புத் தந்தையே
எம்மைவிட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் பதினைந்து பறந்தோடிப்போயும்
மறக்குமா! எம் நெஞ்சம்

என்றென்றும் உம் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தகவல்: இராசரத்தினம் மோகன்.
[மகன்- சுவிஸ்]

நிற்சாமம்,
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# தற்கொலை செய்ய முயன்றவர்கள் உண்ணாநோன்பில் குதிப்பார்களா?

## ஈழ அகதிகள் குறித்து கேள்வி எழுப்புகிறார் சீமான்



தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தவர்கள் பட்டினி கிடந்து போராடிக் கொண்டிருப்பார்களா, பொய் வழக்கு போட்டு ஈழத்தமிழ்ச் சொந்தங்களை மிரட்டி வரும் பொலிஸ்துறைக்கு இந்த அடிப்படை அறிவு கூட இல்லையா? நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

பூந்தமல்லி, செங்கல்பட்டு சிறப்பு முகாம்களில் சட்டத்துக்குப் புறம்பாகவும், மனிதாபிமானமற்ற வகையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள், தனிமைச் சிறையில் வாட்டும் தங்களை சாதாரண முகாம்களுக்கு மாற்றுங்கள் என்ற கோரிக்கையுடன் பல முறை பட்டினிப் போராட்டங்கள் நடத்தியுள்ளனர்.

அவ்வாறு போராடிய போதெல்லாம் அவர்களுடன் பேச்சு நடத்தும் மாவட்ட நிர்வாகிகளும், தமிழக காவல்துறையின் கியூ பிரிவு அதிகாரிகளும், உங்களை சிறப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்கிறோம் என்று வாக்குறுதி அளித்து போராட்டத்தை முடித்து வைப்பார்கள்.

ஆனால், அதன் பின்னர் அவர்களை கண்டுகொள்வதில்லை. சிறப்பு முகாம்வாசிகளும் பொறுத்துப் பார்த்து பொறுமையிழந்து அதன் பின்னர் சாகும்வரை பட்டினிப் போராட்டம் அறிவித்து அதில் ஈடுபடுவார்கள்.

இது தொடர்கதையாக பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இப்போது பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 7 ஈழத் தமிழர்களில் பரமேஸ்வரன், தர்ஷன், பிரதீபன் ஆகிய மூன்று பேரும் கடந்த 23 ஆம் திகதியிலிருந்து ஒருவர் பின் ஒருவராக பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று, விடுதலை செய்யாமல், அவர்கள் மீது தற்கொலைக்கு முயன்றனர் என்று கியூ பிரிவு பொலிஸ் வழக்கு பதிவு செய்து, புழல் சிறையில் அடைத்துள்ளது. இது உண்மைக்கும், நியாயத்துக்கும் எதிரான அடக்கு முறை நடவடிக்கையாகும்- என்றுள்ளது. (வ)

# பளையில் நடமாடும் சேவை

பளை,டிசெ.01

பளை பொலிஸாரின் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பளை மத்திய கல்லூரியில் நடைபெறும். நடமாடும் சேவையில் தொலைந்த தேசிய அடையாள அட்டை, காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளுக்கு அறிக்கை வழங்கல் , மற்றும் பிறப்பு, இறப்பு சான் றிதழ் வழங்கல் இடம்பெறவுள்ளது.

இதேநேரம் இந்தப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், குறைந்த கட்டணத்தில் மூக்குக் கண்ணாடி வழங்கல் பார்வையற்றோருக்கு வெள்ளைப் பிரம்பு வழங்கல் போன்ற செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

பளைப் பிரதேச வைத்தியசாலை, ஆயுள்வேத மருத்துவ வைத்தியர்களின் இலவச மருத்துவ பரிசோதனை, சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான பொலிஸ் சான்றிதழ் வழங்கல்,உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இடம்பெறவுள்ளன.

பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். டி. ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் நடமாடும் சேவைக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரும், சிறப்பு விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர, பளை பிரதேச செயலர் சி.சத்திய சீலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (3-9)

# மின் தடை பற்றிய அறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காக மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதற்காகவும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை சிலபகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலி கண்டி, வல்வெட்டித் துறை, வல்வெட்டி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்றும் நாளை ஞாயிறும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ் கடைச்சந்தி வரையான பிரதேசம் திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி மனோகராப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3-13)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் **The Jaffna Education Centre**
*(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)*
Spoken English with Grammar
சிங்களம்
ESOL பரீட்சைக்குத் தயார் செய்தல்.
Shorthand typing ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்:- இன்று 01.12.12
ஆசிரியை:- இ.லோகநாயகி T.P. 077 6779340
(25959)(2,6,7)

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
**தவமணி அமரலிங்கம்**

செகத்தினைத் தேடித்தவமாக வந்தது 11.11.1940
சிவத்தினை நாடித்தானாகச் சென்றது 06.07.2012

**திதி : 01.12.2012 ( சனிக்கிழமை)**

தவமே தவமணியே தவத்தின் தவப்பயனே
சிவமே சிவமே என தினம் சேவித்து நின்றவளே
உற்றாரும் உறவினரும் ஊரில் உள்ள மற்றவரும்
போற்றிப்புகழ்ந்திருந்த பொற்பதமே அற்புதமே
ஆரார் இருந்தென்ன ஆனைகட்டி வாழ்ந்தென்ன
அம்மா உமைப்போல் ஆகுமோ எமக்கிங்கு
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது சாந்தனையும் துயராறுது
எம்மால் முடியவில்லை இதற்குமேல் எழுதுகற்கு
கண்ணால் வழிவதை எம் கைதுடைக்கமாட்டாது.
பொன்னர் மேனியனைப் பூசித்து நிற்கின்றோம்
அம்மா உம் ஆன்மா அடையட்டும் சாந்தி சாந்தி சாந்தி

அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.12.2012) சனிக்கிழமை. யாழ். கீரிமலை நகுலேஸ்வரத்தில் நடைபெறும் எதிர்வரும் (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணி முதல், இல. 75, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்ட பத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

09, வின்சன் ஒழுங்கை,
கொழும்பு 06. (25928)(6.7.8)
**கணவர், மகன்**

## திருமண சேவை

* 87இல் பிறந்த, 8 இல் செவ்வாய் உடைய, 27 ¾ பாவம் உடைய, ஆஸ்திரேலியா பிரஜா வுரிமை பெற்ற மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.
* 89இல் பிறந்த,R.C. வேதம், ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு R.C. வேதத்தில், படித்த மணமகன் தேவை.

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், வர்த்தகர்கள், சைவபோசனமுள்ள மணமக்களும் செவ்வாய் பாவம் கூடிய, குறைந்த, அரச உத்தியோகத்தர்களும், வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமண சேவை
இல. 435/3, கோயில் வீதி,நல்லூர்.
தொ.பே.: 077 607 0862 (25949)(5,6,7)

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியுவில் அமைந்துள்ள 1½ (ஒன்றரை) பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0776146434
(23298)(3.6)

## வேலையாள் தேவை

கணினியில் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்யக் கூடிய பெண் பிள்ளை தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அம்மா ஸ்ருடியோ, 28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777111530, 021 222 1155
(25946)(2,6,7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை நலன்புரி கழக அங்கத்தவரான திருமதி சரஸ்வதி தனபாலன் அவர்களின் அன்புக் கணவர்

**நாகலிங்கம் தனபாலன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கழகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
(25945)(2,6,7)

## மரண அறிவித்தல்

### ஆனந்தர் யோகேஸ்வரி (யோகம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சிறுவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தர் யோகேஸ்வரி (யோகம்) 29.11.2012 வியாழக்கிழமை நள்ளிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும்,க.ஆனந்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் கனகநாயகம், காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உசாரஜனி (லண்டன்), சபேசன்(இந்துக் கல்லூரி, மானிப்பாய்), பத்மராஜ் (பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.ச),தர்மினி,உதயகலா ஆகியோரின் அன்புத் தாயும், தபேந்திரன்(லண்டன்), சுதர்ஜன் (பிரதேசசபை,ஊர்காவற்றுறை), நிவேதிகா ஆகியோரின் அன்பு மாமியும், பபிசன்,லதுசன், சானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(30.11.2012) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் சிறுவிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறுவிளான்,இளவாலை. (சி/3129)(5-6-7) குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1989.09.17

மறைவு
2007.12.01

**தர்மராஜா துபாஜினி**

குடும்பத்தின் மூத்த புதல்வியாய்
அமைதியின் பிறப்பிடமாய் வந்துதித்தாயே!
நற்பண்புகளின் உறைவிடமாய்
பிறர் போற்ற வாழ்ந்தாயே !
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் உனை எப்படி
நாம் மறப்போம் என்றும் உன் நினைவுகளுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
10 ஆம் வாய்க்கால், உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

தற்காலிக முகவரி :
இல. 259, பருத்தித்துறை வீதி, நல்லூர்
077 3101540 (25924)(6.8)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




01.12.2012

**செல்வி சகுந்தலாதேவி முருகேசு**

(ஆசிரிய ஆலோசகர் - வணிகக் கல்வி, யாழ் கல்வி வலயம்)

அகவை அறுபதினை உவகையுடன்
கொண்டாடும் அம்மணியே
இகமதில் நீங்கள் நலமுடன் திகழ
இறைவனை வேண்டுகின்றோம்.
கடமையில் ஓய்வு பெறுகின்ற நீங்கள்
களிப்புடன் வாழ்வைக் கழித்திடவே
உளம் மகிழ்ந்தும்மை வாழ்த்துகின்றோம்
சிறப்புடன் நீங்கள் ஆற்றிய சேவைகளை
மறக்குமோ உள்ளம், மறவோமே என்றும்.

அன்பு உள்ளங்கள்:
செல்வி தி. தயாநிதி, யா/நல்லூர் ஸ்தான சி.சி த.க. பாடசாலை
திருமதி க. சிவகுமார், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வி.
திருமதி மே. இராஜேந்திரன், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வி.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




**மணிராஜா - கலாஜினி** தம்பதியரின்
செல்வப் புதல்வி **ஆஷிக்கா**
தனது முதலாவது பிறந்த நாளை இன்று (01.12.2012)
சனிக்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார். ஆஷிக்காவை
அன்பு அப்பா, அம்மா, அண்ணன்
அஸ்வத், மாமன்மார்கள், அத்தைமார்கள்,
சித்தப்பா (பிரான்ஸ்), தாத்தா, அம்மம்மா,
அப்பப்பா, அப்பம்மா, மச்சாள்மார்கள்,
அபி, பவி, நவீன் மச்சாள், நதீரா
மற்றும் நண்பர்கள் அனைவரும்
நல்லூர்க் கந்தனின் அருள்பெற்றுப்
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.

12, ஜமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(25978) (2-6-7) **குடும்பத்தினர்.**

## ஆறாத் துயரில் ஆண்டு ஆறு

மலர்வு 10.05.1959 — உதிர்வு 07.12.2006



**அமரர் சிவசாமி ரஞ்சன்**

(முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்)

(திதி: திருதியை 01.12.2012)

ஆண்டுகள் ஆறு போனாலும் ஆறவில்லை நம் சோகம்
ஆசையாக அழைத்து அன்பாகப் பேசிய மழலைகளில்
அன்புமுகம் மாறவில்லை
ஆலயங்களில் நீங்கள் இருந்து ஆறிய இடம்
பலகதை சொல்கிறது.
ஆண்டவன் ஏன் அழைத்தான் என்று
ஆருக்குமே விளங்கவில்லை.
ஆருயிர் செல்வங்களும் அன்பான குடும்பத்தினரும்
ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்

(25960/2.6.7)

செம்மணி வீதி, நல்லூர். — மனைவி, பிள்ளைகள்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2013



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவே செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2012.12.01 தொடக்கம் 2012.12.31 பி.ப. 5.00 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய காசுக்கட்டளை/ தபாற்கட்டளை விவரங்கள் தேவைப்படும் இடத்தில் 021 321 3024, 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாக தயாரித்துக் கொள்ளலாம்.

2012ஆம் ஆண்டு வழிபடுநர் சபை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் சபையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பத்திலும் (1ஆவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

அன்னையின் சேவையில்
ந.மோகனரூபன், செயலாளர்,
அறங்காவலர் சபை,
நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
இரண்டாவது அட்டவணை
வழிபடுநர் சபை உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்-2013

கௌரவ செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

அன்புடையீர்!

2013ஆம் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். இத்துடன் ரூபா பத்து ஐம்பதுக்கான இலக்கம்................ ........................ உடைய காசுக்கட்டளை /தபாற்கட்டளை இணைத்துள்ளேன். வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கு வேண்டிய எல்லாத் தகைமைகளையும் நான் தொடர்ந்து பெற்றிருக்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

1. எனது பெயர்:................................................
2. முகவரி:................................................
3. ஆலயத்தில் எனக்கு இருக்கும் உபயம்:................................................

................................................

(உபயம் நித்திய பூசையாயின் திகதியையும், உற்சவமாயின் அதன் விவரத்தையும் தருக.)

4. உபயப் பணம் செலுத்தப்பட்டுள்ள ப.சீ. இல.:.................................... திகதி: ....................................
5. எனது முன்னைய உறுப்புரிமை இல.: 200
200
200

திகதி....................

..................................
விண்ணப்பதாரின் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக் கப்பட்டன.இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் ............வருடம் மார்கழி மாதம்........... ஆம் திகதி இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

பெயரும்,
பதவி முத்திரையும்:............................ என்முன்பாக,

..........................................
..........................................
..........................................
*அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்*

குறிப்பு: அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான 'றபர் ஸ்டாம்' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. 31.12.2012 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப் படவேண்டும்.

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
முதலாவது அட்டவணை
வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2013

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:................................................
2. முகவரி:................................................
3. பிறந்த திகதி:................................................
4. நீர் ஓர் இந்துவா:................................................
5. நீர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநரா?................................................
6. விளம்பர வாசகம் 2(அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமைக்குத் தகுதியுடையவராயின் பின்வரும் விவரங்களைத் தரவும்.
(அ) இந்த ஆலயத்தில் ஏதாவது உபயங்களுக்கு உரித்துடையவராய் இருக்கின்றீரா?................................................
(ஆ) நித்திய பூசையா/உற்சவமா:
*(நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விபரத்தையும் தருக.)*
(இ) உபயப் பணம் செலுத்தப்பட்டிருப்பின் ப.சீ.இல.................................. திகதி..................................
7. நீர் ஏதாவது ஒரு குற்றத்தின் பேரில் எந்த ஒரு நீதிமன்றத்தாலேனும் தண்டிக்கப்பட்டுள்ளீரா?
8. இக்கோயிலின் மாத வேதனம் பெறும் அல்லது கொடுப்பனவைப்பெறும் ஊழியராகவோ குருவாகவோ உள்ளீரா?................................................
9. இக்கோயிலில் நீர் ஏதாவது ஒப்பந்தம் செய்துள்ளீரா?................................................
10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/ தபாற்கட்டளை பற்றிய விவரம்:
கட்டளை இல.................... திகதி.......................... தொகை..................................

எனக்குத் தெரிந்த வகையிலும், நம்புகின்ற வகையிலும் மேலே என்னால் கூறப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியா னவையென்றும், உண்மையானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். வழிபடுநர் சபையில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நான் இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

திகதி....................

..................................
விண்ணப்பதாரரின் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன.இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் ............வருடம் மார்கழி மாதம்........... ஆம் திகதி இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

பெயரும்,பதவி முத்திரையும்:............................ என்முன்பாக,

..........................................
..........................................
..........................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு: அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான 'றபர் ஸ்டாம்' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 31.12.2012 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். (சி/3132)(5-6-7)

## தெல்லிப்பழை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
பதிவு இலக்கம்: J/1591 06.03.1972

## பதவி வெற்றிடம்

1. பதவி:- விற்பனை உதவியாளர்
2. சம்பள குறியீட்டு இல :- 308/17
3. சம்பள அளவுத்திட்டம் :- 8950- 65×10-70×10-10300
4. தகைமைகள்:-
   - அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ் அல்லது
   - ஆ. 8ம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
5. வயது :- 18-45

*சங்கம் கோரும் பிணையை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

*கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.

*சங்க எல்லைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*விண்ணப்பப் படிவத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ்,பிறப்புச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் என்பனவற்றின் போட்டோ பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

*விண்ணப்பப் படிவங்கள் யாவும் பொது முகாமையாளர், தெல்லிப்பழை பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 15.12.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

*கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை உதவியாளர் 308/17பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட வேண்டும்.

*பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதியில்லாத விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும். (C/3130)(2.6)

புகையிரத நிலைய வீதி, மல்லாகம். — பொது முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின ஒழிப்பைத் துரிதப்படுத்தும் 'பட்ஜெட்'

## அரசின் அராஜகம் குறித்து சுரேஷ் குமுறல்

கொழும்பு, டிசெ.01

இலங்கை அரசு சமர்ப்பிக்கும் வரவு - செலவுத் திட்டங்கள் தமிழின ஒழிப்பை வேகப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன என்று நேற்றுமுன்தினம் சபையில் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்த இலங்கை அரசு மறுகின்றது என்றும் கூறியது.

அத்துடன், சம்பூர் என்ற கிராமம் இலங்கை வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டுவிட்டது என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டது.

மீள்குடியேற்ற அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசு தான் செய்யவேண்டிய கடமையைப் புறந்தள்ளிவிட்டு, தனது இராணுவ முன்னெடுப்புகளால் உயிருக்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறி அங்கு அகதிகளாக வாழும் தமிழ் மக்களிடம் உள்நாட்டில் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவவேண்டும் என்று எதிர்பார்ப்பது வெட்கக்கேடான விடயம். ஆயினும் தங்களது கடின உழைப்பில் ஈட்டிய சொற்ப வருமானத்தில் தங்களது செலவுகளைக் குறைத்துக் கொண்டு எமது மக்களுக்கு அவர்கள் செய்திருக்கும் உதவிகள் அளப்பரியவை.

மீள்குடியேற்றத்துக்கென்று இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவாக 26 கோடி 32லட்சத்து ரூபா 30ஆயிரம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் தமிழ் மக்களின் அழிக்கப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கும் வாழ்வாதாரங்களுக்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு இச்சபைக்குத் தெரிவிக்கவேண்டும்.

யாழ்.மாவட்டம் வலிகாமம் வடக்கில் மட்டும் 24 கிராமசேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மீள்குடியமர்த்தப்படவேண்டியுள்ளனர். இவர்கள் இடம்பெயர்க்கப்பட்டு இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டன. இவர்களது வீடுகள் அனைத்தும் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தின் 11 முகாம்களிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடனும் இவர்களில் பல்லாயிரம் பேர் வாழ்கின்றனர்.

**படையினர் மிரட்டல்**

மாதகலில் உள்ள மக்களின் காணிகளைப் பலவந்தமாகப் பிடித்து வைத்திருக்கும் கடற்படையினர் காணிகளைத் தமக்கு எழுதிக் கொடுக்குமாறு மக்களை மிரட்டுகின்றனர்.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் 1,500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 7,000 இற்கும் மேற்பட்ட மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டியுள்ளனர்.

இன்று சம்பூர் என்ற கிராமமே இலங்கையின் வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டிருக்கின்றது.

**காணிகளுக்குச் செல்ல அனுமதி மறுப்பு**

முல்லைத்தீவு கேப்பாபுலவில் 110 குடும்பங்கள் தங்களது காணிகளுக்குச் செல்லவிடாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன.

மன்னார் முள்ளிக்குளத்தைச் சேர்ந்த 400 குடும்பத்தினர் தங்களது காணிகளுக்குச் செல்லவிடாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தின் மையத்தில் பரவிப்பாஞ்சான் என்று அழைக்கப்படும் ஒரு கிராமம் முழுமையாக இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் கணக்குப்படி வன்னியில் மட்டும் இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ பகுதியாகவோ அழிக்கப்பட்டுள்ளன. அவை கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். மீள்குடியமர்வுக்குவடக்கு-கிழக்கில் பெரியளவில் தேவை இருக்கும்போது ஓர் அற்ப தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீள்குடியமர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக இடம்பெயர்ந்தோர் உரிமைகள் தொடர்பான வழிகாட்டு நெறிகளுக்கு முரணாகவும் ஜெனிவா தீர்மானத்துக்கு முரணாகவும் மீள்குடியமர்வு என்ற பெயரால் அரங்கேற்றப்படும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டும் வேலைத் திட்டங்களேநடைபெறுகின்றன.

போருக்குப் பின்னரான அனைத்து வரவு-செலவுத் திட்டங்களும் இன்றுவரை தமிழின ஒழிப்பை வேகப்படுத்துவதற்கான வரவு-செலவுத் திட்டங்களாகவே பார்க்க முடிகின்றது.

சர்வதேச நிறுவனங்களையோ, சர்வதேச சமூகத்தையோ எமது மக்களுக்கு உதவ விடாமல் இந்த அரசு தடுக்கின்றது. அவற்றுக்கும் மேலாக செய்யப்படும் உதவிகளையும் தட்டிப்பறிக்கின்றது. - என்றார். (ம)

## தாக்குதல்களுக்கு கண்டனத் தீர்மானம் வலி.வடக்கு பிரதேசசபையில்

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனது வாகனம் அடித்து நொருக்கப்பட்டமை, காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகனின் வீடு எரிக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து வலி.வடக்குப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இந்தச் சம்பவங்களை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்து கண்டனத் தீர்மானத்தை, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினரான க.மயூரன் முன்மொழிய அதே கட்சியின் இன்னொரு உறுப்பினரான வ.முருகேசு வழிமொழிந்தார்.

சபையில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. (ம-5)

# யாழ். பல்கலைத் தாக்குதலைக் கண்டித்து தெற்கு பல்கலைக்கழகங்களில் ஆர்ப்பாட்டம்

## ஆயிரக்கணக்கில் மாணவர்கள் பங்கேற்பு

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - கண்டித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையினர் நேற்றுமுன்தினம் பெரியளவில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மூன்று இடங்களில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து, அரசுக்கு எதிராக மும்முனைத் தாக்குதல் நடத்திய மாணவர் பேரவையினர், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் தொடர் போராட்டங்கள் வெடிக்கும் என்றும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

அரச பாதுகாப்புப் படையினர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்திய தாக்குதலுக்குத் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து பேராதனை, றுஹுணு, களனி முதலான மூன்று பல்கலைக்கழகங்களின் முன்றிலில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு எதிரான பல சுலோக அட்டைகளையும், தாக்குதலுக்கு உள்ளான மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும், இது போன்ற தாக்குதல்களுக்கு அரசு முடிவுகட்டவேண்டும் என்றும் எழுதப்பட்ட பல சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மூன்று பல்கலைக்கழக முன்றில்களிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அவர்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 50 இற்கும் அதிகமான மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களுள் மூவர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனநாயக விரோத, மனித சுதந்திரத்துக்கு எதிராக அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்தே நாம் பேராதனை, றுஹுணு, களனி முதலான மூன்று பல்கலைக்கழகங்களிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றோம்.

அரச படையினர் மேற்கொண்ட நடவடிக்கையை எதிர்த்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் நியாயம் கிடைக்கவேண்டும். இன்றேல் நாடு முழுவதும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் வெடிக்கும். - என்றார்.

# யாழ்.பல்கலையில் இராணுவ அடாவடி மனித உரிமைக் குழுவில் முறையிட முடிவு

## சோஷலிஸ மாணவர் சங்கம் நடவடிக்கை

கொழும்பு, டிசெ.01

யாழ். புல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதிப் போராட்டத்தைத் தடுத்து, அவர்கள் மீது பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த சோஷலிஸ மாணவர் சங்கம், இந்தத் தாக்குதலை எதிர்த்து மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து சோஷலிஸ மாணவர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸ் மற்றும் படையினர் தாக்குதல் நடத்துவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் இவர்கள் பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர். சமாதானமான முறையில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை வடக்கு, தெற்கு என எல்லா இடங்களிலும் அரசு ஒடுக்கி வருகிறது என்றும் தெரிவித்தது.

தமது பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு அரச பாதுகாப்புப் பிரிவினர் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மாணவர்களை பெட்டன் பொல்லுகளால் தாக்கியுள்ளனர்.

மாணவர்கள் சமாதானமான முறையில் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களைத் தாக்குதல், அடக்குமுறைகளின் ஊடாக அரசு முடக்கிவருகின்றது. கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரையும் பொலிஸார் பெட்டன் பொல்லுகளால் தாக்கியும், தண்ணீர் பீய்ச்சியும், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தும் அடக்கினர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை பொலிஸாரும், இராணுவத்தினரும் மிலேச்சத்தனமாகத் தாக்கி அடக்குவது இது முதல்தடவையல்ல.

கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் செயலாளர் தவபாலன், இராணுவக் காவலரணுக்கு முன்பாக வைத்து மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டார். ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

அத்துடன், கடந்த மே மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் செயலாளர் பரமலிங்கம் தர்சானந் மீது இதேபோன்ற தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பிலும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைத் தாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. அத்துடன், மாணவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் இதுபோன்ற அடக்குமுறைகளை எதிர்க்க அனைவரும் அணிதிரண்டு வாரீர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தாம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் சோஷலிஸ மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.(ம)

# அராஜகத் தாக்குதல்கள்; புதிய ஜனநாயக மாக்சிச கட்சி கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து இராணுவமும் பொலிஸாரும் நடத்திய இரண்டு நாள்களிலான அராஜகத் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

இந்தத் தாக்குதல்கள் மாணவர்கள் மீதான தாக்குதல் மட்டுமன்றி அனைத்துத் தமிழ் மக்களையும் அச்சுறுத்தி அடக்கி வைத்திருப்பதற்கான கொடூரத் தாக்குதலாகும்.

இது தமிழ் மக்கள் மீதான பேரினவாத இராணுவ ஒடுக்குமுறை நீடிக்கப்பட்டு வருவதையே வெளிக்காட்டியுள்ளது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவர்கள் தமக்கான பாதுகாப்பு, சுதந்திரமான கற்றல், பல்கலைக்கழக சுற்றாடலில் இருந்து பாதுகாப்புப் படைகளை விலகச் செய்தல் போன்ற நியாய கோரிக்கைகளை முன்வைத்து போராடுகின்றனர். இதை நாம் ஆதரிக்கின்றோம்.

மாணவ, மாணவிகளின் விடுதிகளுக்குள் பலாத்காரமாகப் புகுந்து அநாகரிகமான வழிகளில் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள்.

இதனை மறுநாள் மாணவர்கள் அனைவரும் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள். அமைதியாக நடத்திய அந்தப் போராட்டம் ஜனநாயக ரீதியானது. அதனைத் தடுத்தே மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தாக்குதல் இடம்பெற்ற வேளை அங்கு வந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தூஷிக்கப்பட்டதுடன் அவரது வாகனமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

அதே போன்று உதயன் நாளிதழின் ஆசிரியர் குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளார்.

இவை அனைத்தும் அரசினதும் பாதுகாப்புப் படையினதும் தமிழ் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டையே தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.-என்றுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ கிரிக்கெட்டில் மத்திய கல்லூரி வெற்றி

## 85 ஓட்டங்களால் வீழ்த்தப்பட்டது திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ

யாழ்ப்பாணம்,டிசெ.1

திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. கிரிக்கெட் கழகத்துடனான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி 85 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

இந்த சிநேகபூர்வ ஆட்டம் கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 48 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 215 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் நிரோஜ் 43 ஓட்டங்களையும், ஜெயந்திரன் 36 ஓட்டங்களையும், சௌமிதரன் 28 ஓட்டங்களையும், நிருபன் 26 ஓட்டங்களையும், ஹரிகரன் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.கிரிக்கெட் கழக அணி சார்பில் யது 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கீதன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துப் வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சந்துரு 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், செந்தூரன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், கரன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியது திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ கிரிக்கெட் கழகம். ஆயினும் மத்திய கல்லூரி அணியின் இளம் வீரர்களின் துல்லியமான பந்துவீச்சுக்கு முன்னால் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அந்த அணி 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும்இழந்து 130 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

. இதில் கரன் 30 ஓட்டங்களையும், றொசாந் 15 ஓட்டங்களையும், செந்தூர் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் கபிலன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், ஹரிகரன் 6 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சௌமிதரன் 7 பந்துப் பரிமாற் றங்கள் பந்து வீசி 31 ஓட்டங் களைக் கொடுத்து ஒரு இலக் கினையும் நிசாந்தரூபன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். இதனால் 85 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியை வீழ்த்தியது மத்திய கல்லூரி. (ஙு-23)

## முல்லையில் செயலமர்வு

வடமாகாணப் பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படவேண்டிய விளையாட்டுச் செயற்பாடுகள்மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த வரிசையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான செயலமர்வு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலகராஜா தலைமையில் இடம்பெற்றது. வடமாகாண மாணவர் அபிவிருத்தி மற்றும் உடற்கல்வி பிரதி கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலனும் இதில் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர். (ஙு-400-23)

## தேசிய விளையாட்டு நிகழ்வில் விநோத முறையில் எதிர்ப்பு

### ஜனாதிபதி முகத்தில் கரி

யாழ்ப்பாணம்,டிசெ.1

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகிய 38 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் போது, சகல மாகாணங்களையும் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்கள், சம்பிரதாய முறையிலான மேலங்கிகளை (கோட்) அணியாமல் அணிவகுப்பில் கலந்துகொண்ட விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார். தமக்குரிய ஊதிய உயர்வு இதுவரை வழங்கப் படாததை எதிர்த்து, அது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையிலே சகல மாகாணங்களையும் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்கள் இவ்வாறு சம்பிரதாய மேலங்கி அணியாமல் அணிவகுப்பில் தனிப்பிரிவாக கலந்து கொண்டனர்.இது பார்வையாளர்களிடத்தேயும், விருந்தினர்களிடத்தேயும் பெரும் பரபரப்பைத் தோற்றுவித்தது.

ஜனாதிபதி கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் இவ்வாறு தமது எதிர்ப்பை நேரடியாக வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, அவர்களின் ஊதிய உயர்வு தொடர்பில் சாதகமாகப் பரிசீலித்து விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரச தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் இது போன்று பலமுறை தமக்கு வாக்குறுதி வழங்கப்பட்ட போதும் இதுவரை அவை நிறைவேற்றப் படவில்லை என்று விளையாட்டு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (ஙு-23)

## ஆளுநர் கிண்ணச் சுற்றுத் தொடர் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ.1

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கிடையே வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் பல்வேறு போட்டிகளை நடத்திவருகிறது.

இதில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் 5 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திலும், பூப்பந்தாட்டப் போட்டிகள்- 6 ஆம், 7 ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன-என்றும் உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம செயலர் கொத்தணி அணி வெற்றி பெற்றுள்ளது என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப் பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ஙு-23)




தேசிய இளைஞர் விளையாட்டு சம்மேளனம் நடத்திய தேசிய [illegible] கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடை பெற்றது. மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் குண்டு எறிதல் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்ட [illegible] இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெருமா விருது வழங்குகிறார். (ஙு-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்றையஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.01

யாழ்.உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இன்று சனிக்கிழமை பி.ப 3.45 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணாஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஙு-23)

## கராத்தேயில் வெண்கலம்

திருகோணமலை,டிசெ.01

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற 37 ஆவது தேசிய மட்ட கராத்தே போட்டியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.கே.டி கராத்தே சங்கத்தைச் சேர்ந்த முரளிதரன் 50- 65 கிலோ பிரிவில் மூன்றாமிடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினை பெற்றுள்ளார். (ஙு-40)

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திங்கட்கிழமை பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு,டிசெ.1

யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றை வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தவுள்ளது. மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை குறித்த பயிற்சிப் பட்டறையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு வடமாகாண மாணவர் அபிவிருத்தி மற்றும் உடற்கல்வி பிரதி கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த பயிற்சிப்பட்டறையில் யாழ்.மாவட்டத்துக்கு உட்பட்ட கல்வி வலயங்களின் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஙு-86)

## உடற்கல்வி டிப்ளோமா பழைய மாணவர் சங்கம்

வலி.வடக்கு,டிச.01

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்வி விஞ்ஞான அலகில் கல்வி கற்று வெளியேறிய உடற்கல்வி டிப்ளோமா பழைய மாணவர்கள், தமக்கென ஒரு சங்கத்தை உருவாக்கியுள்ளனர். அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவுசெய்யப் பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான டிப்ளோமா பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப் பட்டோர் விவரம்-

தலைவர்:-எஸ்.தர்மகுமரன், உபதலைவர்:- ஹரிகரன் , செயலாளர்:-யுகராஜ், உப செயலாளர்:-மனோராஜ், பொருளாளர்:-திவாகரன், ஏனைய நிர்வாக உறுப்பினர்கள்:- உதயணன், ஜெயகேசவன், கருணாநிதி, சுகிந்தன், வினோகாந், டிவிந்தன், டனிஸ்.

உடற்கல்வி டிப்ளோமா பயின்ற மாணவர்களின் எதிர்கால வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்வி என்பன சம்பந்தமான விடயங்களில் இந்தச் சங்கம் முனைப்புடன் செயற்படும் என்று சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஙு-86)

## வலி.மேற்கு பிரதேச சபையின் சைக்கிள் ஓட்டம்,மரதன் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.1

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபை நடத்திய சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**சைக்கிள் ஓட்டம்- ஆண்கள்** (வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்டவர்கள்)

★முதலாமிடம்- பா.பிரணவதாஸ், இரண்டாமிடம்- கே.சுதனராஜ், மூன்றாமிடம்- ந.அசோக்

**பார்வையாளருக்கான சைக்கிள் ஓட்டம்**

★முதலாமிடம்- தனிஸ், இரண்டாமிடம்- க.சைலஜன், மூன்றாமிடம்- ப.ஜயவேந்தன்.

**மரதன் ஓட்டம்- ஆண்கள்**

★முதலாமிடம்-ஜெ.சுரேஸ், இரண்டாமிடம்- சி.சுசிகரன், மூன்றாமிடம்- த.கமல்ராஜ்

**மரதன் ஓட்டம் -பெண்கள்**

★முதலாமிடம்-ந.தனுஷா, இரண்டாமிடம்- பா.தனுசுயந்தி. (ஙு-23)

# பங்களாதேஷிடம் பணிந்தது தீவுகள்



பங்களாதேஷ் அணியின் அதிரடியில் சிக்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியுள்ளது.

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணி விளையாடி வருகின்றது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று குல்னாவில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

கெய்ல், சிம்மன்ஸ் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. கெயில் சிறப்பான முறையில் அடித்தாட தீவுகள் பலமானதொரு அடித்தளத்தை அமைத்தது. அணி 48 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிம்மன்ஸ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே சொஹ்றாஜ் ஹாஸியின் பந்து வீச்சில் கெய்ல் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆரம்ப இலக்குகள் பிரிக்கப்பட்டதன் பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது.

டரன் பிராவோ மாத்திரம் முன்வரிசை வீரர்களில் நிலைத்து நின்று 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பங்களாதேஷின் பந்து வீச்சில் தடுமாறிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 133 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து படுபாதாளமான நிலையிலிருந்தது. அதன் பின்னர் சுனில் நரைன் - ராம்போல் ஜோடி பேராட்டத்தை வழங்கியது. பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை சமாளித்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பின்னணி வீரர்கள் அணி 200 ஓட்டங்களை எட்டுவதற்கு முயற்சித்தனர்.


இருந்தும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் சுனில்நரைன் 36, ராம்போல் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 46.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் பங்களாதேஷ் அணியின் அறிமுகவீரர் சொஹ்றாஜ் ஹாஸி 29 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைப்பற்றினார். அப்துர் ரஷாக் 3 இலக்குளை வீழ்த்தினார்.

200 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், அனாமுல் ஹக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. வேகமாக ஓட்டங்களைக் குவித்த இந்த இணை பங்களாதேஷின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் விளையாடியது. 88 ஓட்டங்களை முதலாவது இலக்குக்காகப் பகிர்ந்த நிலையில் தமிம் இக்பால் 51 பந்துகளில் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நுழைந்த நமீம் ஸ்லாம் சிறப்பாக ஆடத் தொடங்க மறுமுனையில் அனாமுல் ஹக் 41 ஓட்டங்களுடன் வெளியேறினார். நஷீர் ஹுஸைன் - ஸ்லாம் ஜோடி மத்திய வரிசை இணைப்பாட்டத்தை தொடர்ந்தது. ஹுஸைன் 28 ஓட்டங்களுடன் வெளியேறினார். இறுதியில் பங்களாதேஷ் அணி 40.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சுனில் நரைன், ருஷல், சமி தலா ஒரு இலக்கை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அறிமுக ஆட்டத்திலேயே அசத்திய சொஹ்றாஜ் ஹாஸி தெரிவானார். (5)

# தோல்வியால் கவலை



இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியடைந்தமை குறித்து வருத்தமடைவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். இந்த ஆட்டத்தில் வெற்றிகொள்ள எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.


நியூஸிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 10 இலக்குகளால் வெற்றிபெற்றிருந்தபோதிலும், இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி 167 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது.

உள்நாட்டில் போட்டியில் பங்குபற்றுகின்ற நிலையில், இலங்கை அணியின் பலத்தைப் பார்க்கும் போது இரண்டாவது ஆட்டத்தில் தோல்வியடைந்து 1 - 1 என்ற கணக்கிலான தொடர் சமநிலை குறித்து வருத்தமடைவதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

தன்னைப் பொறுத்தவரை இரண்டாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்று இந்தத் தொடரிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இரண்டாவது ஆட்டத்தின் முதல் இரண்டு, மூன்று நாள்கள் நியூஸிலாந்து அணி இந்தத் தொடரை ஆதிக்கத்திற்குள்ளாக்கி இலங்கை அணியை அழுத்தத்திற்குள்ளாக்கியதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

நியூஸிலாந்து அணி வழங்கிய அழுத்தத்தை இலங்கை அணி சிறப்பாக எதிர்கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்த மஹேல, இது குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்தார். குறிப்பாக முதலாவது ஆட்டத்தில் காலியில் வைத்துப் பெற்றுக் கொண்ட வெற்றியின் பின்னர் இந்த நிலை தொடர்பாக ஏமாற்றமடைவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் இலங்கை அணி பங்குபற்றிய இறுதி 3 டெஸ்ட் போட்டியிலும் தோல்வியடைந்துள்ள நிலையில் அதற்கான காரணத்தைத் தெரிவிக்க முடியவில்லை எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ஆனால் அதற்கான காரணம் ஆராயப்பட்டு அது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (5)




# ஆஸி. - ஆபிரிக்கா ஆட்டம் இரு அணிகளும் தடுமாற்றம்




ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் தடுமாற்றத்தை எதிர்நோக்கியுள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தென்னாபிரிக்க அணி விளையாடி வருகின்றது. முதலிரண்டு ஆட்டங்களும் சமநிலையில் முடிவடைந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் பேர்த்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி 225 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. தென்னாபிரிக்க அணி சார்பில் டு பிளஸிஸ் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்ஸன், பிலண்டர் இருவரும் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணிசார்பில் லயன் 3, ஸ்ராக் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு நேற்றையதினமே துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி முதலிரண்டு இலக்குகளையும் வேகமாக இழந்தது. எட் கோவன் ஓட்டமெதனையும் பெறாமலும், வொட்ஸன் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். களத்தில் வோணர் 12, லயன் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், பிலண்டர் தலா ஒரு இலக்கை கைப்பற்றினர். (5)

# இந்த ஆண்டு ராசியான ஆண்டு

இந்தியாவின் பட்மின்ரன் நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால் பற்றிய சுயசரிதைப் புத்தக வெளியீட்டு விழா டெல்லியில் நடைபெற்றது.

புத்தகத்தை இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ்சிங் வெளியிட்டார்.

நிகழ்ச்சிக்கு பின்பு சாய்னா கூறுகையில், இதுவரையிலான எனது பன்மின்ரன் வாழ்க்கையில் இந்த ஆண்டைத்தான் மிகச்சிறந்த ஆண்டாக நினைக்கிறேன்.


இந்த ஆண்டில் 4 பட்டங்களையும், ஒலிம்பிக்கில் பதக்கத்தையும் வென்றுள்ளேன். அடுத்ததாக சீனாவில் உலக சூப்பர் தொடர் இறுதிசுற்று போட்டி நடைபெற உள்ளது. இந்தப் போட்டியில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் விளையாட உள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தப் போட்டியில் நான் இறுதி ஆட்டத்தில் தோற்று விட்டேன்.

இந்த முறையும் இந்த போட்டியில் பங்கேற்பதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன் என்றும் இந்த போட்டியின் மீதுதான் எனது முழுக் கவனமும் இருக்கிறது எனவும் கூறியுள்ளார். கால்முட்டியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து இன்னும் முழுமையாக மீளாததால் சாய்னா தற்போது ஓய்வு எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி தாக்குதல் பாணிக்கு களமிறங்க வேண்டும்



இங்கிலாந்துக்கு எதிரான மீதமுள்ள டெஸ்ட் போட்டியில், இந்திய அணித் தலைவர் டோனி, தாக்குதல் பாணியிலான களத்தடுப்பு வியூகம் அமைக்க வேண்டும், என்று பாகிஸ்தான் பயிற்சியாளர் மொயின்கான் தெரிவித்தார்.

இது குறித்து மொயின்கான் கூறியதாவது:

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் இரு டெஸ்ட் போட்டி முழுவதையும் தொலைக்காட்சியில் பார்த்தேன். பீற்றர்சன், குக் இருவரும் துடுப்பாட்டத்தில் ஜொலித்தனர். சுழலில் சுவான், பனேஷர் அசத்தினர். இதை மறுக்க முடியாது. அதேநேரம், இங்கிலாந்து துடுப்பாட்டத்தின் போது, இந்திய அணியினர் அதிகளவில் நெருக்கடி கொடுக்கவில்லை. பல்வேறு தவறுகளை செய்தனர். இது ஏமாற்றமாக இருந்தது.

பீற்றர்சன், குக் துடுப்பாட்டத்தின் போது, 'டீப் பொயிண்ட்', 'டீப் மிட்-விக்கெட்' திசையில் களத்தடுப்பாளர்களை நிறுத்தவில்லை. அதிகமான களத்தடுப்பாளர்களை உள்வட்டத்தில் நிறுத்தி, தாக்குதல் முறையில் விளையாடி இருக்க வேண்டும். இது அனைத்து நேரங்களிலும் கைகொடுக்காது என்றாலும், 70 முதல் 80 சதவீதம் வரை வெற்றி கிடைக்கும்.

ஆனால், ஒரு நாள் போட்டியைப் போல, டோனி களத்தடுப்பாளர்களை நிறுத்தினார். இது இரண்டாவது இன்னிங்சிலும் தொடர்ந்தது பெரும் ஏமாற்றம் தான். டோனி சிறந்த அணித் தலைவர்தான். பல்வேறு வெற்றிகள் பெற்றுக் கொடுத்துள்ளார். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.


ஆனால், பந்து வீச்சாளர்களிடம் டோனி கடினமாக பேசவேண்டும். அவரது இடத்தில் நான் இருந்திருந்தால், சுழற்பந்து வீச்சாளர்களிடம் கடுமையாக பேசியிருப்பேன். உலகத்தரம் வாய்ந்த ஹர்பஜனை ஊக்குவிக்க வேண்டும்.

இந்திய அணி சிறப்பான பந்து வீச்சாளர்களை பெற்றுள்ளது. அவர்களால் எந்த அணியையும் வீழ்த்த முடியும். தவிர, நல்ல களத்தடுப்பாளர்களும் உள்ளனர். ஆனால், சரியான இடத்தில், சரியான வீரரை நிறுத்துவதில் தான் வெற்றி அடங்கியுள்ளது.

கொல்கத்தா டெஸ்டுக்காக இந்திய அணியில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையில்லை. மும்பையில் களமிறங்கிய அதே அணியே விளையாடலாம். ஆடுகளத்துக்கு ஏற்ப சுழற்பந்து வீச்சாளர்களை பயன்படுத்த வேண்டும். மும்பையில் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று, எந்த அளவில் பந்து வீச்சு செய்வது என்பதில் அஷ்வினும், ஓஜாவும் சற்று குழம்பி போய்விட்டார்கள் எனத் தெரிகிறது - என்றார். (5)

# சச்சின் திறமை மங்கவில்லை

## - கம்பீர் கருத்து



சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சினுக்கு அடுத்தபடியாக அதிக ஓட்டங்கள் குவித்த வீரரான பொன்டிங் ஓய்வை அறிவித்துள்ளார். இதனால் திறன் இல்லாமல் தவித்து வரும் சச்சின் டெண்டுல்கரும் ஓய்வை அறிவிப்பார் என்று கூறப்படுகிறது.

இது குறித்து இந்திய வீரர் கௌதம் கம்பீர் கூறுகையில், பொண்டிங் ஓய்வு பெறுவதால், சச்சினும் ஓய்வு பெற வேண்டும் என்று அர்த்தமில்லை.

ஒவ்வொருவருக்கும், எப்போது ஓய்வெடுக்க வேண்டும் எனத் தெரியும். எனவே, யாரையும் ஓய்வுபெற வற்புறுத்தக்கூடாது. இருவரும் வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள். எனவே ஒப்பிட்டு பேசக்கூடாது.

இந்தியாவின் மிகப்பெரிய கிரிக்கெட் வீரர் சச்சின். அணிக்காக, இன்னும் அதிக ஓட்டங்கள் எடுக்கக்கூடிய திறமை இவரிடம் உள்ளது.

எல்லா மனிதர்களுக்கும் ஏற்றமும், இறக்கமும் இருக்கத்தான் செய்யும். விளையாட்டை தாண்டியும், இவர் அதிகம் செய்துள்ளார்.

சுழற்பந்துவீச்சுக்கு ஏற்றாற் போல ஆடுகளம் வேண்டும் என்று அணித் தலைவர் டோனி கேட்பதில் தவறில்லை. அசாருதின் அணித் தலைவராக இருந்த போதும் இப்படித்தான் இருந்தது.

அப்போது யாரும் கேள்வி கேட்கவில்லையே என்றும் அடுத்து நடக்க உள்ள கொல்கத்தா டெஸ்டில் இந்திய அணி எழுச்சி பெறும் எனவும் கூறியுள்ளார். (5)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

எம்மிடம் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
அம்பாள் லோன்றி அருகில்,
மருதன் கேணிவீதி,
பருத்தித்துறை.
0750389550

(25524)

**கணினி திருத்தம் Computer Repair**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய திருத்தித் தருகிறோம். அழையுங்கள்: 0779086737

GUNAA BEST PC, 52, Hospital Road, Jaffna.

**German Swiss மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி பெயர்ப்புடன் 05.12.2012 அன்று அடுத்த புதிய வகுப்புக்கள் ஆரம்பம். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கடந்த 5 வருடமாக நடைபெறுகின்றது.

தொடர்பு:
10 Palaly Road, Jaffna. (ஆரிய குளத்துக்கு அருகில்)
German Institute
Miss. Kajenthini 0771604823

(25257)(3.14)

## நியூஸிலாந்தின் வெற்றியின் பின்னால் சமிந்த வாஸ்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நியூஸிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரினை நியுஸிலாந்து அணி 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்துக் கொண்டிருந்த நிலையில், நியூஸிலாந்து அணியின் சிறப்பான பெறுபேறுகளுக்கு சமிந்த வாஸிற்கு நியூஸிலாந்து அணியின் தலைவர் ரோஸ் ரெய்லர் நன்றி தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடருக்கான நியூஸிலாந்து அணியின் விசேட பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றியடைந்து தொடரைச் சமப்படுத்திய பின்பு கருத்துத் தெரிவித்த நியூசிலாந்து அணித் தலைவர் ரோஸ் ரெய்லர், நியூசிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களுக்கு சமிந்த வாஸ் மிகச் சிறப்பாக உதவினார் என்று தெரிவித்தார். (5)

**ENGLISH LECTURER WANTED (MALE/ FEMALE)**

We are recruiting lecturers with excellent teaching skill to conduct English lessons

Salary Negotiable.

SendyourCV to: nimal@expogroup.lk

LONDON METROPOLITAN COLLEGE
No: 197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230 | 021 753 8395
Web: www.lmcjaffna.edu.lk

**100 நபர்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு**

**DREAMS GLOBAL WORKERS HELPING CENTRE (PVT) Ltd.**

நிறுவனத்துக்கு தென்மராட்சி வலயத்தை சேர்ந்த 100 நபர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு உண்டு.
வேலைக்குரிய நேர்முகத்தேர்வு
02.12.2012 ஞாயிற்றுக்கிழமை 03.12.2012
திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகைமைகள்
* O/L, A/L சித்தி
* தொழில்நுட்ப கணினி அறிவு (IT Courses)

(25525)(3.14)



**கங்காரு தேசத்துக்கான உங்கள் பயணக்கனவு இன்னும் 15 தினங்களில் நிறைவேறாமல் போகலாம் அல்லவா?**

ஆம் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ஆலோசனையின் இறுதிநாள் இம்மாதம் 15 ஆம் திகதியாகும்.
* கணவன் / மனைவி 53 வயதுக்குட்பட்டவர்கள்.
* படிமுறையான, விலாவாரியான எடுத்துரைப்பு
நம்பகரமான, பல சாதனைகள் படைத்த வடபுலத்தில் தனித்துவமான விசா ஆலோசனை நிறுவனத்திடம் விரைந்து வாருங்களேன்.
தங்களுக்காக காலை 7 மணிமுதல் மாலை 7 மணி வரை காத்திருப்போம்.
* எல்லாவித விசா ஆலோசனைகளுக்கும், சிங்கப்பூர் சென்றுவர விமான ரிக்கெற் இலவசம். (நிபந்தனைகளுக்கமைவாக)

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016

(25968)(3.14)

# ஞாபகார்த்த ஆராதனை

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் (வெளி 14:13)

## தாயார் ஒலிவ் செல்வமலர் தர்மானந்தன்



எங்கள் உள்ளத்தில் அன்னை
என்னும் அழியா இடத்தை
பெற்றுக்கொண்ட அணையா தீபமே
நீர் மறைந்து ஓராண்டு ஆன பின்னும்
மறையாது உள்ளது உம் நினைவு
நீர் மறைந்தாலும் உம் வாழ்க்கை
நம்மோடு இன்றும் பேசுகின்றது
மேன்மையை தேடி, உறவைத்தேடி
நீர் வாழாமல்
ஆண்டவர் ஆலயமே என் ஆவல் என
உம் வாழ்வு முழுதும் அர்ப்பணித்தீர்
அநாதைப் பிள்ளைகளுக்கெல்லாம்
நீர் அன்னையானீர்
நீர் வாழும் போதே நாம் வாழும் வழியை
எங்களுக்கு கூறினீர்
நீர் மறைந்த பின்பு உம் வாழ்வை
எங்களுக்கு மாதிரியாக விட்டுச் சென்றீர்
அனுதினமும் நாங்கள் அதில் நடக்க
இறை இயேசுவின் அருள் வேண்டி நிற்கின்றோம்
தங்கள் அன்பை என்றும் மறவாத

**ஊழியர்கள், விசுவாசிகள், கானான் சிறுவர் இல்ல பிள்ளைகள்.**

தாயார் ஒலிவ் செல்வமலர் தர்மானந்தத்தின் ஞாபகார்த்த ஆராதனை நாளை(02.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

**இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும்.**

அதைத்தொடர்ந்து தாயாரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☎ 021 223 0338

பிள்ளைகள்: நரேந்திரன்,மகேந்திரன்,ரவீந்திரன்,
தலைமைப் போதகர் Dr.A.V.ஜெபநாயகம்,
பெறாமகன் போதகர் வசந்தன் ஸ்ரீபன்.

[25877] [5.6.7]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதியதோர் உலகம் செய்வோம் -பாரதிதாசன்.

வார வசந்தம் 01

உதயன் 01 டிசெம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு



பல்லவன்

# இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும்

# இனிப்பு விஷங்கள்

மனிதாபிமானத்துக்கான போர், சமாதானத்துக்கான போர் என பல்வேறு விதமான கவர்ச்சிகரமான தலைப்புக்களில் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்புப் போர் 2009 ஆம் ஆண்டு மேமாதம் விடுதலைப் புலிகளின் ஆயுத உறக்கத்துடன் முடிவுக்கு வந்ததாக தற்போது வரை உலகம் நம்பிவருகின்றது. வெளிப்படையாக மனிதர்களைக் கொல்லும் அல்லது வன்முறையில் அவர்களுக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலான செயற்பாடுகளைக் கொண்ட போர் மட்டுமே முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் தமிழர்களைக் குறிவைத்த இனஅழிப்புப் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதற்கு அண்மைய கால சம்பவங்கள் பல சான்று பகர்ந்து நிரூபித்து நிற்கின்றன.

ஓர் இனம் தனது தோற்றுகை காலம் தொடக்கம் வரலாற்றாளர்கள் கண்டறிய முடியாத எல்லைகளில் இருந்து ஆரம்பிக்கும். பூர்வீகத்தின் ஆதியிலிருந்து இன்றுவரை படர்ந்துள்ள தனக்கே உரித்தான நிலப்பரப்பில் தனது வாழ்வியல் எல்லைகளைத் தானே தீர்மானிக்கும் விடயத்தில் வெளிப்படையாக எவரும் முரண்பட்டுக் கொள்வதில்லை. ஆனால் இந்தக் கொள்கையின் அடிப்படையில், தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக ஓர் இனம் உணர்ந்து அதற்கான நீதியைத் தேட விளையும்போது, பஞ்சாயத்துப் பண்ணிவைக்க பலர் தாமாகவே முன்வருகின்றமையும், அவர்கள் பஞ்சாயத்து அடக்கப்படும் தரப்பைக் காட்டிலும் அடக்கும் தரப்புக்கே சாதகமான தீர்ப்புக்களைக் கொடுப்பதும் காலம் காலமாக நடந்தேறி வரும் நிகழ்வுத் தொடர்ச்சி.

இந்தக் காலவழு நியதிக்கு ஈழத்தமிழர்களும் முகம் கொடுத்தாகவே வேண்டியுள்ளது. முப்பதாண்டுகளாகத் தம் மீது வெளிப்படையாகத் திணிக்கப்பட்ட போரை எதிர்கொண்டனர். அதற்கு முன்னாக திட்டமிடப்பட்டு தூண்டப்பட்ட, கால இடைவெளி இனக் கலவரங்களில் தமது உயிர்கள், உடைமைகளைத் தொலைத்தும் ஓர் இனஅழிப்பை எதிர்கொண்ட ஈழத்தமிழர்கள், 2009 மே இற்குப் பின்னர் வித்தியாசமான வகைகளில் உணரமுடியாத வடிவங்களில் இன அழிப்புப் போரை தெரியாது அனுபவித்து வருகின்றார்கள்.

போர் தமது நிலங்களை விழுங்கிய பொழுதுகளில், போரை நடத்திய தரப்பை நோக்கி ஓடி தமது உயிர்களை காப்பாற்றுவதை மட்டுமே இலக்காக கொண்டிருந்தனர் மக்கள். போர் தணிந்துள்ள இன்றைய பொழுதுகளில் போர் தின்று மிச்சமாயுள்ள தமது நிலங்களுக்கு மீளத்திரும்புகின்றனர். எனது வீடு, எனது வளவு, எனது மாமரம், எனது கிணறு எனும் தன்னிலைப்பட்ட சிந்தனைகளிலேயே அதிகம் வாழ்ந்து பழக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்று தமக்குரித்தானவை தெரிந்து பறிக்கப்படும் போதும் பல விடயங்களை வெளிப்படையாக உணராமல் அப்பாவிகளாக இருப்பது மிகவும் வேதனைக்குரியதாகின்றது.

தொட்டுணரக்கூடிய விடயங்கள் தொலையும் போது அதிகமாகச் சத்தமிடும் மக்கள், தொட்டுணரமுடியாத உரித்துக்கள் சூறையாடப்படும் போது மௌனிகளாக இருக்கின்றனர். அது அறியாமைத்தனம் என மன்னித்தாலும், அவர்களுக்கு தேவதூதர்களாக தம்மை அடையாளப்படுத்தி அணிவகுத்து நிற்கும் தேசிய உணர்வுகளை தளமாகக் கொண்ட அரசியல் தலைவர்களும் ஆபத்தின் விளைவை அதிகம் உணராமல் இருப்பது ஈழத் தமிழினத்தின் எதிர்கால நிரந்தர வேதனைகளுக்கு வித்திடலாம்.

ஒரு இனம் தனது நிலம் சார்ந்த உரித்தை நிரூபிப்பதில் அந்த நிலத்தில், தான் வாழ்ந்த காலப்பரப்பு எவ்வளவு முக்கியமோ, அந்தளவுக்கு அந்த நிலத்தில் இவ்வினத்தின் குடிப்பரம்பலும் மிகவும் முக்கியமானது. இந்த நிலைப்பாட்டு நிலைத் திருப்புக்கான தளத்தை ஈழத் தமிழினம் மெல்ல மெல்ல இழந்து வருகின்றது. இந்த இழப்பை ஏற்படுத்தும் காரணிகள் குறித்து சிந்திக்கும் போது இரண்டு வகுதிகளை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும். ஒன்று நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் காரணிகள். இரண்டாவது மறைமுகமாகப் பங்களிப்புச் செய்யும் காரணிகள். இவற்றுள் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் காரணிகள், சிந்திக்கும் திறனுள்ள அத்தனை பேராலும் இலகுவாக அடையாளப் படுத்தக்கூடியவையும், குறுகிய காலத்துக்குள்ளேயே பாதிப்புக்களை தீவிரப்படுத்தும் வல்லமையும் உடையன.

மறைமுகக் காரணிகள், இலகுவில் எல்லோராலும் உணரப்பட முடியாதவை. நீண்ட காலத்துக்கு பின்னர் ஒருபோதும் மீளப்பெற முடியாத பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன. இம்மறைமுகக் காரணிகள் தொடர்பில் அதிக அக்கறையும் விழிப்புணர்வும் விடுதலை வேண்டி நிற்கும் ஓர் இனத்துக்கு அவசியமாக இருக்க வேண்டும்.

தற்போது இலங்கையில் தமிழ் மக்களின் நிலைத்திருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் இலங்கையின் எப்பாகத்திலும் இலங்கைப் பிரஜைகள் எவரும் வசிக்கலாம்; வியாபாரம்செய்யலாம்; போகலாம், வரலாம் என்ற தாராளமயமான ஜனநாயகத்தை நிலைநாட்டுவது போல் காட்டிக் கொள்ளும் இலங்கை அரசு, தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை வரவேற்பது போல் கண்டும் காணாமல் இருக்கின்றது. தமிழ்மக்கள் தமது உரிமைப்போராட்டத்தை உலகின் தனிப்பார்வைக்குள் கொண்டு போய் நிறுத்திய முல்லைத்தீவு மண் இன்று பன்மைத்துவ இனங்களின் வாழ்விடமாக வெகுவேகமாக மாறிவருகின்றது. தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளை ஆக்கிரமித்துக் கைப்பற்றி குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

பல தலைமுறையாக அந்த மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்கள் காடுகளிலும், வாழ முடியாத பிரதேசங்களிலும் விருப்பத்துக்கு மாறாக வலுக்கட்டாயமாக மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் பலரின் சொந்த நிலங்கள், பாதுகாப்பு எனும் போர்வைக்குள் பதுக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் தனித்து செறிந்து வாழும் பிரதேசம் என இலங்கையில் இனி எதுவும் இருக்கக் கூடாது என்பதில் இலங்கை அரசு மிகக் கவனமாக திட்டமிட்டு தனது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

ஒரு காலத்தில் 12 லட்சத்தை அண்மித்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து இன்று நான்கு இலட்சத்தை அண்மித்து நிற்கின்றது. போரைக் காரணம் காட்டி 1980 களில் ஜே.ஆர் அரசு கட்டுநாயக்க விமான நிலையத்தின் கதவுகளை அகலத்திறந்து விட்டது. தமிழ் இளைஞர்கள் இலங்கையில் இருப்பது ஆயுதப் போராட்டத்தில் ஆள் எண்ணிக்கையை அதிகரித்து விடும் என எண்ணியே ஜே.ஆர் தமிழர்களின் புலம்பெயர்வை ஊக்குவித்தார். பின்னாளில் அதுவே இன்று வரை ஆயுதப் போராட்டத்தை தாங்கு சக்தியாகப் பரிமாணம் எடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. இருந்த போதும், இன்று இலங்கையில் இலங்கைத் தமிழர்களை எண்ணிக்கையில் பின்னோக்கித் தள்ளிய பாதகமான விடயமாகவும் புலம்பெயர்வு அமைந்துள்ளது. இதே செயற்பாட்டை இன்றும் மறைந்த அரசு மிக லாவகமாகச் செய்து வருகின்றது. இது பலருக்குப் புரியாத, தெரியாத விடயம்.

ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்படும் பல கப்பல்கள் ஆசிர்வாதத்துடனேயே கடலில் இறங்குவதாகவும், அத்தகைய கடத்தல் கப்பல்கள் பல முக்கிய புள்ளிகளுக்கு சொந்தமானவை எனவும் கடத்தல் வேலைகளை கச்சிதமாக நிறைவேற்றும் நபர்கள் கைக்கூலிகள் எனவும் தெரிய வருகிறது. அவர்களுக்கிடையில் அவ்வப்போது ஏற்படும் முரண்பாடுகளின் போது சட்டத்துக்குப் புறம்பாக ஆட்கடத்தலில் ஈடுபட்டார்கள் எனக் கைது செய்யப்பட்டு பின்னர் சட்டரீதியாக தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டமையும் பல தடவைகள் நடந்த விடயம். ஆஸ்திரேலியக் கரைகளை எட்டும் படகுகள் பல, நடுக்கடலில் வைத்து உணவு தண்ணீர் என்பவற்றையும் அதிகாரத் தரப்பின் மூலம் பெற்றுக் கொண்டதாக பயணத்தை நிறைவு செய்த பலர் உறவுகளுக்கு தகவல் அனுப்பி உள்ளார்கள். ஆட்கடத்தலின் அடிப்படை பற்றி ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. மாறாக ஆஸ்திரேலியாவுக்கான ஆபத்தான பயணங்கள் எமது இனத்தின் நிலைத்திருப்புக்கும் ஆபத்தை தோற்றுவிக்கும் விடயமாக மாறியுள்ளமையைச் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கம்.

குடிபெயர்வு என்பது ஓர் இனத்தின் எதிர்காலத்தை தனது சொந்த நிலத்தின் மீதான உரிமையை வெகுவாக பாதிக்கும் ஒரு காரணி. இதனை உணராது வெறும் பொருளாதாரக் கனவுகளை மட்டும் சுமந்து கொண்டு கப்பலேறும் நாம் கடைசியில் அங்கும் அகதிகளாகி சொந்த நாடு ஒன்று அற்று உலகம் முழுவதும் பரதேசிகளாகவே அலைய நேரிடும்.

அதனை விட அண்மைக்காலமாக மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்ல இனஅழிப்பின் மறைமுகக் காரணியொன்று மிக வேகமாக எல்லோருக்குமான இலங்கை என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதாவது இலங்கை இராணுவத்துக்கு பெண்களைச் சேர்க்கும் வேலை.

வன்னிப்பகுதியில் அம் மக்களின் வறுமையை காரணமாக வைத்து பெண்களை மட்டும் இராணுவத்துக்கு சேர்க்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பாவம், வன்னிப் பெற்றோர்கள். பிள்ளைகளை விரும்பி இணைத்தோம் என்று புகைப்படத்துக்கு முகம் காட்ட வேண்டிய நிலை தொடர்கின்றது. இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு என்ற பெயரில் பெண்களைச் சேர்ப்பது தொடர்பில் பல நியாயமான வினாக்கள் எழுகின்றன

ஏன் பெண்களை மட்டும் இணைத்துக்கொள்கின்றார்கள்? ஆண்களை என்ன காரணத்துக்காகத் தவிர்த்துக் கொண்டார்கள்? இராணுவத்துக்கு ஆட்சேர்த்து விட்டு ஆயுதப்பயிற்சி கொடுக்கவில்லை என்றால் எதற்காக எடுத்தார்கள்? சமைப்பதற்காகவா? என்ற பல கேள்விகள் எழுகின்றன.


''பழகப்பழக பிடிக்கும்'' என்ற தத்துவத்தை நன்குணர்ந்த அரசு, திருமணமாகாத தமிழ் பெண்களை இராணுவத்துக்கு சேர்த்து ஓர் இனக்கலப்புக்கு திட்டமிடுகின்றது. இறுதிப்போரில் தமிழ் பெண்களின் கற்பைச் சூறையாடிய இராணுவம், அரசின் இராணுவத்துக்கு பெண்களை ஆட்சேர்க்கிறார்கள்.

(வாரவசந்தம் 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பாடம் செய்யாதீர்கள்

## மனப்படம் செய்யுங்கள்



விகடன்

நினைவாற்றல்... இது நமக்கான பெரும் வரப்பிரசாதம். நம்முடைய தேர்வு அமைப்புகளும், பணித்திறனும், நடைமுறை வாழ்க்கையும் நினைவாற்றல் திறனின் மேம்பாட்டுக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன... சிறப்புப் பெறுகின்றன!

இங்கே, பாடசாலை பொதுத்தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு, நினைவாற்றல் திறனுக்கான நடைமுறை குறிப்புகளை தருகிறார், சர்வதேச நினைவாற்றல் பயிற்சியாளர் ஜான் லூயிஸ்.

17 வருடங்கள் முதுநிலை ஆசிரியராக இருந்து, தற்போது 5 ஆண்டுகளாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக நினைவாற்றல் பயிற்சியளித்து வரும் ஜான் லூயிஸ், நான்கு முறை உலக நினைவாற்றல் விருதை வென்ற ஒரே இந்தியர். நினைவாற்றலை உரசிச் சொல்லும் நாக் அவுட் போட்டியில் ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவர். அடிப்படையில் ஆசிரியர் என்பதால், தனது அனுபவத்தை ஒட்டிய அற்புதமான நினைவாற்றல் உத்திகளை உதிர்க்கிறார். படிப்பது, படித்தவற்றை மனதில் இருத்துவது, பரீட்சைக்காக மீண்டும் நினைவுகூர்வது... இதுதான் நினைவாற்றலை வலுப்படுத்தும் மூன்று முக்கிய நிலைகள். இதில் சில அடிப்படைகளைப் புரிந்து கொண்டால்... நினைவாற்றல் கலை என்பது சுலபமானதோடு, சுவாரஸ்யமானதாகவும் மாறிவிடும். படிப்பதற்கு முன்பாக, படிக்கும்போது, படித்த பிறகு என மூன்று கட்டங்களாக இவற்றைப் பார்க்கலாம்.

**படிப்பதற்கு முன்பாக..!**

படிக்க அமர்வதற்கு முன்பாக, முதலில் மனதளவில் தயாராக வேண்டும். அந்த தயார்படுத்துதல் சுய ஆர்வத்துடன் நிகழ வேண்டும். மேற்படிப்பாக எதைப் படிக்கப் போகிறோம், படித்து என்ன வேலைக்கு செல்லப் போகிறோம், எந்த மாதிரியான சாதனைகளைச் செய்யப் போகிறோம், எவ்வளவு வசதி வாய்ப்புகளுடன் நலமாக வாழப் போகிறோம் என ஏற்கெனவே கற்பனை செய்திருப்பவற்றை, சில நிமிடங்கள் நினைத்துப் பார்ப்பது, அதற்கு உதவும். இவற்றை ஒரு சந்தோஷ சாதமாக மனதுக்குள் அல்லது கண்ணாடி முன்பாக சொல்லிவிட்டு படிக்க அமரலாம்.

வீட்டில் தினமும் ஒரே இடத்தில் அமர்ந்து படிப்பது நல்லது. அந்த இடம் போதுமான காற்றோட்டம் பெற்றிருப்பதோடு, டி.வி, வாகன இரைச்சல் குறைவானதாகவும் இருக்க வேண்டும். பாடம் தொடர்பான அனைத்துப் பொருள்களையும் கைக்கெட்டும் தூரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மூளையின் ஆக்ஸிஜன் பற்றாக்குறைக்கு அத்தியாவசியமானது தண்ணீர் என்பதால், தண்ணீரும் உடன் இருக்கட்டும்.

சற்று முன்பாகத்தான் டி.வி, அரட்டை போன்றவற்றிலிருந்து திரும்பியிருப்பின், கவனத்தை ஒருமுகம் செய்ய புதிர்களைத் தீர்ப்பது, சுடோகு போன்றவற்றில் இரண்டொரு நிமிடங்களை செலவு செய்யலாம்.

படிப்பதற்கான நேரம் ஒவ்வொருவருக்கும் ஏற்ப காலை, மாலை, இரவு என அமையலாம். ஆனால், தினசரி அதே நேரத்தில் படிப்பது நல்லது. 50 நிமிடங்கள் படிப்பதை மட்டுமே மூளை தொடர்ந்து கிரகிக்கும். அதற்கு ஏற்றவாறு பாட அளவை திட்டமிட்டு படிக்க வேண்டும்.

**படிக்கும்போது..!**

முதல் முறையாக ஒரு பாடத்தைப் படிக்கிறோம் என்றால், கவனம் அவசியம். வகுப்பில் நடந்த பாடத்தை அல்லது செய்முறையை மனதில் ஒருமுறை படரவிட்டு, கையில் பென்சிலுடன் முக்கியமான வார்த்தைகளை அடிக்கோடிட்டவாறே வாசிப்பைத் தொடர வேண்டும். இரண்டாம் முறை படிக்கும்போது அடிக்கோடிட்ட முக்கிய வார்த்தைகளை மட்டும் ஒன்றுக்கொன்று வரிசையாகத் தொடர்புபடுத்தி மனதுக்குள் இருத்திக்கொள்ள வேண்டும்.

படிப்பது என்றாலே மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என சகல தரப்பினரும் நினைப்பது... மனப்பாடம் செய்வதைத்தான். ஆனால், அடிப்படைக் கூறுகள் தவிர்த்து, மற்றவற்றை வெறுமனே மனப்பாடம் செய்தால்... அவை மனதில் தங்காது. பாடத்தைப் புரிந்துகொண்டு, உணர்ந்து, காட்சிப்படுத்தி, அவற்றின் பொருளோடு படிக்கும்போதுதான் அவை மனதில் தங்கும். அதாவது, மனப்பாடம் செய்யாதீர்கள்... மனப்படம் செய்யுங்கள்!

காட்சிப்படுத்துதல் என்பது எளிமையாகவும், மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணத்துக்கு அந்தமான் நிக்கோபார் என்பதை அந்தமான் நிக்குது பார் என்றும், எத்தியோப்பியாவை எத்தி உதைப்பயா, என்சைக்ளோபீடியாவை என்சைக்கிளைப் பிடிப்பியா என்றும் ஆரம்பித்து, அர்த்தமற்ற வார்த்தைகளுக்கும் பொருள் சொற்களுக்கும்கூட அர்த்தமுள்ள வசனங்களைப் பயன்படுத்தலாம்.

இவற்றை காட்சிப்படுத்திக் கொள்வதும் அவசியம். இதற்கு இரண்டு வழிகள் உதவும். முதலாவது, PLAYV (Picture, Location, Association, funnY, Visualisation) அதாவது, பாடத்தை, அது தொடர்பாக மனதில் தோன்றும் படத்தை, அடுத்தடுத்த கருத்துக்களை ஒன்றோடு ஒன்றாக தொடர்புபடுத்தி, வேடிக்கையாக காட்சிப்படுத்திக் கொள்வது. இதை சுவாரஸ்யமாக்க, கார்ட்டூன் உத்தி உதவும். எதையும் மிகைப்படுத்தி பிரமாண்டமாகவும், வண்ணங்களோடும், கவர்ச்சிகரமாகவும் கற்பனை செய்துகொள்ளலாம். இது பொதுவான வாசிப்புக்கு உதவும்.

கடினமான புதிய வார்த்தைகளை மனதில் இருத்த AMPM (Alternative, Meaningful, Personalize, Mental picture) மெதேட் கை கொடுக்கும். அதாவது, பாடத்திலிருந்து மாறுபட்ட, அதேசமயம் அர்த்தமுள்ள, தனிப்பட்ட விதத்தில், மனப்படமாக இருத்திக்கொள்ளுதல். உதாரணத்துக்கு, ஃபியூஜியாமா (Fujiama) என்ற மிகப்பெரும் எரிமலையின் பெயரை ஞாபகம் வைத்துக் கொள்ள, எங்கள் உறவினரான பிஜி என்ற பெண்மணி, ஒரு எரிமலை மீது நின்று கொண்டிருப்பதைப் போல கற்பனை செய்துகொண்டான் என் மகன். இதையே இன்னொரு மாணவன் தனக்குப் பிடித்த உடையான பைஜாமா அணிந்துகொண்டு, அவனே எரிமலை அருகில் நிற்பதாக கற்பனை செய்து, அந்த வார்த்தையை மனதில் பதிய வைத்துக் கொண்டான்.

கற்பனை, காட்சிப்படுத்துதல் எதுவானாலும் அதில் ஒரு தொடர்பு இருப்பின் அது நினைவுப் பெட்டகத்திலிருந்து எளிதில் அழியாது.

அடுத்ததாக, மனித கண்ணின் தொடர்ச்சியான உழைப்பு ஒரு சமயத்தில் 40 நிமிடங்கள் மட்டுமே. எனவே, 20 நிமிட படிப்புக்கு பிறகு, 20 விநாடிகள் இடைவெளிவிட்டு, அந்நேரத்தில் 20 மீட்டர் தொலைவிலிருக்கும் ஏதேனும் பசுமையான இயற்கையான விஷயங்களின் மீது பார்வையை விடுங்கள். பாடத்துக்குத் திரும்பலாம். இப்போது 20 நிமிடங்கள் படித்ததன் குறிப்புகளை இரண்டு நிமிடங்களில் திருப்பிப் பார்த்துவிட்டு, அடுத்த 20 நிமிட சுழற்சியை மேற்கொள்ள வேண்டும். இப்படி இரண்டு சுற்றுகள் முடித்ததும்... அடுத்த 40 நிமிட அமர்வுக்கு முன்பாக 10 நிமிட இடைவேளை அவசியம். ஆக, இப்படியான இடைவெளிகள் ஒரு மணிக்கு ஒருமுறை என்பதாக அமைந்துவிடும்.

**படித்த பிறகு..!**

எவ்வளவு படித்தாலும் அவை மூளையின் நிரந்தரப் பதிவாக மாற, ரிவிஷனில் இருக்கிறது சூட்சுமம். விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, படித்த பாடம் அடுத்த 24 மணி நேரத்தில் 40% மறதிக்குள்ளாகிறது. இப்படியே விட்டால்... 21 நாட்களில் குறிப்பிட்ட பாடத்தை படித்ததற்கான சுவடே இருக்காது. எனவேதான் நம்முடைய பாரம்பரியத்தில் ஒரு பழக்கத்தை வழக்கமாக மாற்றிக் கொள்ள, 21 நாள் பயிற்சி மேற்கொள்வதை வைத்திருக்கிறார்கள்.

ரிவிஷனில் இந்த 4 நிலைகளைப் பின்பற்றுங்கள். முதல் நாள், 3-வது நாள், 7-வது நாள், 30-வது நாள் என்ற கணக்கில், ஆங்கிலம், அறிவியல் என ஒவ்வொரு பாடத்தையும் தினசரி நான்கு விதமாக திருப்பிப் பார்க்கவேண்டும். தினசரி வீட்டுப்பாடம், இவற்றுக்கான நேரமே தடுமாற்றமாகும்போது தினசரி நான்கு ரிவிஷன்களா? என மிரள வேண்டாம். படிப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டால், முதல் ரிவிஷனுக்கு 10 நிமிடமே எடுத்துக்கொள்ளும். அடுத்தடுத்த ரிவிஷன்கள் மேலும் குறைவான நிமிடங்களில் முடிந்துவிடும். மேலும் இந்த ரிவிஷனை கடினமான பாடங்களை முதல்முறை படிக்கும்போது இடையிடையே மேற்கொள்ளலாம்; அல்லது தூங்குவதற்கு முன்பாகவோ, பயணத்தின்போதோ, காத்திருப்பின்போதோகூட மேற்கொள்ளலாம். சிலர் எதற்கெடுத்தாலும் எழுதிப் பார்ப்பார்கள். இது ரிவிஷனுக்கான நேரத்தைச் செரித்துவிடும். எப்போதும் வகுப்புக்கு மேல் கடினமான பாடப் பகுதிகளை மட்டுமே எழுதிப் பார்த்தால் போதுமானது.

ஆக்கம், படித்தல், திருப்பிப் பார்த்தல் இவற்றோடு... பரீட்சை தினத்தையும் அவ்வப்போது மனக்காட்சியில் வெற்றிகரமாக பலமுறை மனத்திரையில் ஓடவிட்டுப் பார்ப்பது நல்லது. இது கடைசி நேர தடுமாற்றங்களை தவிர்க்கச் செய்யும்.

இவை தவிர்த்து, அத்தியாவசிய தூக்கம், உணவு, ஓய்வுக்கு உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, தினசரி குறைந்தது 2 லீற்றர் தண்ணீர்... இவற்றையும் மறந்துவிட வேண்டாம்!

# பறவைகள் பற்றிய தகவல்கள்



செந்தியா

நாம் பார்த்து பொறாமைப்படும் இனங்களில் பறவை இனம்தான் முதலில் இருக்கும். சுதந்திரத்திற்கு பெயர்போன பறவை இனங்களைப் பற்றிய சில தகவல்களை இங்கே காணலாம்.

பொதுவாக பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில், பறவைகளின் கால்களில் சிறு வளையத்தை மாட்டிவிட்டு, அதன் மூலம் பறவையினங்களின் வாழ்வியல் முறை, நடமாட்டம், ஆயுள், இனவிருத்தி போன்றவற்றை ஆய்வு செய்கின்றனர்.

கால்களின் அளவுக்கு ஏற்ப சிறிய மெட்டி போன்று இந்த வளையம் அமையும். இந்த வளையத்தில் சில குறியீட்டு தகவல்கள் இருக்கும். இதுபோன்று வளையமிட்ட பறவையைப் பார்க்கும் பறவை ஆர்வலர்கள், இந்த வளையத்தில் இருக்கும் குறியீட்டைக் கொண்டு, வளையத்தை மாட்டியவர்களை தொடர்பு கொண்டு பேசும் போது பறவை தற்போது, எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இனி பறவைகளைப் பற்றி பார்ப்போம்...

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மிக்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.

குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.

ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 4 பறவை இனங்கள் இருக்கின்றன.

நீரை உறிஞ்சி[...] ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.

வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.

வான்கோழிகள் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

பறவைகளின் மன தைரியத்தை குறிப்பிடும் திரைப்படப் பாடல் ஒன்று உள்ளது. சத்தம் போடாதே என்ற திரைப்படத்தில் வரும் பாடலின் ஒரு சில வரிகள்.

**கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்**<br>**இளைப்பாற மரங்கள் இல்லை.**<br>**கலங்காமலே கண்டம் தாண்டுமே..**

இதை நினைத்துத்தான் நாம் நமக்கு வரும் சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்

## ரயில் பாதைகள் பத்து



1.காங்கேசன்துறை
2.யாழ்ப்பாணம்
3.மாங்குளம்
4.வவுனியா
5.மதவாச்சி
6.அநுராதபுரம்
7.திருகோணமலை
8.கல்லோயா
9.கண்டி
10.அவிஸாவளை

## விமான நிலையங்கள்




1.பலாலி
2.திருகோணமலை
3.ஹிங்குராக்கொட
4.மட்டக்களப்பு
5.விரவில
6. இரத்மலானை
7. கட்டுநாயக்கா

## துறைமுகம்



1.திருகோணமலை
2.மன்னார்
3.கொழும்பு
4.காலி
5.மட்டக்களப்பு
6. அம்பாந்தோட்டை
7. காங்கேசன்துறை

ஜெ.தரணிகா,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

# மூன்றெழுத்தில் வாழ்வு

உலகில் உள்ள ''உயிர்'' மூன்றெழுத்து
உயிரை இயக்கும் ''சக்தி'' மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் ''அன்னை'' மூன்றெழுத்து
அன்னை காட்டும் ''அன்பு'' மூன்றெழுத்து

அன்பை உயர்த்தும் ''அறிவு'' மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் ''பள்ளி'' மூன்றெழுத்து
பள்ளியில் கற்கும் ''கல்வி'' மூன்றெழுத்து
கல்வியால் உருவாகும் ''பதவி'' மூன்றெழுத்து

பதவியை சிறப்பிக்கும் ''இளமை'' மூன்றெழுத்து
இளமை தரும் திரு ''மணம்'' மூன்றெழுத்து
மணத்தால் இணையும் ''மனைவி'' மூன்றெழுத்து
மனைவியால் உருவாகும் ''மழலை'' மூன்றெழுத்து

மழலைக்கு செலவாகும் ''பணம்'' மூன்றெழுத்து
பணத்தினை தேடும் ''கைகள்'' மூன்றெழுத்து
கைகள் சோரும் போது ''முதுமை'' மூன்றெழுத்து
முதுமையின் பின் ''முடிவு'' மூன்றெழுத்து

முடிவின் பின் தேவைப்படும் ''பெட்டி'' மூன்றெழுத்து
பெட்டியில் அடங்கும் ''பிணம்'' மூன்றெழுத்து
பிணம் எடுத்துச் செல்லும் ''ஊர்தி'' மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் இடம் ''சுடலை'' மூன்றெழுத்து

சுடலையில் வைக்கும் ''கொள்ளி'' மூன்றெழுத்து
கொள்ளியில் எரிந்த ''அஸ்தி'' மூன்றெழுத்து
அஸ்தி கரையும் ''கடல்'' மூன்றெழுத்து
இது தான் மனித ''வாழ்வு'' மூன்றெழுத்து .

சி. ஹரிஹரன்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.




# பழமொழிகள்

★ கசப்பு மாத்திரைதான் பிணி தீர்க்கும்
★ ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி புரை
★ ஓய்வு என்பது உறக்கத்தில் இல்லை
★ அணில் ஏற தென்னை அசையுமா?
★ துணை போனாலும் பிணை போகாதே
★ பாய்க்கு தக்கபடி கால் நீட்டு
★ ஔவை சொல் அமிர்தம்
★ போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்
★ கெடுமதி கண்ணுக்கு தெரியாது
★ அதிகாரம் இல்லாவிட்டால் பரிகாரம் வேண்டும்
★ அரைகுறை படிப்பு ஆபத்தானது
★ ஆயுசு கெட்டியானால் ஔடதம் பலிக்கும்
★ தீரா வழக்குக்கு தெய்வமே சாட்சி
★ புல்லை மடக்கி நெல்லை நடு
★ புழுதி உண்டானால் பழுதில்லை
★ பால் சோற்றுக்கு பருப்புக்கறியா?
★ கல்வி விரும்பு
★ குற்றம் பார்க்கின் சுற்றமில்லை

அ.சிரோன் கிசாந்,
புனித பத்திரிசியார் கல்லூரி.

# எலியின் சபதம்



ஒரு வீட்டின் கூரையில் இரண்டு எலிகள் வசித்து வந்தன. ஒன்று அம்மா எலி மற்றது பிள்ளையான குட்டி எலி. பூனை ஒன்று மியாவ் மியாவ் என்று கத்திக் கொண்டு வந்தது. அந்தச் சத்தம் கேட்டதும் அம்மா எலி குட்டி எலியை அணைத்துக்கொண்டு மூலையிற் பதுங்கியது.

சின்ன எலி ''ஏன் அம்மா இப்படிப் பயப்படுகிறீர்கள்'' எனக்கேட்டது. ''உனது அப்பாவை இந்தப் பூனைதான் பிடித்துக்கொன்றது. அதனால் தான் எனக்குப் பயம்'' என்றது தாய். ''அம்மா ஏன் இப்படிப் பயப்படுறீர்கள். இந்தப் பூனைக்கு நான் மணியைக் கழுத்தில் கட்டிவிடப்போகிறேன். இது எனது சபதம்'' என்று சத்தியம் செய்தது.

''மகனே எம் முன்னோர்களால் முடியாதது உன்னால் முடியுமா?'' என அம்மா எலி கேட்டது. ''என்னால் முடியும் அம்மா. இன்றே இந்தப் பூனைக்கு மணி கட்டிவிடுகிறேன் பாருங்கள்'' என்று கூறியது குட்டி எலி.

சின்ன எலி அவ் வீட்டின் தோட்டத்தில் உள்ள மாட்டுத்தொழுவத்துக்குச் சென்றது. ''பசுவாரே, பசுவாரே எனக்கு உங்கள் கழுத்தில் உள்ள மணியைத் தருவீர்களா'' என்று கேட்டது. பசுவும் ''இதோ'' என்று தனது கழுத்து மணியைக் கொடுத்தது. சின்ன எலியும் அம்மணியைத் தன் கழுத்தில் கட்டிக்கொண்டு மெல்ல, மெல்ல நடந்து பூனை இருக்குமிடம் தேடிச் சென்றது.

மணி ஒலி கேட்ட பூனை எலியைப் பிடிக்கப் பார்த்தது. இதைக்கண்ட சின்ன எலி ''பூனை அண்ணா எனது கழுத்து மணியைப் பாருங்கள். இதை உங்களுக்காகவே வாங்கிவந்தேன்'' என்று கூறியது. பூனை ''எனக்குப் பசியாக இருக்கிறது உன்னைப் பிடித்துத் தின்னப் போகிறேன்'' என்று கூறியது. உடனே சின்ன எலி ''பூனை அண்ணா ஒரே ஒருமுறை இம்மணியைக் கட்டிய பின் என்னைப் பிடித்துச் சாப்பிடுங்கள்'' என்று கூறியது.

பூனைக்கு ஆசை வந்தது. ''சரி மணியை எனது கழுத்தில் கட்டி விடு பார்க்கலாம்'' என்று கூறியது. சின்ன எலி மிகுந்த மகிழ்ச்சியுடன் தனது கழுத்தில் இருந்த மணியைக் கழற்றி பூனையின் கழுத்தில் கட்டிவிட்டது. ''பூனையண்ணா எங்கே ஆடி அசைந்து நடந்து பாருங்கள்'' என்றது எலி. பூனைக்கும் பெருமை ஏற்பட்டது. ஒயிலாக நடக்கத் தொடங்கியது. மணி ஒலி எழ, மேலும் வேகமாக நடந்தது.



இதையே எலி எதிர்பார்த்தது. அது நிறைவேறியது என்ற மகிழ்ச்சியில் தனது தாயாரைத் தேடி ஓடியது. வெற்றிக்களிப்பில் தாயைத் தழுவிக்கொண்டது. அம்மா எலியும் மகனின் துணிச்சலைப் பாராட்டியது.

''துணிவே துணை''

சர்மிளா லூயிஸ்
நாரந்தனை.

# அறிந்து கொள்வோம்

* மிகச் சிறிய முட்டை இடும் பறவை - தேன்சிட்டு
* அதிக ஞாபக சக்தி கூடிய விலங்கு - யானை
* பல் இல்லாத முலையூட்டி - தேவாங்கு
* அதிக நீர் அருந்தும் பறவை - புறா
* பறக்கும் போது தூங்கும் பறவை - அல்பட் றாஸ்
* கண்ணால் வியர்வை போக்கும் விலங்கு - முதலை
* பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் பிராணி - ஒட்டகம்
* கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை - பென்குயின்
* விவசாயத்தில் பூச்சி புழுக்களை அழிக்கும் பறவைகள் - செம்பகம், மைனா
* கடலில் செங்குத்தாக நின்றபடி பக்கவாட்டில் நீந்தும் பிராணி - கடல் குதிரை
* பறக்க முடியாத பறவைகள் - கிவி, பென்குயின், தீக்கோழி
* நீந்திக் கொண்டிருக்கா விட்டால் இறந்து விடும் உயிரினம் - சுறாமீன்
* ஓர் ஒட்டகம் இறந்து கிடப்பதை இன்னோர் ஒட்டகம் பார்த்தால் அதுவும் இறந்து விடும்
* சத்தமிடாத விலங்கு - ஒட்டகச்சிவிங்கி

அ.சலோமி, தரம்-5,
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிலர் அவர்களது வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும் போது எல்லாம் என் விதி! என்ன செய்வது? என்று விரக்தியில் பேசுவார்கள். அவர்களை முட்டாள்கள், சோம்பேறிகள் இன்னும் எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். புத்திசாலிகளும் உழைப்பாளிகளும் அப்படி கூற மாட்டார்கள். துணிந்து போராடுவார்கள்.*

■ பிரியன்



# விதியை மதியால் வெல்லலாம்....

இதுதான் நமது வாழ்க்கைக்கு தேவையான முக்கியமான பழமொழி. ஏனென்றால் சிலர் அவர்களது வாழ்கையில் துன்பங்கள் ஏற்படும்போது எல்லாம் என் விதி! என்ன செய்வது? என்று விரக்தியில் பேசுவார்கள். அவர்களை முட்டாள்கள், சோம்பேறிகள் இன்னும் எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். புத்திசாலிகளும் உழைப்பாளிகளும் அப்படி கூற மாட்டார்கள். துணிந்து போராடுவார்கள். நடக்கப்போகும் கெடுதலை நம் நம்பிக்கை மற்றும் கடின உழைப்பால் தடுக்கலாம். அதற்கு உதாரணமாகப் பின்வரும் கதையை கூறுகிறேன். முன்னொரு காலத்தில் செல்வன் என்னும் பெயருடைய ஒருவன் வியாபாரத்துக்காக வெளியூர் சென்றுகொண்டிருந்தான். அந்த ஊருக்குச் செல்லும் வழியில் ஒரு காட்டை கடக்க வேண்டியிருந்தது. வழியில் அவனுக்கு மிகவும் பசித்தது. கொண்டுவந்த சாப்பாடும் தீர்ந்துவிட்டது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்போது தூரத்தில் ஒரு மாமரம் தென்பட்டது. அதனருகில் சென்றான். மாமரத்தில் காய் கனிகள் காய்த்து தொங்கின. அதன் கீழே ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். செல்வன் தனது பசியை போக்க மாம்பழம் பறித்து சாப்பிட எண்ணினான். ஆனால் எட்டவில்லை. எனவே அவன் கல்லை எடுத்து ஒரு பழத்தை குறிவைத்து எறிந்தான். ஆனால் பழம் விழவில்லை. அந்த கல்தான் மரத்தில் பட்டு மீண்டும் வந்து அந்த முனிவரின் தலையை பதம் பார்த்தது.

வலி தாங்கமுடியாத முனிவர் கத்தினார். அதனால் அவர் தவம் கலைந்தது. அவர் அவனை கோபத்தோடு நோக்கினார். அவனோ நடுங்கிப்போய் இருந்தான். அடேய்! துன்மார்க்கா! எனது இருபது வருட தவத்தை கலைத்துவிட்டாயே! என்றார். மன்னித்துவிடுங்கள் சுவாமி என்றான் அவன். காரியம் கூடி வரும் நேரத்தில் அனைத்தையும் கெடுத்துவிட்டாயே! உனக்கு மன்னிப்பே கிடையாது. இதோ வாங்கிக்கொள் என் சாபத்தை; இன்னும் ஒரு வருடத்தில் நீ இறந்துவிடுவாய் என்றார். சாபத்தை வாங்கிய செல்வன் அதிர்ந்து போனான்.

சுவாமி! நான் வேண்டுமென்று செய்யவில்லை. மாங்காய் பறித்து என் பசியை ஆற்ற கல்லெறிந்தேன். அது உங்கள் மீது பட்டுவிட்டது. இதற்கா இவ்வளவு பெரிய சாபம்? என் பிழையை பொறுத்து எனக்கு சாபவிமோசனம் தாருங்கள் என்று கெஞ்சினான், கதறினான். அவனைக் கண்டு முனிவர் மனமிரங்கினார். கொடுத்த சாபம் கொடுத்ததுதான். நீ இறந்தே தீருவாய். ஆனால் ஒன்று மட்டும்தான் என்னால் கூற முடியும். நம்பிக்கையோடு இரு. ஒருவேளை உனக்கு விமோசனம் கிடைக்கலாம் என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு சென்றார். அவனோ அந்த இடத்திலேயே அமர்ந்து நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தான். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். எப்படியும் ஒரு வருடத்தில் இறக்கப்போகிறோம்; அதனால் இனிமேலாவது நல்லது செய்வோம். அப்போதுதான் நமக்கு சொர்க்கமாவது கிடைக்கும் என்ற முடிவுடன் தனது ஊருக்குச் சென்றான். தனது சொத்துக்களை எல்லாம் விற்று ஏழைகளுக்கு உதவி செய்து வந்தான். சில மாதங்கள் ஓடின. அவன் சொத்துக்கள் அனைத்தும் கரைந்தன. எனவே அவன் துறவறம் மேற்கொள்ள நினைத்தான். ஒரு துறவற மடத்தில் சேர்ந்தான். அங்கு அவனுக்கு நிறைய வாழ்க்கையின் தத்துவங்கள் போதிக்கப்பட்டன. ஒரு நாள் குரு அனைவருக்கும் தவம் செய்வதை பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். சீடர்களே! இன்று உங்களுக்கு தவத்தைப் பற்றி கூறப்போகிறேன். நமது ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி ஒரு நோக்கத்துக்காக ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை வேண்டி செய்வதுதான் தவம்.... இவ்வாறாக அவர் கூறிக்கொண்டிருந்தார். குருவே நான் ஸ்ரீதேவியிடம் ஒரு வரம் கேட்கவேண்டும். எத்தனை காலங்கள் தவம் செய்தால் எனக்கு ஸ்ரீதேவியின் தரிசனம் கிடைக்கும்? என்று ஒருவன் கேட்டான். ஒரு வருடம் கடுமையான தவம் செய்தால் ஸ்ரீதேவி தரிசனம் கிட்டும் என்று குரு கூறினார். மூன்று மாதங்கள் தவம் செய்தால் எந்த கடவுளின் தரிசனம் கிடைக்கும்? என்று செல்வன் கேட்டான். ஏனென்றால் அவன் இன்னும் உயிரோடு இருக்கப் போவது நான்கு மாதங்கள்தானே.

குருவுக்கு கோபம் வந்துவிட்டது. ஏனென்றால் அவரே சீடர்களுக்கு நம்பிக்கை அளிப்பதற்காக ஒரு வருடம் என்று கூறினார். பல வருடங்கள் தவம் செய்தும் கூட ஸ்ரீதேவி தரிசனம் கிடைக்காதவர்கள் பல பேர் உள்ளனர். எனவே ஒரு வருடம் என்று கூறினாலாவது அவர்கள் நம்பிக்கையோடு தவம் செய்வார்கள் என்று எண்ணித்தான் கூறினார். ஆனால் இவன் அதைக்கூட செய்ய முடியாத சோம்பேறி யைப்போல் மூன்று மாதங்கள் செய்தால் யார் வருவார்கள் என்று கேட்கிறானே!

மூன்று மாதங்கள் தவம் செய்தால் மூதேவி தரிசனம்தான் கிடைக்கும் என்று ஒருவித எரிச்சலோடு கூறினார். அவனோ அதை நம்பிவிட்டான். ஆனால் மூதேவி என்னும் தெய்வம் நமக்கு கஷ்டங்கள் கொடுப்பது. அதனால் யாரும் அதனை வேண்டி தவம் செய்யமாட்டார்கள். ஆனால் இவனோ தவம் செய்ய முடிவெடுத்து விட்டான். தவம் செய்வதற்கான வழிமுறைகளை குருவிடம் இருந்து தெரிந்து கொண்டான். காட்டுக்கு சென்று மூதேவியை நினைத்து தவம் செய்தான். அவனது அசைக்க முடியாத நம்பிக்கையால் மூன்றாவது மாத இறுதியில் மூதேவி மகிழ்ந்து அவன் கண்முன் தோன்றினாள். மானிடா! உன் தவத்தைக் கண்டு மெச்சினோம்; என்ன வரம் வேண்டும் கேள்! நான் நூறு வயது வரை உயிரோடு வாழ வேண்டும். எனக்கு அந்த வரத்தைக் கொடுத்தருளுங்கள் என்று கேட்டான் செல்வன். நான் யாருக்கும் வரம் கொடுப்பதில்லை. ஆனால் உன் நம்பிக்கையான தவம் உன்னை காப்பாற்றியது. நீ கேட்டவாறே நடக்கட்டும் என்று வரம் வழங்கி சென்றுவிட்டாள். அப்போது உன் நம்பிக்கை உனக்கு விமோசனம் தரும் என்று முனிவர் கூறியது ஞாபகம் வந்தது. தனது குருவிடம் நடந்தவற்றை கூறினான். அவரும் அவனது நம்பிக்கையைப் பாராட்டினார். அவன்கூட சிறைசன்னியாசியாக இருந்து நிறைய தவ வலிமை பெற்று மக்களுக்கு நிறைய வரங்கள் கொடுத்தான். இறுதியில் நூறு வயதில் இறந்து சொர்க்கம் சேர்ந்தான். இந்த கதையின் மூலம் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் நாம் துன்பங்களைக் கண்டு விதியே என்று துவண்டுவிடக் கூடாது. நாம் அந்த விதியையே எதிர்த்துப் போராட வேண்டும்.



# வி...

மழை... களை வி... வழங்கு... ஒரு கால... மாற்றத்... படுப்பை... விழுமிய... கூட மீ... கைகளு... வைத்து... பாட்டு வ... முடியாது... கங்கள் எ... இயற்கை... களைப்...

முக்கிய... கூர்ப்பு...

# குறளும், கிரந்தமும் : நீர்



(சென்றவாரத் தொடர்ச்சி)

வானத்திலிருந்து மழை பெய்யவில்லையென்றால் பூமியில் எதுவும் வளராமல் போய்விடும். மழை பெய்யவில்லையென்றால் இயற்கைச் செல்வங்கள் எல்லாம் வறண்டு போகும். உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு வகைகளும் விளையாமல் போய்விடும் என்ற பொருள் கூறுவதன் மூலம் நீரின் இன்றியமையாமையை விளக்குகிறார்.

மேலும்

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" [குறள்.15]

என்கிறார் வள்ளுவர். மழை பெய்யாமல் பூமியில் வாழ்பவர்களை வறண்டு போகச் செய்து அவர்களின் வாழ்க்கையைக் கெடுப்பது மழையாகும். மழை பொழியாது நின்று மக்களின் வாழ்வைக் கெடுக்கிறது. அத்துடன் அவர்களைத் துன்பங்கள் நீங்கி எல்லா வளங்களும் பெற்று வாழ வழி செய்கின்றது.



**சீக்கியம், கூறும் நீரின் முக்கியத்துவம்:**

சீக்கியம், மழை என்பது இறைவனின் செயல் என்றும் அது மக்களை நல்வழிப்படுத்துவது என்றும் கூறுகிறது. சீக்கியமதம் உருவமற்ற ஒரே துவக்கமாக இறைவனைக் கொண்டுள்ளது. சீக்கியர்கள் விவசாயக் கலாசாரத்தைக் கொண்டவர்கள், நீர் விவசாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. தென்னிந்தியக் கோவில்களைப் போலவே சீக்கியர்களின் குருதுவாராக்களும் குளங்களுடன் காணப்படுகின்றன. சீக்கியர்களின் புனித நூலான குரு கிரந்தத்தில்

"இந்த உலகின் கடவுளே அருள் பாலித்த முதல்வர், அனைத்திடத்திலும் மழையை அனுப்பியவர், தாய்போல் உலகின் உயிர்களை கவனித்துக் கொள்கிறார்" (கு.கி. பாடல்.215) என்று காணப்படுகிறது. உலகப் பொருள்கள் யாவ... இறைவன் படைத்த அனைத்திலும் ... வன் உறைந்துள்ளான். நீரிலும் இ... உள்ளான். இறைவன் கருணை மி... னாகக் காணப்படுகின்றான். இத... பனையில் கடவுளே இந்த உலக... அருளை வழங்கியவர். உலகப் பொ... கள் அனைத்திலும் மழையை அ... வர்.

உலகத்தில் உள்ள அனை... மக்களையும் காப்பதும் வளர்ப்பதும் நீராகும். அதனால் மழையை ... உலகிற்குத் தந்த கடவுள் என்றும் ... போல் உலகின் உயிர்களைக் கவ... கொள்கிறார் என்றும் குரு கிரந்தம் ... கூறியுள்ளமை புலப்படுகிறது. மே...

**"இறைவன் இல்லாமல் என் உயி... எரிந்து கருகுகிறதே" [கு.கி. 14]**

என்றும் பாடலில் இறைவன் ... நீர் இல்லாததால் என் உயிர் ... கருகுகிறது. உணவுப் பொருள்களை ... விப்பதற்குக் காரணமாகவும், உ... உணவாகவும் நீர் பயன்படுகிறது. ... அனைத்துக்கும் நீரே அடிப்படை... உள்ளது. நீர் இறைவனுக்கே ஒ... படுகிறது

"மனமே நீரின் மீது தாமரை கொ... நேசத்தைப் போல் இறைவன் ... அன்பு கொள்

■ எலையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியங்கள்



மறைபொருளாக இருக்கும் விடயங்களை விடுவித்தறிந்து கொள்ள அனுசரணை வழங்குவது விழுமியங்கள். உதாரணமாக ஒரு காலத்தில் சட்டங்களாக இருந்தவை கால மாற்றத்தால் சம்பிரதாயங்களாகப் போற்றப்படுபவை விழுமியங்கள் எனப்படும். எனவே விழுமியங்கள் காலமாற்றங்களின் போதும் கூட மீண்டும் புதுப்பிக்கும் என்ற நம்பிக்கைகளுடன் கைவிடப்படாது, மறைத்து வைத்து மறை பொருளாகப் பாதுகாக்கப்பட்டு வந்தவை. இவை மனிதரிடம் மாற்ற முடியாது. ஊறிப்போயிருந்த பழக்கவழக்கங்கள் எனமட்டுப்படுத்தவும் முடியாதவை. இயற்கையே (இறைவன்) விழுமியங்களைப் பாதுகாக்கும் உந்துதலை மனித சமூகத்திற்கு வழங்கியிருக்கிறது என்பதை இயற்கையின் தோற்ற விழுமியங்களை நிரல்படுத்துவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

பூமியின் மையப்பகுதி இன்னும் நெருப்புக் குழம்பாக எரிந்து கொண்டிருக்கின்றமை, பூமி சூரியனில் இருந்தே தேன்றியதென்பதற்கு, முக்கிய ஆதார விழுமியமாகும். தவிர பூமியும் சூரியனும் மட்டுமே, கோள்களாக இராது, பல கோள்களையும், உபகோள்களையும் விழுமியமாகக் கொண்டிருப்பதினூடாக ஞாயிற்றுத் தொகுதியின், இயக்கம் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றது.

மேலும் பூமியின் மையப்பகுதியில் எரிந்து கொண்டிருக்கும், நெருப்புக்குழம்புக்கு வெளியிலிருந்து வாயுக்களும், எரிபொருள்களும் கிடைக்க வாய்ப்பில்லை ஆதலால், எரிதலுக்கான கனியவளங்கள் இயற்கையான படைப்பாகக் கிடைக்கின்றன என்பதற்கு ஆதார விழுமியமாகும். மேலும் உயிரினங்கள் எரிதலுக்கான (நெருப்பு) கனிமங்களிலிருந்தே தோன்றிப் பரிணாமமடைந்தமைக்கு ஆதார விழுமியமாக இருப்பவை. உயிரியல் எரிபொருள்கள் தவிர உயிரினங்கள் அனைத்துமே விரைவாக எரிதலில் பங்குபற்றும் என்பதால், உயிரினங்கள் பஞ்சபூதங்களால் உருவானவை என்பதற்கு முக்கிய ஆதார விழுமியமுமாகும்.


உயிரின பரிணாமத்தில் குரங்கு முக்கிய விழுமியமாக இருந்தமையே, கூர்ப்புக்கொள்கைக்கு வித்திட்டது. ஆனாலும் இது ஆராய்ச்சிகளின் ஆரம்பம் மட்டுமே. மேலும் ஆழமாக்கிச் செல்ல பல பரிணாம விழுமியங்கள் உண்டு. உதாரணம் தாவரங்கள் மற்றும் தாவரங்களல்லாத பிற உயிரினங்கள் இரண்டிற்கும் இடைப்பட்டவன் உண்ணும் தாவரம் முக்கியமான விழுமியம். தவிர வெளவால், விலங்கிற்கும் பறவைக்கும் இடையேயான தொடர்பை எடுத்துக் காட்டும் விழுமியம். மேலும் கடல் வாழ் உயிரினங்கள், தரைவாழ் உயிரினங்கள் இரண்டுக்கும் இடைப்பட்ட நீர்யானை, கடல்பன்றி, கடல்சிங்கம், கடல்பறவைகள் இவைகள் பஞ்ச பூதங்களில் ஒன்றான நீரின் பங்கை உயிரின தோற்றத்தில் எடுத்துக்காட்டும் விழுமியங்கள். மேலே சொல்லப்பட்டவை போல் விழுமியங்கள் பல்வேறு வகையில் தனித்தனியாக இருப்பது போல் ஒரே பார்வையில் பரிணாம விழுமியங்கள் மனிதக் குழந்தை கருவிலிருந்து வளரும் ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டமும், பிரதிபலிக்கிறது. உதாரணம் கருக்கட்டி சிறிது காலத்துக்குள் கருவை சமபங்குகளாக வெட்டி வளர வைத்தால் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் உருவாகும். காரணம், பரிணாமத்தின் முதல் தோற்றமான தாவரத்தின் இனப்பெருக்கமான பதிமுறை இனப்பெருக்கத்தை பிரதிபலிப்பதுடன் மண்புழு கூட இவ்வாறு பிரிவடைந்து வாழ்வதும் அடங்கும். தவிர குளோனிங் முறை கூட வளர்ச்சியடைந்த மரபணுக்கலத்தை அடிப்படை நிலைக்கு அதாவது கரு நிலைக்குக் கொண்டு வருதலேயாகும். இவ்வாறு கருவிலிருந்து வளரும் குழந்தை, தனது வளர்ச்சிக்கட்டங்களில், வெவ்வேறு உயிரினங்களை பிரதிபலிப்பதுடன் பிறந்த குழந்தை மண்ணில் உருண்டு, உடும்புபிடித்து, தரையுடன் இழுத்துஊர்ந்து தவண்டு, எழுந்து நடந்து, கதிரை மேசை யன்னல் ஒவ்வொன்றிலும் ஏறிக்குழப்படி செய்து, முன்னோர்களான குரங்கைப் பிரதிபலிக்கிறது.


எனவே இயற்கை விழுமியங்களைப் பாதுகாப்பதும் பிரதிபலிப்பதும், நாம் விழுமியங்களை உணர்ந்து அறிந்த அதன் பரிணாம வரலாறுகளை அறிந்து கொள்ள உந்துதலாக இருப்பதுடன், இயற்கையின் படைப்பு விதிகளைக் கண்டுணர்ந்து எமது வாழ்வு வசதிகளை பெருக்கி அதனூடாக புதிய பரிணாமத்தை அடையவே வேண்டும் என்பதற்கும் ஆகும். (தொடரும்)



■ இராமஜெயபாலன்

"இயற்கை விழுமியங் களைப் பாதுகாப்பதும் பிரதிபலிப்பதும், நாம் விழுமியங்களை உணர்ந்து அறிந்த அதன் பரிணாம வரலாறுகளை அறிந்து கொள்ள உந்துதலாக அமைகின்றது"





## என் கண்ணாடித் தோப்பு

நீளமான ஆழக்கடலும்
முடிவில்லா வானமும்
பகிர்ந்து கொள்ளும் கண்ணாடி வெளியில்
இருள் வந்து ஒளி வரும்
நிலவின் ஆதிக்கத்தில் எனது வானம்
வெளிப்பட்டுக்கொண்டது.

அதிகாலை மாலைநேரத்துக்குக்
காத்திருக்காது தொடர்ந்து மறைகிறதுபோல்
அல்லாமல் எனது கண்கள்
விழித்துக் கொண்டே இருக்கிறது.
ஒரு நாள் பிந்தினால்
கூடுதலாகக் கடிகார முள்ளின் சத்தமும்
தொடர்பில் இருந்தால்
மறந்து போயிருக்கும் நேரமும்
இருக்கிற சூழலில்
வழி நெடுக தடங்கள் மாறாமல்
நகருகின்ற வீதியில்
நிறையப் பேர்களைப் பார்ப்பதால்
நினைவில்லை
எந்தத் தெருவில் கூடுதலாக
நடந்தேன் என்று.

கருமேகம் படர்ந்து வெள்ளை மழை
பொழிகிறது.
தமிழ் மண்ணில் கரிய ஏட்டில்
வெள்ளை எழுத்துக்களாக பதிவதுபோல்
குளங்களாகவும் ஆறாகவும்
மாற்றியமைக்கின்ற வடிவங்களில்
இருந்தும் மழைக் கண்ணாடி
தன்னை மாற்றிக் கொள்ள முடியாதது போல்
என்னையும் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

கண்களுக்குள் வியர்வை
கண்ணீர் ஆனதும்
தெளிவுபட பறந்துபட்ட எண்ணங்களில்
சிறகுகள் உதிராமல் பறக்கிறது
நிலைத்து நிற்கின்ற இந்தக் கண்ணாடியில்
நிழலாகப் பலரையும் சேர்த்துக் கொள்கிறோம்

முகடு பார்த்து வானம்
வெளிப்பட ஆசைப்பட்டதாக
இல்லாததால் தானோ
வீட்டுக்குள் வர விரும்பாத சூரியன்
தெருவில் வருபவர்களை எரிக்கக் கற்றுக்
கொண்டது.
என்னைப் போர்வை விலக்கியதாக
எழுப்பிவிட்டிருக்கின்ற குளிரைப் போல்
பாதி கலைந்ததான நித்திரை
எனது கண் பார்வையைப் போலும்
மெல்ல மெல்ல பரவிப் படர்ந்து
விறைத்துப் போயிருக்கும்
எனது கண்ணாடியில்
எனது முகம் சரியாகத் தெரியவில்லை.

வெளிச்சப்பக்கமாக நிழலாடிக் கொண்டு
ஏதோ ஒரு தவறு இருப்பதாக
மீண்டும் மீண்டும் சரி செய்ய
மறுபடியும் மறுபடியும் எல்லா முகங்களையும்
திரும்பிப் பார்க்க வைக்கிறது.
நெருடல்களில் அகப்பட்டுக் கொண்டு
மீட்க முடியாமல் இருக்கின்ற பகுதியில்
விலங்கு கைவந்து சேரும்
சிறைக்கூடமாக பரந்த வெளியில்
கம்பிக் கதவினை மட்டும் உருவாக்கி
நீ உள்ளே நான் வெளியே என்று
இருவரும் அடையாளப்படும்
வேடிக்கையான வாழ்வின் அங்கமாகிறது
இந்தக் கண்ணாடி வாழ்க்கை.
ஒவ்வொரு நாளும்
பூமரம் பூக்களை உதிர்த்தாலும்
அந்த ஒருநாள் தன் மரண முடிவிலும்
சந்தோஷப்படுவதுபோன்று
எனது கண்ணாடி வாழ்க்கை இருந்தாலும்
முகம் காட்டி நிற்கிறது.

வானத்தில் பறந்து செல்லும் பறவைகூட
தனி வழிப் பாதை அமைத்துப் பறக்கின்றபோது
என்னால் குறிப்பிட்ட தூரம் வரை
பார்க்க முடிகின்ற போதுதான்
கண்ணாடி வானமானது.
காத்துக் கிடக்கும் நேரங்களில்
பழக்கப்பட்டுச் சென்ற இடங்களில்
மீண்டும் மீண்டும் வந்துபோகின்ற போது
அந்த இடத்தில் பல மாற்றங்கள் ஏற்படினும்
எந்த மாற்றமும் இல்லாமல் இருப்பதுபோல்
எனது கண்ணாடி வாழ்வும் ஒருபோதும் மாற்றம்
காணாமல் என்னை வாழ வைக்கிறது

**- பிறைவாணன்**

...ள்கள் யாவிலும்
...னைத்திலும் இறை
...நீரிலும் இறைவன்
...ருணை மிகுந்தவ
...றான். இதனடிப்
...ந்த உலகத்திற்கு
... உலகப் பொருள்
...ழையை அனுப்பிய
...ன அனைத்து
...வளப்படுத்தும் மழை
...மழையை இந்த
...ள் என்றும் தாய்
...ளைக் கவனித்துக்
...ரு கிறந்தப்பா ல்
...கிறது. மேலும்
...ல் என் உயிர்
..." [கு.கி.14]
இறைவன் எனும்
...ன் உயிர் எரிந்து
...ருள்களை விளை
...வும், உண்பதற்கு
...படுகிறது. இவை
... அடிப்படை யாக
...னுக்கே ஒப்பப்
...மரை கொள்ளும்
... இறைவன் மேல்

நீரலைகளால் தாக்குண்டாலும் அது
அன்பால் காதலால் மலர்கிறது
இறைவன் உயிர்களை நீரில்தான் படைத்
தளித்தான்
நீரின்றி அவற்றின் மரணம் நிகழ்கிறது."
(கு.கி)

என்னும் பாடலில் உலகப் பொருள்கள் அனைத்துக்கும் மழையே ஆதாரம். இறைவன் நீரில் தான் உயிர்களைப் படைத்தான். இல்லாவிட்டால் அவைகள் மறைந்து போகின்றன எனக் குறிப்பிடப்படுகிறது. மேலும்

"நீர் நிறைந்த குளமும் நீயே
குளத்தில் நீந்தும் அன்னமும் நீயே
நீர்த் தாமரை நீயே அல்லி மலர் நீயே
அன்னத்தையும் தாமரையையும் அல்லி
மலரையும்
தாங்கிக் கொள்வதில் நீ மகிழ்ச்சி
அடைகிறாய்" (கு.கி.23)

என்ற குரு நானக் பாடுகின்றார். இங்கு இறைவனின் இருப்பிடம் நீர் என்கிறார். மேலும், உலகத்து உயிர்கள் அனைத்தும் நீரினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதால் நீரில் உள்ள அனைத்திலும் இறைவன் இருக்கிறான் என்றும் கூறப்படுகின்றது. இதனால் நீரில்லாமல் இறைவன் இல்லை என்பதை

"நீர் எவ்வளவு அவசியமோ அதுபோல
உடலும் மனமும் இறைவனில்

போயின்பம் அடைகின்றன,
ஒரு கணம் கூட நீரின்றி
உயிர் வாழ்வதில்லை
உயிரின் வாட்டத்தை இறைவன்
அறிவான்" (கு.கி. 60)


என்கிறார் நானக். நீரில்லாமல் உடல் இல்லை. மனமும் இருக்காது. ஒரு பொழுதேனும் உயிர் வாழ்தல் முடியாது. நீரே உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது என்று குரு நானக் உணர்த்துகிறார்.

இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் இறைவன் நிறைந்திருக்கிறான். இயற்கைப் பொருள்களில் முதன்மையானதாக நீர் காணப்படுகின்றது. இக் கருத்தினை

"கடவுள் அனைத்திலும் பரவியுள்ளான்
கடலிலும் நிலத்திலும் அவரது
உண்மை மறைவாய் உள்ளது (கு.கி)

எனக் கூறப்படுகிறது. உலகமானது கடலால் சூழப்பட்டிருக்கிறது. இருப்பினும் மழை பெய்யவில்லை எனில் அவற்றின் தன்மை குறைந்து விடும். அவற்றில் வாழும் உயிரினங்கள் இறந்து விடுகின்றன.

அந்நீரில் விவசாயம் செய்து வாழ்தல் இயலாது. மழை நீரினால் மக்கள் வாழ்வின்
[illegible]
[illegible]
வழங்குகிறது. (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனம் எங்கே இருக்கிறது?

**மாற்றுத் திறனாளிகளின் அமைப்பான Deaf Link இன் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

மெதடிஸ்த திருச்சபையின் மாற்றுத் திறனாளிகளின் அமைப்பான Deaf Link இன்று சனிக்கிழமை தனது பத்தாவது நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.

வெள்ளவத்தை சப்பல் லேன் மெதடிஸ்த மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு டபிள்யூ.ஜெபநேசன், சமூகசேவை அமைச்சுச் செயலாளர் திருமதி இமல்டா சுகுமார், புனர்வாழ்வு இயக்குநர் ஷெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

Deaf Link எனப்படும் மெதடிஸ்த திருச்சபையின் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு கடந்த பத்து வருடங்களாக மாற்றுத் திறனாளிகள் மத்தியில் இன, மத, மொழி வேறுபாடின்றி பணியாற்றிவருகிறது. சிறுவர் கல்வி, வளர்ந்தோர் தொழிற்பயிற்சி, சுயதொழில் வேலைவாய்ப்பு, கலை, கலாசாரம், விழிப்புணர்வு, ஒன்றுகூடல், தலைமைத்துவப் பயிற்சி, இயற்கை விவசாயம், கைவினைப் பொருட்கள் உற்பத்தி போன்ற பணிகளை இந்த அமைப்பு முன்னெடுத்து நடத்துகிறது. சைகை மொழி ஆசிரியர் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

இயற்கை விவசாயம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் போட்டியில் யாழ்.நகரில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அமைப்பின் பிரதம இணைப்பாளர் அருட்திரு எஸ்.எஸ்.ஞானராஜா தெரிவித்ததாவது:-

டிசெம்பர் 3ஆம் திகதி சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை நினைவுகூரும் அதேசமயம் Deaf Link இன் பத்தாவது வருட பூர்த்தி விழாவை இன்று கொண்டாடுகிறோம்

### யார் இவர்கள்

சமூகத்தில் வாழும் மக்கள் அனைவருமே ஏதோ குறைகளுடன்தான் வாழ்கின்றனர். சில குறைகளை நிறைவுசெய்ய முடியும். சில குறைகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். குறையோ, நிறையோ ஒவ்வொரு மானிடனுக்கும் இந்த உலகில் வாழ்வதற்கு முழு உரிமையுண்டு. அதற்கான சட்டங்களையும், திட்டங்களையும் அரசு வகுத்துள்ளது. எது இருந்தும் அங்கத்திலும், மன வளர்ச்சியிலும், முதுமையிலும் குறைபாடு உள்ளோரை பல்வேறு பெயர்களைச் சூட்டி அங்கவீனர்கள், ஊனமுற்றோர், இயலாதவர்கள் என்று ஓரம் கட்டுகிறோம்; ஒதுக்கிவிடுகிறோம்.

### சமூகத்தில் இவர்களின் பங்களிப்பு

தனிப்பட்ட குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு பிள்ளை குறையோடு பிறந்துவிட்டால் இது ஊனமுற்ற குழந்தை என மற்ற பிள்ளைகளின் வாழ்வுக்கு வழங்கும் எந்த வளத்தையும் கொடுக்காது தவறு பண்ணுகிறோம். அநேகமான பெற்றோர் இப்பிள்ளைகள் குறித்து கவலைப்படுவதோடு அவர்களை வெளி இடங்களுக்கு அழைத்துச் செல்வதையும் தவிர்த்து வருகின்றனர். குடும்ப நிகழ்வுகளில் இவர்களுக்கு இடமில்லை. சமூகத்தின் பார்வையில் சமமாக மதிக்கப்படுவதில்லை. இதனால் இவர்களின் வளர்ச்சியில் பெரும் தடைகள் ஏற்படுகின்றன. நிரந்தரமான குறைவோடு வாழ்க்கை முழுவதும் ஒடுக்கப்படுவதைக் காணமுடிகிறது.

### ஊனம் எங்கே?

மதங்களும், தத்துவங்களும், மூட நம்பிக்கைகளும் காலா காலமாக இவர்களைப் பார்க்கும் பார்வையில் மாற்றம் வேண்டும். ஒரு குறையோடு உள்ள ஒரு குழந்தையின் வளர்ச்சியில் முழுமையான மனித பண்புகள் மறைக்கப்படுகின்றன. ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக செவிப்புலன் இழந்த ஒரு குழந்தைக்கு செவிப்புலனைத் தவிர, மற்ற எல்லா அங்கங்களும், அறிவுத் திறனும் நிறைவாக உள்ளன. ஆனாலும், சமூகம் இதனை ஏற்றுக்கொள்வது இல்லை. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவர்களை சைகை மொழி பேசும் சிறப்பான கலாசாரம் கொண்ட ஒரு சமூகமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, சமூகத்திலுள்ள பழைய சிந்தனைகள் மாறவேண்டும்.

### மாற்றுத் திறனாளிகள்

பல்வேறு பெயர்கள் சூட்டப்பெற்று சமூகத்தில் ஒதுங்கி இருந்த மக்கள் இன்று திறனாளிகளாக அதிலும் மாற்றுத் திறனாளிகளாக அழைக்கப்படுகின்றனர். இவர்களின் திறன்களை அடையாளம் காணவேண்டும்; அங்கீகரிக்கவேண்டும்; ஆற்றல்களை வளர்படுத்தவேண்டும். பரிதாபப்படுவதை விட்டு இணைந்து பணி செய்ய முன்வரவேண்டும். சம உரிமையோடு சமத்துவமாக மனித மாண்போடு வாழ வழிகாட்டவேண்டும்.

# யாழ்.சைவ பரிபாலன சபையின் ஊடாக சமயத்துக்கும் மொழிக்கும் தொண்டாற்றியவர்



அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவசமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஏற்பட்ட இடர்களை நீக்க அரும்பணியாற்றிய நல்லைநகர் ஆறுமுகநாவலரின் வழித்தடத்தில் செல்ல விரும்பிய சைவப் பெரியார்களால் குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பெற்ற தாபனமே யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாகும்.

1889 ஆம் ஆண்டு தொட்டு கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக பல பெரியார்களின் தலைமையில் அந்தச் சபை அரும்பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளது. இந்த வரிசையில் சபையின் 24 ஆவது தலைவராக 2007 ஆம் ஆண்டில் பதவி ஏற்றவரே சிவநெறிப் புரவலர் அமரர் தம்பியப்பா சண்முகலிங்கம் ஆவார்.

இயல்பாகவே சைவாசாரமும், சமய அறிவும் வாய்க்கப் பெற்ற சண்முகலிங்கம், தாம் யாழ்.இந்துக் கல்லூரி மாணவனாக இருந்த வேளையிலேயே சைவ பரிபாலன சபையில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் அக்கறை காட்டிச் செயற்பட்ட ஒருவராவார். பிற்காலத்தில் தொழில் அதிபராக யாழ்ப்பாணம் நீராவியடியில் வாழ்ந்த வேளை, சமய சமூகத் தொண்டாற்றும் உள்ளார்ந்த பெருவிருப்பினால் சைவ பரிபாலன சபையின் உறுப்பினராக இணைந்து கொண்டார். அவரின் அர்ப்பணிப்பான சேவையைக் கருத்தில் கொண்ட சபையினர் அவரை 1973 ஆம் ஆண்டிலே சபையின் செயலாளராகத் தெரிவு செய்தனர். அந்தப் பதவியைத் திறம்பட ஆற்றிய அவர் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1997 வரை சபையின் பொருளாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சைவ பரிபாலன சபையில் பொறுப்பான பதவிகளை வகித்த இந்தப் பெரியார், சபையின் வரலாறு, மரபுகள், சபைக்குரிய தர்மசாதனச் சொத்துக்கள், அவற்றின் தற்போதைய நிலைவரங்கள் என்பவை குறித்த பூரணமான தகவல்களைத் தெரிந்து வைத்திருந்தார்.

## நீத்தார் நயப்புரை

சைவ பரிபாலன சபைக்குரிய தர்மசாதன சொத்துக்கள் இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவில் சிதம்பரத்தில் மாலை கட்டித் தெருவில் புண்ணியநாச்சியம்மை மடம் என்ற பெயரில் இருந்ததைத் தெரிந்து கொண்டு அதனை அடையாளங்கண்டு மீட்டு சபை நிர்வாகத்துக்குள் கொண்டு வரும் கருமங்களை ஆற்றினார். அந்த மடத்தை நவீன வசதிகளுடன் கூடிய இருமாடிக் கட்டடம் கொண்டதாக அமைத்து சைவப்பெருமக்கள் சிதம்பர நடராசர் தரிசனத்துக்குச் செல்லும் வேளைகளில் தங்கிச் செல்லக்கூடிய முறையில் சகல ஏற்பாடுகளையும் தாம் சபையின் தலைவராக இருந்த காலத்தில் நிறைவேற்றி வைத்துள்ளார். இந்தப் பணிக்குப் புலம் பெயர்வாழ் சைவப் பெருமக்கள் மற்றும் இலங்கை வாழ் சைவப் பெருமக்களது நிதி உதவிகளை இவரால் பெறக்கூடியதாக இருந்தமை இவரின் ஆளுமைக்கும் நம்பகத் தன்மைக்கும் உதாரணமாகும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள சபைக்குரிய தர்மசாதனச் சொத்துக்களின் பயன்பாட்டை சபைக்குச் சேரத்தக்கதான நடவடிக்கைகள் பலவற்றை இவர் சட்டரீதியாக பெற்றுக் கொடுத்துள்ளார். இதனால் சபை பயன் பெறுவது மாத்திரமன்றி அந்தத்தர்மசாதனச் சொத்துக்களைத் தற்போது ஆண்டு அனுபவிக்கின்ற மக்களும் திருப்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சைவசித்தாந்த அறிவு நாட்டங்கொண்ட இந்தப் பெரியார், சபையின் வருடாந்த மாநாடுகளுக்கு இந்திய சைவசித்தாந்தப் பேராசிரியர்களை கடந்த இருவருடங்களாக சிறப்பு விருந்தினர்களாக அழைத்து சிறப்பாக நடத்தியமை பலரின் பாராட்டுக்கு உள்ளாகியது. யாழ்.நீராவியடியில் அமைந்த பழமையான கட்டடத்தில் பல்லாண்டுகளாக இயங்கி வரும் சைவ பரிபாலன சபைக்கென சகல வசதிகளும் கொண்ட இருமாடிக் கட்டடம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை முன்வைத்து ஆரம்பகட்ட வேலைகளிலும் அன்னார் மும்முரமாக ஈடுபட்டு வந்த வேளையில் எதிர்பாராத விதமாக கடந்த ஒக்டோபர் 28 ஆம் திகதியன்று ஏற்பட்ட அன்னாரது திடீர் மறைவு சைவ பரிபாலன சபைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னார் ஆரம்பித்த பணியை சைவப் பெருமக்களும் சபை உறுப்பினர்களும் தொடர்ந்து முன்னெடுத்து பூர்த்தியடையச் செய்வதே அன்னாருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

**சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை**
**தலைவர்**
**யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை**

# சமாதானநீதிவானாக நியமனம்



ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தியாகராசஐயர் கெங்காதரக் குருக்கள் மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஈவினை கற்பகவிநாயகர் ஆலயம், புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவில், கவலைவோடை வசந்த நாகபூசணி அம்மன் ஆகியவற்றின் பிரதமகுருக்களும் ஹோமியோபதி வைத்திய கலாநிதியும் பிரபல சோதிட கலாநிதியுமாவார்.

# இனப் பரம்பலில் மாற்றத்தை ...

**(வாரவசந்தம் முதலாம் பக்கத் தொடர்ச்சி..)**

இனம் மதம்கடந்து உருவாகும் காதல், இன நல்லிணக்கம் என்ற பெயரில் சேர்த்து வைக்கப்படும் குடும்பங்கள் என இன்னும் ஒண்றிரண்டு ஆண்டுகளில் வன்னியில் ஒரு தனித்துவக் குடிகள் உருவெடுக்கப்போகின்றன. தமிழர்களா? அல்லது சிங்களவர்களா? என்றால் இலங்கையின் சட்டங்களின் அடிப்படையில் அவர்கள் துளியளவும் சந்தேகமற்று சிங்களவர்கள் தான். ஏனெனில் ஒருவனின் இனம் தனது தந்தையின் இனத்தினாலேயே வரையறுக்கப்படுகின்றது. வருடாந்த குடிசன மதிப்பீடுகள் இந்த அடிப்படையிலேயே கணக்கெடுக்கப்படுகின்றன.

அத்துடன் இராணுவத்துக்கு அக்காளை அல்லது தங்கையை அனுப்பியவளுக்கு அத்தானின் வழி அவன் சிங்கள நண்பன் அறிமுகவாவான். அவளும் பின்னாளில் அவனுடன் கூடி வன்னிக்குடிமகனாய் ஒரு சிங்களவனைப் பெற்றெடுப்பாள். எங்களிடம் காணப்படும் சீதனக் கலாசாரம் ஆண்களின் எண்ணிக்கைக் குறைவு, இருப்போரும் அதிகமாக எதிர்பார்ப்பது என்பன தவிர்க்கப்பட வேண்டிய காரணிகள் அவர்களுக்கு சாதகமாக, ஏற்கனவே உள்ள உறவுகளின் வழி [illegible] தமிழ் திருமணங்கள் [illegible] கலாம். இந்த திருமணங்களின் வழி பிறக்கும் அத்தனை குழந்தைகளும் சிங்களவர்களே. என்ன அருமையான திட்டம். ஆண்டுகள் நகர நகர சிங்களவர்கள் வன்னியில் பிறந்து கொண்டேயிருப்பார்கள் பூர்வீகக் குடிகளாக.

சமாந்தரமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்துக்கும் தமிழ் மாணவர்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமாக சிங்கள மாணவர்கள் கடந்த வருடம் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதுவும் இனப்பரம்பலுக்கு ஆபத்தான விடயமே. ஆண் மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ் மாணவர்கள் வெகுகுறை [illegible]. இந்த நிலையில் [illegible] காதல்கள் இனம், மதம் மொழி கடந்து சுவாசிக்கப்படுமானால் சிங்கள ஆண் மாணவர்களை எமது தமிழ் மாணவிகள் கரம் பற்றி சிங்கக் குட்டிகளை பெற்றுக் கொடுக்கலாம். இனம் கடந்த காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதல்ல எமது நோக்கம். மாறாக அந்தக் காதல் மற்றும் திருமணங்கள் தமிழ் இனப்பரம்பலில் ஏற்படுத்தவுள்ள தாக்கத்தை விஞ்ஞான பூர்வமாக விளங்க வைப்பதே எமது நோக்கு.

எனவே தமிழ் மக்கள் மீது இன அழிப்பை மையப்படுத்தி திணிக்கப்படும் இவ்வாறான இனிப்பு விஷங்களை நாம் விலக்காவிட்டால், பின்னாளில்விஸ்வரூபமாகி விடும்.காதலுக்கு கண் இல்லை என்பது காலம் கடந்து பல செய்திகளை எமக்காகத் தரக் காத்திருக்கலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு படிப்பினைகள்!

ஒரு நண்பர்.
படித்துக் கொண்டிருந்தார்.
"என்ன படிக்கிறீர்கள்? என்று கேட்டேன்.
"பகவத் கீதை படிக்கின்றேன்" என்றார்.
"அதைப் பற்றி சிறிது சொல்லுங்கள் என்றேன்.
அவர் சொன்னார்.

"பகவத் கீதையிலே இரண்டு முக்கியமான படிப்பினைகள் உண்டு.. அதன்படி நடந்தால் எங்கள் வாழ்க்கை இன்பமாக அமையும்! வெற்றிகரமாக அமையும்! என்றார்.

அவர் விவரமாகக் கூறினார்.

"முதல் படிப்பினை.. கீதையின் இரண்டாவது அத்தியாயத்திலே 48 ஆவது சுலோகத்திலே வரும்...

"சமத்வம் யோக உச்யதே"

அதாவது ஒரே சீரான நிலையிலே இருப்பது தான் யோகம் என்பது.

எமது உடம்பைப் பொறுத்த வரைக்கும் இந்த சமத்துவம் என்பது இயற்கையாகவே அமைந்துள்ளது.

நாங்கள் கடுமையான வெயிலிலே இருந்தாலும் சரி அல்லது கடுமையான குளிரிலே இருந்தாலும் சரி..

உடம்புக்குள்ளே இருக்கிற வெப்பம் நிலை மாறுவதில்லை. அது ஒரே மாதிரித்தான் இருக்கும்.

ஊட்டியிலே இருந்தபோது 26 டிகிரி.. இராமநாதபுரத்திலே இருந்த போது 96 டிகிரி என்று யாரும் சொல்வது இல்லை.

அது எப்பொழுதும் ஒரே அளவுதான். அப்படி இல்லை என்றால் உடம்பிலே ஏதோ கோளாறு என்று தான் அர்த்தம்.

எனவே.. எமது உடம்புக்குள்ளே இருக்கிற ஏதோ ஒன்று வெப்ப நிலையை சமத்துவமாக வைத்துள்ளது.

ஆனால்.. மனதைப் பொறுத்த வரைக்கும் இந்த சமத்துவம் எமக்கு இருப்பது இல்லை.

இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கிறோம்.
துன்பம் வந்தால் துவண்டு போகிறோம்.
இது போல இருக்கக்கூடாது.

இரண்டு நிலையிலேயும் நாங்கள் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். அது தான் யோகம் என்கிறது கீதை.

இரண்டாவது படிப்பினை என்னவென்றால்...

அதே அத்தியாயத்தில் 50 ஆவது சுலோகத்திலே வரும்.

"யோக: கர்மஸு கௌசலம்"

அதாவது செய்வதைத் திருந்தச் செய்தால் அது யோகம்!

நாங்கள் பல சந்தர்ப்பங்களிலே செய்வதைத் திருந்தச் செய்வது இல்லை.

அரைகுறையாகத்தான் செய்கின்றோம்!

குறைந்தளவு ஊதியம் கிடைத்தால் அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலை ! அதிகமாக ஊதியம் கிடைத்தால் அதற்குத் தகுந்த மாதிரி ஒரு வேலை!

பல நேரங்களில் உழைப்புக்குத் தகுந்த ஊதியமும் கிடைப்பது இல்லை!

நிர்வாக ரீதியாக இதை சரி செய்யலாம்.. அல்லது போராட்டங்கள் மூலமாகக் கூட அதை சரி செய்யலாம். இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆனாலும் அதற்காக செய்கிற காரியத்தை அரைகுறையாகச் செய்யக்கூடாது.

கிடைக்கிற பலனைப் பற்றிக் கவலைப்படாமல் எடுத்த காரியத்தைச் சிறப்பாக செய்து முடிக்க வேண்டும்!

அப்படிச் செய்வதற்கு பழகிக் கொள்ள வேண்டும். அதுதான் யோகம்.

ஆகவே இரண்டும் கீதையின் முக்கியமான இரண்டு படிப்பினைகள்.. என்று சொல்லி முடித்தார் அந்த நண்பர்.

இதிலிருந்து நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்..

இன்பம் வந்தால் அதற்காகத் துள்ளிக் குதிக்காதே!
துன்பம் வந்தால் அதற்காகத் துவண்டு போகாதே..!
எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கப் பழகிக் கொள்!

அதே மாதிரி.. எந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும் செய்வதைச் சிறப்பாகச் செய்யப் பழகிக் கொள்.

இவ்வாறு எங்களை நாங்களே தயார் செய்து கொண்டோம் என்றால் எமது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

இவ்வாறெல்லாம் நாங்கள் எங்களை தயார் செய்து கொள்ளாததனாலேதான் நாங்கள் பல நேரங்களில் வாழ்க்கையிலே சிரமப்படுகிறோம்.

எங்கள் ஊரிலே...

சமையல் செய்தால்கூட அதைச் சிறப்பாகச் செய்கிறவர்கள் இருக்கிறார்கள்.

பலனை எதிர்பார்ப்பது இல்லை.
சாப்பிடுபவர்களும் அதை எதிர்பார்ப்பது இல்லை.

ஒரு கணவன் மிகவும் தாமதமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மனைவி மிகவும் வருத்தப்பட்டு சொன்னாள்:

" என்னை மன்னித்து விடுங்கள்! உங்களுக்காக ஆசையாக ஒரு புது சமையல் ஒன்று செய்துவைத்தேன். அதை எங்கள் நாய் சாப்பிட்டுப் போய்விட்டது! என்றார்.

உடனே அந்தக் கணவன்:

"அதுக்காக கவலைப்படாதே! நாங்கள் வேறு நாய் வாங்கலாம்!" என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## வீதியில் ஏற்படும் தூசிப்படலங்களால் அவதிப்படும் மக்கள்

ஏ-9 வீதியில் புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி வரையான வீதியில் கடந்த சில நாள்களாக வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இந்த வீதியால் பயணம் செய்பவர்கள் இந்த வீதியில் வியாபார நிலையங்களை வைத்திருப்பவர்கள் எனப் பல தரப்பினரும் வீதியில் ஏற்படும் தூசி துணிக்கையால் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தூசிப்படலத்தை இல்லாமல் செய்யும் வகையில் குறித்த வீதிப் புனரமைப்பு ஒப்பந்தகாரர்கள் தண்ணீர் பவுசர் மூலம் கொண்டு வந்து வீதிக்கு நீரினைத் தெளித்து வருகின்றனர்.

எனினும் சில தினங்கள் பவுசர் நீர் தெளிக்காததால் தூசிப்படலம் எழும்புகின்றது. வீதி புனரமைப்புப் பணியாளர்களுக்கு மாதத்தில் ஐந்து நாள்கள் விடுமுறை வழங்கப்படுவதால் அந்த நாள்களில் வீதிக்கு தண்ணீர் தெளிப்பதில்லை. இதனால் வீதியில் தூசிகள் எழுகின்றன.

இது பற்றி சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் விசனமடைந்துள்ளனர்.

எனவே வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் ஊழியர்கள் விடுமுறையில் செல்லும் நாள்களில் மாற்று ஒழுங்கினை ஏற்படுத்தி வீதியில் தூசி எழும்பாத வண்ணம் தண்ணீர் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு வீதியில் ஏற்படும் தூசிப்படலத்தை இல்லாமல் செய்து போக்குவரத்துக்கு ஆவன செய்யுமாறு பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இது சம்பந்தமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த வீதியூடாகப் போக்குவரத்தை மேற் கொள்ளும் மக்களின் நன்மைகருதி விரைந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**புத்தூர் சந்தி பிரதேச மக்கள்**

## கலாமன்ற மண்டபம் மீண்டும் இயங்குமா?

வரணி இடைக்குறிச்சி சேவலப்பிட்டி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்னால் அமைந்துள்ள 'கலாமன்றம்' எனும் பெயர் தாங்கிய மண்டபம் தற்சமயம் எதுவித சலனமுமின்றி, கவனிப்பார் யாருமின்றி காணப்படுகிறது.

இந்த மன்றத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வருடாவருடம் இரு தினங்கள் கலை நிகழ்வுகள் விடிய விடிய இடம்பெற்றமையும் மக்கள் மனங்களில் கலா ரசனையை அள்ளித் தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்கு பிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் கூட்டம் அலைமோதும். இக்காலகட்ட இளைஞர்களுக்கு இவை தெரியவாய்ப்பில்லை.

இந்த மன்றத்தை அமைப்பதற்கும், கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் முன்னின்று உழைத்த பெருமை இந்தப் பிரதேச கிராம முன்னாள் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமாகிய அமரர் அ.நடராசாவையே சாரும்.

இந்த மண்டபத்தில் அந்தக் காலகட்டத்தில் ஈழ நாட்டில் புகழ் பெற்ற நடன, நாடகக் கலைஞர்கள் பலரின் பங்களிப்பில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரபல நாடக நடிகர் வரணியூரான் அவர்களின் நிகழ்ச்சிகள், வில்லிசை மன்னர், கலா விநோதன் கணபதிப்பிள்ளை மற்றும் "வெளிக்கிடடி விசுவமடுவுக்கு" நாடக நடிகர்களின் நிகழ்ச்சி போன்ற பிரபல கலைஞர்களின் நிகழ்வுகள் பல இந்த மேடையில் மேடையேற்றப்பட்டன.

இடைக்காலத்தில் இடம்பெற்ற போரினால் இங்கு நிகழ்வுகளை நடத்தக் காலச்சக்கரம் இடந்தரவில்லை. அமரர் நடராசா விட்டுச் சென்ற பணியை மீண்டும் பிரதேச கலா விற்பன்னர்கள், இளைஞர்கள், பிரதேச பிரமுகர்கள் ஆகியோர் முன்னெடுத்து செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**கலா ரசிகர்கள்**
**வரணிப்பிரதேசம்**

## ஒலிபரப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மனிதனை நேர்த்தியாக வாழ வைப்பது சமயங்களேயாகும். உலகில் அருளாட்சி புரிகின்ற அத்தனை மதங்களும் தத்தமது விழுமியங்களைப் பேணுவதற்காகவும், வளர்ப்பதற்காகவும் தனித்தனியே தனித்துவமான ஒலிபரப்புச் சேவையை நடத்தி வருவதை யாமறிவோம்.

அவ்வாறிருக்கையில் இலங்கையில், யாழ்ப்பாணம் சைவ சமயத்திற்கே சிகரமாக இருக்கும் போது, சிவமயமான ஓர் ஒலிபரப்புச் சேவையை நடத்துவதற்கு, அவை சார்ந்த மன்றங்கள், அமைப்புக்கள், ஆர்வலர்கள் முயற்சி எடுப்பார்களா?

**கே.எஸ்.சிவஞானராஜா**
**கொக்குவில்.**

## மாணவர் தாக்கப்பட்டது நியாயமாகுமா?

யாழ்.பல்கலைக்கழக சூழலில் படையினரும் பொலிஸாரும் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களை கலைத்து கலைத்துத் தாக்கியது நியாயமாகுமா? இந்தத் தாக்குதலால் பல்கலைக்கழக மாணவிகள் உட்பட பலர் காயமடைந்தனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் நடைபெற்ற மாவீரர் நினைவு நிகழ்வுகளைக் குழப்புவதற்கு படையினர் எடுத்த முயற்சிகளுக்கு எதிராக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பதாகைகளை ஏந்திய வண்ணம் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குற்றமாகுமா?

ஜனநாயக நாட்டில் அமைதியான முறையில் மற்றவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தாத வகையில் போராட்டங்களை மேற்கொள்ள முடியும். அதனைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. எனவே மாணவர் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கபிலன்,**
**நெல்லியடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையின் கொடை வேம்பு



வேப்ப மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. எண்ணற்ற நோய் எதிர்ப்பு சக்தி இதில் உள்ளதால் இயற்கை மருத்துவர் என்றே அழைக்கப்படுகிறது. அழகு சாதன கிரீம்களிலும், பருவை போக்கும் கிரீம்களிலும் பயன்படுத்தப்படுகிறது. வேப்ப எண்ணெய் முகத்தின் ஈரப்பதத்தை தக்கவைக்கும் மிகச்சிறந்த பொருளாக திகழ்கிறது.

**தெய்வீக மூலிகை துளசி**

பெரும்பாலான வீடுகளின் கொல்லைப் புறங்களில் துளசிச் செடியை வைத்திருப்பார்கள். இது இயற்கையான அழகு சாதனப் பொருளாகவும் பயன்படுகிறது. சில துளசி இலைகளை பறித்து அதனுடன் சில துளிகள் பால் விட்டு அரைத்து முகத்தில் பரு உள்ள இடங்களில் பூசினால் பரு இருந்த இடம் காணாமல் போய்விடும். வடுக்களும் மறைந்து விடும்.



**மஞ்சளும், சந்தனமும்**

மஞ்சள் இந்திய சமையலில் மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. அது மிகச்சிறந்த அழகு சாதனப் பொருளாகவும் பயன்படுகிறது. மண நாளில் பெண்ணின் கன்னத்திலும் கைகளிலும் தோளிலும் மஞ்சளை பூசி குளிக்க வைப்பார்கள். இதனால் பெண்ணின் முகம் மெருகேறும்.

அதேபோல் கண்ணுக்குக் கீழே ஏற்படும் கருவளையத்தையும், சுருக்கத்தையும் மஞ்சள் போக்கி விடும் என்கின்றனர் நிபுணர்கள். ஒரு சிட்டிகை மஞ்சளுடன் சில துளிகள் பால் சேர்த்து கண்ணின் கருவளையம் உள்ள பகுதிகளில் பூசினால் கருவளையத்துக்கு குட்பை சொல்லிவிடலாம்.

முகத்தில் சந்தனம் பூசுவதன் மூலம் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இது அலர்ஜி, தோல் நோய்களைப் போக்கும் அருமருந்தாக செயல்படுகிறது.

**குங்குமப்பூவும் தேனும்**

குங்குமப்பூ சிறந்த அழகு சாதனப் பொருளாகத் திகழ்கிறது. சருமத்தின் நிறத்தையே மாற்றும் சர்வ வல்லமை படைத்தது. சருமத்தில் பாக்டீரியா நோய் தாக்குதல் இருந்தாலும் இதனை போக்கிவிடும்.

தேன் சருமத்தின் அழகை தக்க வைக்கும். இது இனிப்பான உணவுப் பொருளாக இருந்தாலும் பேஸ்பேக் போடுவதில் பயன்படுகிறது. பாலுடன் தேன் கலந்து பேக் போடுவதன் மூலம் சருமம் பொலிவுறும். இதில் உள்ள ஆன்டி ஒக்ஸைட் சரும அழகை பாதுகாக்கிறது. அழகு சாதனப் பொருள்களில் தேன் கண்டிப்பாக இடம் பெற்றிருக்கும்.

## அடிக்கடி கிறீம் போடாதீர்கள்!

முகத்துக்கு அடிக்கடி கிரீம் பயன்படுத்துவதை தவிர்க்கவும். அது முகத்தசைகளின் மென்மையை போக்கி விடும். அதுபோல் அதிகமாக பரு இருப்பவர்கள் பேஷியல் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

வெந்தயத்தை விழுதாக அரைத்துத் தலையில் தடவி பின்னர் அலசும்போது எலுமிச்சை சாறை தண்ணீரில் சேர்த்து அந்த தண்ணீரைக் கொண்டு அலசினால் முடி பளபளப்பாக இருக்கும்.

நல்லெண்ணெயில் மருதாணி இலைகளை கலந்து பின்பு அதனை வடிகட்டி தலையில் தடவி வந்தால் நரை நாளடைவில் மறையும்.

மருதாணி இலைகளை விழுதாக அரைத்து தலையில் தடவி ஊறவிட்டு பிறகு அலசி வந்தால் முடி மிருதுவாக இருக்கும்.

முகப் பருக்களைக் கட்டுப்படுத்த பன்னீர் உதவும். பன்னீரை முகத்தில் தேய்த்து ஊறவிட்டு கழுவி வந்தால் பருக்களின் அளவு குறையும்.

பாலேட்டில் அரிசி மா கலந்து தினமும் முகத்தில் தடவி வந்தால் முகம் மெருகேறும்.

முக சுருக்கத்தை போக்க விளக்கெண்ணெயால் மசாஜ் செய்யவும்.





## சருமத்தை இயற்கையாகப் பராமரியுங்கள்

மழைக் காலத்தில் காற்று ஈரப்பதத்துடன் இருப்பதால் நமது சருமம் விரைவில் வறண்டு இயற்கையான பொலிவை இழந்து விடுகிறது. ஆனால், இயற்கையான அழகைத் தக்கவைப்பது இப்போது மிகவும் சுலபமானதுதான். சருமத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதுடன், தவறாமல் க்ளென்சிங், டோனிங் மற்றும் மாய்ஸ்சரைசிங் செய்தால் போதும்.

இவை மூன்றையும் செய்வதற்கு நேரமில்லாதவர்கள் க்ளென்சிங் மற்றும் மாய்ஸ்சரைசிங் உடன் வாரம் ஒரு நாள் ஸ்கிரப்பிங் செய்ய வேண்டும். ஸ்கிரப்பிங் செய்வது இறந்த செல்களை நீக்கி சருமத்தைப் பொலிவாக வைத்திருக்கும்.

மேலும் சருமத்தைப் பராமரிப்பதற்கான அழகுக் குறிப்புகளில் சில:-

தினமும் மிதமான தண்ணீரில் குளிப்பது சருமத்தைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவும்.

உதட்டில் வெடிப்பு ஏற்படாமல் இருக்க பாலேடு அல்லது உப்பில்லாத வெண்ணெயைத் தடவி வரலாம்.

ஒலிவ் எண்ணெயில் சிறிதளவு சர்க்கரையைக் கலந்து, பழைய டூத்பிரஷ் உபயோகித்து உதட்டில் தேய்த்தால், உதட்டில் இறந்த செல்கள் நீங்கி வழுவழுப்பாகும். இது ஒரு சிறந்த லிப் ஸ்க்ரப் ஆகும்.

பாத்திரம் கழுவியவுடன், நகங்களில் சிறிதளவு ஒலிவ் எண்ணெய் தடவினால் நகங்கள் உடைவதைத் தவிர்க்கலாம்.



வெளியே சென்று வீடு திரும்பியவுடன், கால்களை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து ஈரம் இல்லாமல் துடைத்து விட்டு பின்னர் மாய்ஸ்சரை தடவவேண்டும். கால்கள் புதுப்பொலிவு பெறும்.

குளித்த பின், சிறிதளவு க்ளிசரினுடன் பன்னீரைக் கலந்து கைகளில் தேய்த்தால், நாள் முழுவதும் கைகள் பளபளப்பாகவும் மென்மையாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org